www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

ஜனவரி - 2005
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00



# ஜெகத்குரு

## ஸ்ரீ ஜெயலலிதேந்திர ஸரஸ்வதி

படிப்பகம்

www.padippakam.com

'காலச்சுவடு' டிசம்பர்'04 இதழில் ஜெயேந்திரர் கைது குறித்து ஒரு தலையங்கம் எழுதியிருந்தது. அதில் இறுதியாக,

*''.... சங்கர மடத்திற்கும் அதன் பக்தர்களுக்கும் ஒரு வார்த்தை. மடம் இன்று சந்தி சிரிக்கிறதென்றால் அதற்குக் காரணம் மடம் நடந்து வரும் விதம் தான்.... ஜெயேந்திரரை ஓரங்கட்டிவிட்டு விஜயேந்திரரின் தலைமையில் மடம் தனது வழக்கமான போக்கில் செயல்படுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. தனிநபரை மாற்றிவிட்டால் எல்லாம் சரியாகி விடாது. மடத்தை உண்மையான சமய - ஆன்மீக அமைப்பாக மாற்றுவதற்கான போராட்டத்தை அவர்கள் மேற்கொள்வதே மடத்தின்பால் அக்கறை கொண்டவர்களின் முயற்சியாக இருக்க முடியும்.*

*அப்புக்களும் ரகசிய செல்பேசிகளும் தேவைப்படாத அமைப்பாக இயங்குவதற்கான சாத்தியங்களைப் பற்றி அவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். இதற்கு, ஜெயேந்திரரையும் அவரது அரசியல் நடவடிக்கைகளையும் தாண்டிச் செல்லும் மனவலிமையை மடமும் அதன் பக்தர்களும் பெறவேண்டும். மடத்தின் நடவடிக்கைகளை வெளிப்படையானதாக ஆக்குவதன் மூலம் பொதுமக்களின் கண்காணிப்பு என்ற பாதுகாப்புக் கவசத்தைப் பெற முடியும்.*

*எல்லாவற்றுக்கும் மேலாக, சாதி அமைப்பு மற்றும் பெண்கள் குறித்த பார்வை ஆகியவற்றை மறுபரீசிலனை செய்து காலத்திற்கேற்ப தன்னைப் புதுப்பித்துக் கொள்ளவும் தயாராக வேண்டும். இதன் மூலம் ஒரு குறிப்பிட்ட சாதி சம்பிரதாய வட்டத்தைத் தாண்டிப் பரவலான அளவில் சமூகத்தின் நன்மதிப்பையும் ஆதரவையும் பெற முடியும். இவற்றையெல்லாம் செய்யத் தவறினால் இது போன்ற மடங்கள் விரைவில் அருங்காட்சியகத்தின் ஓர் அங்கமாக மாறுவதைத் தவிர்க்க இயலாது''*

— என்று 'பொறுப்புணர்வுடன்' எழுதியிருந்தது.

காலச்சுவடை பார்ப்பனியத்தின் இலக்கியப் பத்திரிக்கை என்று நாங்கள் அழைப்பதை குறுகிய - தட்டையான - விசமத்தனமான - அவதூறான பார்வை என்று காலச்சுவடு உண்மையாகவே கருதக்கூடும். அது உண்மையானால், உண்மைகள், பலவிதம் ஒவ்வொன்றும் ஒரு விதம் என்று மழுப்பாமல், பசப்பாமல், நழுவாமல் கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டும்.

## ஜெயேந்திரர் ஜெயில் விஜயம்:



# காலச்சுவடு வழங்கும் அருள்வாக்கு

1. மடம் சந்தி சிரிப்பதைக் கண்டு பலரும் மகிழும்போது, காலச்சுவடு மடத்துப் பக்தர்களின் துக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டு ஆறுதலும், ஆலோசனையும் சொல்வது ஏன்?

2. உழைக்கும் மக்களுக்கெதிரான சங்கர மடத்தை இழுத்து மூட வேண்டுமென ஒரு சாரார் பெரும்பான்மை மக்களிடத்தில் பிரச்சாரம் செய்யும்போது, சங்கரமடத்தைப் புனரமைக்குமாறு பார்ப்பனர்களிடம் காலச்சுவடு கோரிக்கை வைப்பது ஏன்?

3. மடத்தை உண்மையான சமய - ஆன்மீக அமைப்பாக மாற்ற வேண்டும் என்பதன் விளக்கம், இலக்கணம், வழிமுறை, திட்டம் என்ன? இன்று அத்தகைய உண்மை ஆன்மீகம் ஏதேனும் ஒன்று எங்கே என்ன செய்து கொண்டிருக்கிறது என்று எடுத்துக் காட்ட முடியுமா? '2500 ஆண்டு வரலாறு' கொண்ட சங்கர மடம் எப்போது முதல் பொய்மையான ஆன்மீக அமைப்பாக மாறியது என்பதை விளக்க முடியுமா?

4. பார்ப்பன இந்து மதம் - மடங்களின் உண்மையே அவற்றின் மக்கள் விரோதமும், பொய்மையும்தான் என அம்பேத்கர், பெரியார் முதல் பொதுவுடைமையர் வரை பிரச்சாரம் செய்தனர்; செய்கின்றனர். இது குறித்து காலச்சுவடின் கருத்தென்ன?

5. அப்பு, ரகசிய செல்பேசி கிடக்கட்டும். அம்பானி, பிர்லா, அப்துல்கலாம், சேஷன் போன்றோர் வருவதும், கோடி கோடியாய் நன்கொடை கொடுப்பதும் பற்றி உங்கள் கருத்தென்ன? நன்கொடை, அரசியல் - தொழில் தரகு பேரங்களின்றி சங்கரமடம் எப்படி இயங்க முடியும்?

6. அப்புவின் அதே தொழில் நேர்த்தி விரிந்தும், பரந்தும், தேசிய அளவிலும், மனவெளி அளவிலும், ஆரவாரமாகவும், அமைதியாகவும், தட்டையாகவும், நுட்பமாகவும் முதலாளிகள், அதிகாரிகள், ஆளும் வர்க்க அரசியல்வாதிகள்... ஏன் சிறு பத்திரிக்கைச் செயல்பாடுகளிலும் கூட இல்லை என்று சொல்ல முடியுமா?

7. அப்பு என்ற 'லோ கிளாஸ் தாதா' சங்கராச்சாரியின் பக்தராக விரும்பும் உரிமையை மறுப்பதும், கேவலப்படுத்துவதும் உங்கள் கண்ணோட்டத்தின் படி பாசிசமில்லையா?

8. 120 டிரஸ்டுகள், நாடு முழுவதும் கிளை மடங்கள், பல்லாயிரம் ஏக்கர் விளைநிலங்கள், பலகோடி மதிப்புள்ள ரியல் எஸ்டேட் நிலங்கள், நட்சத்திர மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரிகள் மொத்தத்தில் 6000 கோடி முதலாளியான காஞ்சி மடம் வெளிப்படையாக இயங்குவதும், பொதுமக்களின் கண்காணிப்புக்கு உட்படுவதும் எப்படி என்ற அந்தச் சாணக்கிய தந்திரத்தை விளக்க முடியுமா?

9. ஜெயேந்திரரின் கைதை எதிர்த்து வெறிகொண்டு எழுதும் தினமலருக்கும், காஞ்சி மட நடவடிக்கைகளுக்கு பல்வேறு விதங்களில் ஸ்பான்சர் செய்யும் ஸ்ரீராம் சிட் பண்ட் நிறுவனத்திற்கும் காலச்சுவடுடன் உள்ள விளம்பரம் அல்லது புரவலர் தொடர்பை வெளிப்படுத்த முடியுமா? குறைந்த பட்சம் காலச்சுவடின் வாசகர் கண்காணிப்புக்கு உட்படுத்த முடியுமா?

10. ''சாதி அமைப்பு, பெண்கள் குறித்து மறுபரிசீலனை செய்து காலத்திற்கேற்றவாறு காஞ்சி மடம் புதுப்பித்துக் கொள்வது'' என்பதை ஒரு தலித் சங்கராச்சாரியாக்கப்பட வேண்டும், ஒரு பெண் ஸ்ரீ காரியத்திற்கும், ஒரு சூத்திரர் மடமேலாளர் பதவிக்கும் நியமிக்கப்பட வேண்டும் என்பதாக நாங்கள் அர்த்தப்படுத்தலாமா?

11. இவை நடைமுறை சாத்தியமற்ற மிகக் கடுமையான கோரிக்கைகள், ஏதோ கொஞ்சம் தலித்துக்கள், விளிம்பு நிலை மக்கள் பெண்களோடு மடம் நெருக்கமாக்கிக் கொள்ள வேண்

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

## சுனாமியில் ஒளியும்
# கொலைக் குற்றவாளிகள்!

"இது தகவல் யுகம்; உலகம் சுருங்கி விட்டது" என்று அமெரிக்காவில் பிறக்க விரும்பும் எந்த வெள்ளைப் பன்றியாவது பேசினால் மலம் தோய்த்த செருப்பால் முகத்தில் இறுக்குங்கள். "இந்தியா வல்லரசாகப் போகிறது" என்று பேசுபவன் எவனாக இருந்தாலும் அவனை விளக்குமாறால் அறையுங்கள். மூன்று மணி நேரத்தில் வந்து சேர முடியாத சுனாமி அழிவு குறித்த தகவல்! மூன்று நாட்களுக்குப் பின்னரும் பிணங்களை அடக்கம் செய்ய முடியாத அரசு!

பத்தாயிரம் மனித உயிர்கள் குப்பையைப் போல் அள்ளி வீசப்பட்டு, அவர்களது சடலத்தை நாயும் நரியும் தின்னும் கோரக் காட்சியைக் கண்டபின்னரும் குற்றவுணர்வு கொள்ளாத இவர்களது இதயம் துப்பாக்கி ரவைகளால் பிய்த்தெறியப்பட வேண்டும். விஞ்ஞானிகள், செயற்கைக் கோள்கள், டஜன் கணக்கிலான ஆய்வு நிலையங்கள்...! அந்தமானில் நிலநடுக்கம், நிகோபார் மூழ்குகிறது எனத் தெரிந்த பின்னரும் 2 மணி நேரம் தகவல் தராத கடற்படை, அலட்சியம் காட்டிய ஆய்வு நிலையங்கள்! யார் முகத்திலும் துயரமில்லை; யாருடைய சொல்லிலும் பொறுப்புணர்ச்சி இல்லை. "கொஞ்சம் கவனக்குறைவாக இருந்து விட்டோம்" என்று சட்டையில் தேநீர் சிந்தியதற்கு 'வருந்தும்' தொனியில் பேசுகிறார்களே, இவர்களுடைய திமிர் எங்கிருந்து வந்தது?

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இடம் பிடிக்க அமெரிக்காவின் காலை நக்கும் அத்வானி முதலான அத்தனைப் பேரில் யாராவது சுனாமி எச்சரிக்கைக் கவுன்சிலில் இந்தியா இடம் பெறுவது குறித்து சிந்தித்ததுண்டா? சுயவிளம்பர மோகி 'அக்னி' கலாம் தன்னுடைய அறிவியல் மேதைமையை எந்த ஏவுகணையில் வைத்துப் பறக்க விட்டிருக்கிறார்? "சுனாமி விசயத்தில் எங்களுக்குப் போதிய முன் அனுபவமில்லை" என்று பேசிவிட்டு தயாநிதி மாறனும், மணிசங்கர் அய்யரும் தமிழகத்திலிருந்து தப்பித்துச் சென்றதெப்படி? இந்த நாட்டில் முடிவே இல்லாமல் வெள்ளமும் வறட்சியும் மக்களைக் காவு கொள்ளக் காரணம் முன் அனுபவமின்மையா? 5 நாட்களுக்குப் பின்னரும் அகதிகளைத் திரும்பிப் பாராதது அரசு எந்திரத்தின் முன் அனுபவமின்மையா? மரணத்தைத் தம் சொந்த முன் அனுபவத்தில் உணர்ந்து கொள்ள விரும்பும் மந்திரிகள் மக்களிடம் விண்ணப்பிக்கட்டும். பிரிவாற்றாமையின் துயரை, பட்டுத் தெரிந்துகொள்ள விழையும் இந்தப் பதர்கள் தம் சொந்தச் சுற்றத்தை அக்கரைப் பட்டியில் பிணந்தின்ன அலையும் ஓநாய்களிடம் விட்டு ஒத்திகை பார்க்கட்டும்.

ஒரு லட்சம் கொடுத்தால் மரணம் மறந்துவிடுமா? யாருடைய வரிப்பணத்தில் யார் கருணைத் தொகை வழங்குவது? மக்களின் கையை வெட்டி மக்களுக்கே சூப் வழங்குகிறார்களே, இந்த மோசடிக்கு என்ன முடிவு? மறுவாழ்வாம், கடனுதவியாம்! என்ன சொல்ல வருகிறார்கள் தெரிகிறதா? சுனாமி, மீனவனின் சொந்தப் பிரச்சினை என்கிறார்கள். எனில் இந்தக் கடன் மீனவனின் கவனக் குறைவுக்கு வழங்கப்படும் தண்டனையா, மன்னிப்பா? ஒரிசாவைத் தாக்கிய கடல் கொந்தளிப்பில் பாதிக்கப்பட்ட அமெரிக்க மின் நிலையம் 300 கோடி இழப்பீடு அல்லது ஒரு யூனிட் மின்சாரத்திற்கு 10 ரூபாய் என்று அரசிடம் பேரம் பேசியதை யாரும் மறக்க வில்லை. இயற்கையின் சீற்றம் கிடக்கட்டும்; செயற்கையின் சீற்றங்களான முதலாளித்துவப் பொருளாதார நெருக்கடி ஒவ்வொன்றுக்கும் மக்களின் தாலியறுத்துச் சேர்த்த வரிப்பணத்தில் முதலாளிகளுக்கு வழங்கப்படும் மானியம் எத்தனை ஆயிரம் கோடி? இந்த அநீதிக்குத் தலைவணங்க மக்கள் ஏமாளிகளல்லர்.

ரிக்டர் அளவுகோலில் 9 புள்ளிகளைத் தாண்டிய இந்தக் கொடிய நிலநடுக்கம் பூமியில் நடந்திருந்தால் இந்தியாவே தரைமட்டமாகியிருக்கும் என்கிறார்களே வல்லுநர்கள், அந்த நடுக்கத்தை எதிர்கொண்டு சுனாமி அலையில் உயிர்விட்ட மீனவ மக்களுக்கு இந்த நாட்டின் 100 கோடி மக்களும் கடமைப்பட்டவர்கள். அவர்கள் வடிக்கும் கண்ணீர் இந்தத் தேசமே வடித்திருக்க வேண்டிய கண்ணீர். இந்த மரணம் நம்மைக் காப்பதற்கு மீனவ மக்கள் தந்த தன்னுணர்வற்ற களப்பலி. பலிகடாக்களைக் கூண்டிலேற்றி, குற்றவாளிகள் விரல் நீட்டுகிறார்கள். நீட்டிய அந்தக் கரம் முறிக்கப்படும் வரை, 'அசட்டை, அனுபவமின்மை' என்ற சொற்களில் ஒளிந்து கொண்டு அவர்கள் நமக்கே உபதேசம் செய்ய அனுமதிக்கப்படும் வரை, இந்தக் கொடிய கேலிக்கூத்து முடிவடையாது. மரணத்தின் இந்தக் கோர தாண்டவத்திற்குப் பொறுப்பான ஒவ்வொரு அதிகாரியும், விஞ்ஞானியும், அமைச்சரும் அனைவரும் கூண்டிலேறிப் பதில் சொல்ல வேண்டும்.

இது அரசியலாக்கப்படக் கூடாத மனித குலத் துயரமல்ல; குப்பங்கள்தான் மூழ்கியிருக்கின்றன; கடலோரம் மாமல்லபுரச் சாலையில் மின்னும் மாளிகைகள் அல்ல. அங்கே ஒரு பிணம் இல்லை. ஒரு சொட்டுக் கண்ணீரில்லை. சுனாமியின் அலைகளைப் போலவே வர்க்க வேறுபாட்டின் கோரதாண்டவத்தை இதோ, கண்முன்னே காண்கிறோம். இயற்கையுடன் போராடிக் களைத்து விட்டார்கள் மீனவ மக்கள். வாழ்வின் போராட்டமனைத்தையும் சில மணித்துளிகளில் நடத்தித் துவண்டு வீழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் சற்று ஓய்வெடுக்கட்டும். போராட்டத்தை நாம் தொடங்குவோம். சுனாமிப் பேரலை நிலத்திலிருந்தும் எழும் என்ற அனுபவத்தை எதிரிகளுக்குக் கற்றுக் கொடுப்போம்! ●


கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

● புதிய கலாச்சாரம்

● மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

● போர்: **22**
● குரல்: **4-5-6-7**
● அக் '04 - ஜன '05

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா: US$ 9

சந்தா, படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்:



இரா. சீனிவாசன்,
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-ஆவது நிழற்சாலை,
15-ஆவது தெரு அருகே,
அசோக் நகர், சென்னை-600 083.

தொலைபேசி: 044-23718706

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@rediffmail.com



அலுவலக நேரம்:
காலை 10 முதல் 5 மணி வரை
ஞாயிறு விடுமுறை

*அட்டை ஓவியங்கள்:*
*முகிலன்*

*அட்டை வடிவமைப்பு:*
*ஸ்பார்ட்டகஸ்*


படிப்பகம்

www.padippakam.com



# மயானம்

**வி**ரைத்துக் கிடக்கும் பிள்ளையைக் கையிலேந்தியபடி "மயிலோ... மயிலோ" ("என் பிள்ளை... என் பிள்ளை") எனக் கதறுகிறாள் இந்தோனேசிய மீனவப் பெண். "கடல் காத்தோட யம்மா... 12 வயசுப் பிள்ளையம்மா...." என்று உடைந்து அரற்றுகிறாள் அக்கரைப்பட்டியின் தாய்.

மீனவன் வெல்லமுடியாத இயற்கையை யார் வெல்வது? நாற்புறமும் கடல் சூழ தன்னந்தனியே கட்டுமரத்தில் நின்றபடி நாட்கணக்கில் அவர்கள் எதிர்கொண்ட மழைகள், புயல்கள், சூறாவளிகள் எத்தனை? பசி, தாகம், சோர்வு, உறக்கம் போன்ற உடலின் கோரிக்கைகளை, அச்சம், அருவெறுப்பு, துயரம் போன்ற உள்ளத்தின் தடுமாற்றங்களை வெல்லப் பழகியவர்கள் அவர்கள்.

குழந்தைகளின் சாவு கொடியதுதான். ஆனால் ஒரு கட்டையில் குதிரையேறி அலையில் மிதந்து வந்திறங்கும் அந்த மீன் குஞ்சுகளைப் பிணமாகக் காணும்போது நெஞ்சு வெடிக்கிறது. மனிதகுலத்தை நாகரிகத்திற்கு அறிமுகப்படுத்திய அந்த மழலை இனம் "ஐயா எங்களுக்கு உதவ யாருமே இல்லையா" என்று கதறுவதைக் காணும்போது கண்களில் நீர் திரள்கிறது.

செத்துக் கிடக்கும் மீன்களைப் போலவே இரைந்து கிடக்கின்றன அவர்களது உடல்கள் - தெருவில், புதரில், கூரையில், கருவேலங்காடுகளில்! அழுகிய மீன்களைக் கவ்வும் நாய்கள் அந்த உடல்களையும் கவ்வுகின்றன. கருவாட்டைப் போல அடுக்கிக் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன உடல்கள். மீனுக்கும் மீனவனுக்குமிடையிலான வேறுபாட்டை அந்த அலைகள் அறியாமலிருக்கலாம். நாம்?

மரணத்தைவிடக் கொடியது தப்பியவர்களின் வாழ்க்கை. கலங்கிய கண்களுடன் எச்சரிக்கைகளை மீறி கடலை நோக்கி விரைகிறார்கள் - பிணங்களைத் தேட. எந்த ஊரில், எந்தக் காட்டில் பிள்ளையின் உடலைத் தேடுவது, அல்லது எந்த மண்டபத்தில் அவன் உயிரை எதிர்பார்த்து ஓடுவது? சகோதரி மகளை எரித்துவிட்டு நொறுங்கிய வீட்டினருகே அதிகாரிகளுக்காகக் காத்திருக்கிறாள் ஒரு தாய் - நிவாரணம் பெறுவதற்கு நிரூபணம் காட்ட. அவர்களது வாழ்க்கையை இடிப்பதற்கு மட்டுமே விஜயம் செய்த புல்டோசர் இப்போது பிணம் தேட ஊர்ந்து வருகிறது.



குளச்சல் தேவாலயத்தில் புதைக்கத் தோண்டிய குழியிலேயே சுனாமியால் அடக்கம் செய்யப்பட்ட உடல்கள். சிதைத் தீயின் சூடு தாங்காமல் தீப்பிடித்து எரிகிறது நாகையின் மயானக் கூரை. மீனவர்களின் இறுதிப் பயணம் நகராட்சி குப்பை லாரியில். அவற்றைக் கடந்து விரைகின்றன கச்சிதமாய் அடுக்கப்பட்ட கோக் பெப்சி குளிர்பான வாகனங்கள்.

சுனாமியின் இரைச்சல் அடங்கி விட்டது; மீனவர்களின் கதறல் அடங்கி விட்டது; கொல்கிறது மவுனம். பள்ளிகள், அலுவலகங்கள், திரையரங்குகள் எல்லாம் இயங்குகின்றன. அதிகார பூர்வ துக்கம் இல்லை; இறங்க மறுக்கிறது தேசியக் கொடி; இரங்க மறுக்கிறது மக்கள் மனம்.

உண்மையான கண்ணீரைக் காணச் சலித்து சீரியல் கண்ணீருக்குத் தாவுகின்றன தொலைக்காட்சிக்கு இரையான பிணங்கள். ஊழல் நரி நரசிம்மராவின் பிணம் ஹுசேன் சாகர் ஏரிக்கரையில் சந்தனக் கட்டைகளால் மணக்க மணக்க எரியூட்டப்படுகிறது. அவரது தியாகங்கள், தந்திரங்கள், சாதனைகள், லீலைகள் என வாழ்க்கைக் குறிப்பு விரிகிறது. குறிப்புகள் ஏதுமற்ற மீனவர்களின் உடல் டயரோடு டயராக நடுத்தெருவில் எரிகிறது.

தேவனாம்பட்டினம், தாழங்குடா, கோடிக்குப்பம், மல்லினச் சேரி, குளச்சல், மணமேல்குடி எனக் கல்லறைகளின் பட்டியல் கிழக்குக் கடற்கரை முழுவதும் நீள்கிறது. அண்ணா சமாதி, எம்ஜிஆர் சமாதி போன்ற அலங்காரங்கள் வேண்டாம்; அடையாளம் கூட இல்லாமல் அழுகுகின்றன மீனவர்களின் உடல்கள்.

மீன்களின் பெயரைச் சப்புக் கொட்டத் தெரிந்த நாக்கில், அந்த மக்களின் உப்பைத் தின்று வளர்ந்த உடலில் - விசுவாசம் இல்லை.

ஆசிரியர்களும், மாணவர்களும், அலுவலர்களும், தொழிலாளர்களும் ஒவ்வொரு மாவட்டமும் திரண்டு நின்றிருந்தால் அந்த மக்கள் கடல், வங்கக் கடலுக்கு விடையாய் இருந்திருக்கும். பிள்ளையை இழந்து கதறும் தாய்மார்களை அரவணைக்கப் பெண்கள் சென்றிருந்தால், நாம் ஈரமுள்ளவர்கள் என்பதற்கு அது சான்றாய் இருந்திருக்கும். ஐந்து நாட்களாகியும் அசையாத அரசு எந்திரத்தை அசைக்கப் போராடியிருந்தால், நாம் மனிதர்கள் என்பதை நாமே

"மயிலோ... மயிலோ..."

"என்ன பெத்த அம்மா... என்ன பெத்த தங்கம்..."



படிப்பகம்

www.padippakam.com



புரிந்து கொண்டிருக்க முடியும்.

சுனாமி உயிரற்ற இயற்கை. நாம் அதன்மீது ஏற்றிச் சொல்லும் மனிதப் பண்பு - சீற்றம். நாம் உயிரும் உணர்வும் உள்ள மனிதர்கள். மவுனம் - நம் மீது படர்ந்திருக்கும் மரணம்!

●

# கருணை

அடக்குமுறையை எதிர்கொள்வது கவுரவமானது. ஆளும் வர்க்கத்தின் கருணை எனும் மலத்தை விழுங்க நேர்வது கொடுமையானது. அந்தக் கருணையின் உட்பொருளை அறிந்தவர்களுக்கோ, அது கற்பழிப்பை ஏற்று அனுபவிக்கக் கோரும் கொடுமைக்கு நிகரானது.

சத்திரமும் சாவடியும் திருவிழாக் கூழும் நிறைந்த நம் வள்ளல் மரபு மீனவர்களையும் தன் கருணைப் பார்வையிலிருந்து தப்பவிடவில்லை. அரசியல்வாதிகளும், ஆன்மீகவாதிகளும், ஆலை முதலாளிகளும், நடிகர்களும் நன்கொடையைச் சொரிகிறார்கள். அந்தக் காசின் மதிப்புக்கும் பன்மடங்கு அதிகமாக அவர்கள் தேடிக் கொள்ளும் விளம்பரம் நமக்குப் பிரமிப்பூட்டுகிறது. நாளேடுகளில் பிணங்களின் அருகருகே வள்ளல் வேடமிட்ட பிணந்தின்னிகளின் முகங்கள். அவற்றில் அவர்கள் மறைத்துக் கொள்ள விரும்பாத தற்பெருமை; மறைத்துக் கொள்ள முடிகிற குற்றங்கள்!

இந்தத் தரும சிந்தனையின் தத்துவத்தை ஒரே வரியில் சொல்லிவிட்டது தினமணி: ''துரதிருஷ்டசாலிகளுக்கு அதிருஷ்டசாலிகள் உதவுவதன் மூலம் பேரழிவை வெல்லலாம்.'' துரதிருஷ்டசாலிகளை மொய்க்கிறார்கள் அதிருஷ்டசாலிகள்.

அரசுத் தொலைபேசித் துறையை ஏமாற்றி 500 கோடி கொள்ளையடித்த அம்பானிகளின் சொத்து ஒரு லட்சம் கோடி; அனில் அம்பானி வழங்கும் நிவாரணம் ஒரு கோடி. கடலைத் தமது மீன்பிடிக் கப்பல்களுக்கும், கடற்கரையைக் கேளிக்கை விடுதிகளுக்கும் விட்டுத்தரச் சொல்லும் 'மீனவ நண்பர்களான' இந்தியத் தரகுமுதலாளிகள் வீசும் எலும்பு 3.5 கோடி. குஜராத் நிலநடுக்கத்தின் அழிவை இனப்படுகொலையால் வென்று காட்டிய கொலைகாரன் மோடி 10 கோடி; பில்கேட்சுடன் கூட்டணி சேர்ந்திருக்கும் 'தேசியவாதி' இன்ஃபோசிஸ் நாராயணமூர்த்தி 5 கோடி; 1200 கோடி சொத்து வைத்திருக்கும் மதுரை ஆதீனத்தின் ஆன்மீக மொய் ஒரு லட்சம்; பத்தே ஆண்டுகளில் 1600 கோடி உலக சாம்ராச்சியத்தை உருவாக்கி ஆன்மீக உலகில் கின்னஸ் சாதனை படைத்த அமிருதானந்தமாயி வழங்கும் உணவு - மருத்துவ உதவி; படத்துக்கு 4 கோடி வாங்கும் விஜய்காந்தும், 2 கோடி வாங்கும் விஜய்யும் தலா 10 லட்சம்; மீனவர் குப்பத்தின் சண்டை நடிகர்களைப் 'புரட்டி எடுத்து' சுப்ரீம் ஸ்டாராக உயர்ந்த சரத்குமார் 250 மூட்டை அரிசி. அதிருஷ்டசாலிகளின் அணிவகுப்பு நீள்கிறது. நீண்டு கொண்டே போகிறது.



பெரும்பாக்கம் நிவாரண முகாமில் பாலுக்காகக் காத்திருக்கும் பிஞ்சுகள்.

'கொடுப்போர் எல்லாம் அதிருஷ்டசாலிகளே' என்பதால் அரசும் ஒரு அதிருஷ்டசாலி. சன் தொலைக்காட்சியின் ஒருநாள் வருவாயை வழங்கலாமென்று தன் பேரப்பிள்ளைகளுக்குச் சொல்ல முடியாத கருணாநிதி, வருமான வரி வருவாயில் ஒரு சதவீதத்தை நிவாரணத்துக்கு ஒதுக்குமாறு மன்மோகன் சிங்கிடம் கோருகிறார். அவரோ நன்கொடை தந்தால் வரி விலக்கு தருவதாக முதலாளிகளுக்கு ஆசை காட்டுகிறார். அதிருஷ்டசாலிகளிடம் அறவுணர்வைத் தூண்ட வேண்டுமானால், 'தரும சிந்தனை லாபகரமானது' என்பதை அவர்களுக்கு ஆதாரபூர்வமாக நிரூபிக்க வேண்டும்.

அன்பு, மனிதநேயம், தோழமை, தியாகம் போன்ற துரதிருஷ்டம் பிடித்த சொற்களால் அவர்களை ஏய்க்க முடியாது. ''ஒரு நாள் சம்பளத்தைக் கொடு'' என்று அரசு ஊழியர்களுக்கு உத்திரவிடுவதைப் போல ''ஒரு சதவீத லாபத்தைக் கொடு'' என்று முதலாளிகளுக்கு அரசு உத்திரவிட முடியாது. தங்கள் சொந்தப் பணத்தை மட்டுமல்ல, அரசுப் பணத்தை அள்ளி விடுவதையும் அதிருஷ்டசாலிகளால் சகித்துக் கொள்ள முடியாது.

''இந்தப் பேரழிவால் அரசின் நிதி நிலையில் எந்தப் பாதிப்பும் ஏற்படாது'' என்ற நிதியமைச்சரின் அறிவிப்பு, சங்கேத மொழியில் முதலாளிகளுக்குத் தரப்படும் தன்னிலை விளக்கம்.

சென்னைக்கும் நாகைக்கும் 2 நாட்கள் கழித்தே வந்தன இந்திய அரசின் மீட்புக் கப்பல்கள்; ஆனால், 26-ஆம்

**இந்தக் கோரதாண்டவத்திற்குப் பொறுப்பான அதிகாரிகள், விஞ்ஞானிகள், அமைச்சர்கள் அனைவரும் கூண்டிலேறிப் பதில் சொல்ல வேண்டும்!**



படிப்பகம்

www.padippakam.com



தேதியே இலங்கைக்கும் மாலத்தீவுக்கும் 4 கப்பல்கள் விரைந்ததன் காரணம், அயலாரை நேசிக்கும் அறமென்றா எண்ணுகிறீர்கள்? தற்போதுதான் கையெழுத்தாகியிருக்கிறது இந்திய - இலங்கை பாதுகாப்பு வர்த்தக ஒப்பந்தம். கையெழுத்திட்ட மை காய்வதற்குள் அடித்த சுனாமி அதிருஷ்டம் இலங்கையை நோக்கி அவர்களது கருணைப் பார்வையை விரைந்து திருப்புகிறது. இலங்கையின் பொருளாதார மறுநிர்மாணம்! எத்தகைய பொன்னான வாய்ப்பு! எனவேதான், நம்முடைய மீனவர்கள் தத்தளித்து மூழ்கிச் சாகும் அதேநேரத்தில், இந்தியக் கடற்படையின் நீர்மூழ்கும் வீரர்கள் இலங்கைக் கடலில் குதிக்கிறார்கள்.

தெளிந்த கடல்நீரும் மர்மமான பொருளாதாரமும் கொண்ட மாலத்தீவில் தான் என்ரான் உள்ளிட்ட பன்னாட்டு நிறுவனங்களின் பினாமி தலைமையகங்கள் இயங்குகின்றன. இந்தியத் தரகு முதலாளிகளின் சுற்றுலா மையமும், 'சுதேசி' சுவிஸ் வங்கியும் அந்த மர்மத் தீவில் தான் மையம் கொண்டிருக்கின்றன. மாலத்தீவின் மகிமை இது.

சுனாமி பலருக்கு அதிருஷ்டக் காற்று. நொறுங்கிய படகுகளை அள்ளுவதற்குள் புதுப்படகும் வலையும் வாங்கக் கடனுதவியை அறிவிக்கிறது பாரத ஸ்டேட் வங்கி. வட்டி விகித வீழ்ச்சியால் வங்கிகளில் தேங்கிக் கிடக்கும் பணம், குட்டிபோடக் கிடைத்த அரிய வாய்ப்பு. மீன் விற்ற காசு நாறவா செய்யும்? ஒரே கல்லில் மூன்று மாங்காய்! அரசு வங்கியின் தரும சிந்தனை நிலைநாட்டப்பட்டு விட்டது; 'சுனாமி மீனவனின் துரதிருஷ்டம்' என்ற தத்துவமும் நிலைநிறுத்தப்பட்டு விட்டது; அப்படியே மீனவனைத் தின்னும் இறால் பண்ணைகளுக்கும் கடனுதவி வழங்கி மீனவன் காலில் நங்கூரம் கட்டப்பட்டு விட்டது. 3000 கோடி அந்நியச் செலாவணி ஈட்டும் இறால் பண்ணைகளைப் புதுப்பிப்பதைவிடப் பெரிய தேசபக்தி நடவடிக்கை உண்டா என்ன?

''இந்தப் பேரழிவால் அரசின் நிதி நிலையில் பாதிப்பு இல்லை'' என்று கூறிய சிதம்பரம் ''ஆதாயம்தான் உண்டு'' என்ற உண்மையை நாகரிகம் கருதி மறைத்துவிட்டார் போலும்! 'பன்னாட்டு நிறுவனங்களின் பொருட்களை நுகரும் பொருளாதாரத் தகுதியற்றவர்கள்' என்ற முறையில் மீனவர்கள் இந்தப் பொருளாதாரத்திற்குத் தேவையற்றவர்கள்; 'பன்னாட்டு மீன் பிடிக் கப்பல்களுக்கு இடையூறு' என்ற முறையிலும் தேவையற்றவர்கள்; 'அழகான கடற்கரையோர சுற்றுலா விடுதிகள் காலூன்ற



நாகை: அனாதைகளுக்கு அரசின் 'மரியாதைமிக்க' விருந்தோம்பல்.

விடாமல் தடுக்கும் அசிங்கங்கள்' என்ற முறையிலும் இவர்கள் அவர்களுக்கு அப்புறப்படுத்தப்பட வேண்டியவர்கள்.

அதிருஷ்டசாலிகள் உலகெங்கிலுமிருக்கிறார்கள். சுனாமியை விஞ்சும் மரணப் பேரலையான அறிவுச் சொத்துடைமை எனும் கூர்வாளைத் (மருந்து விலையேற்றத்தை) தன் முதுகுக்குப் பின்னே மறைத்து வைத்துக் கொண்டு ''நான் உதவட்டுமா?'' என்று புன்னகைக்கிறார் புஷ். அது பிணங்களுக்கு நாய்கள் செய்யும் உதவி!

துரதிருஷ்டசாலிகளும் கூட உதவுகிறார்கள். திருவாரூரின் தலித் குடியிருப்பான அழகிரி நகரில் 45 மீனவக் குடும்பங்களைப் பராமரிக்கிறார்கள் அந்த ஏழை மக்கள். அம்மையப்பன் எனும் அருகாமைக் கிராமத்தில் 45 மீனவர்களைப் பராமரிக்கின்றன 3 குடும்பங்கள். கடலோரக் கிராமங்கள் பலவற்றிலும் இத்தகைய துரதிருஷ்டசாலிகள் நிறைந்திருக்கிறார்கள்.

அதிருஷ்டசாலிகள் தோற்றுவிக்கும் பேரழிவை எதிர்கொள்ள துரதிருஷ்டசாலிகளாகவே இருப்போம்!

•

# கவலை

''என்ன செய்வேன், என் மனைவியையும் குழந்தையையும் புதைக்க இடமில்லையே'' என்று கண்கலங்குகிறார் ஒரு முதியவர். சுற்றிலும் நட்சத்திர விடுதிகள், நீச்சல் குளங்கள், கேளிக்கை அரங்குகள். நொறுங்கிச் சிதைந்த போதிலும், அந்த இடங்கள் அழகானவை; தூய்மையானவை; அசுத்தமான ஏழை மக்கள் நுழைய முடியாதவை.

அந்த இடம் சுமத்திரா தீவு. சுனாமி அலைகள் முதலில் தாக்கிய நெற்றிப் பொட்டு. ஜாவா, சுமத்திரா, தாய்லாந்து, மலேசியா, மகாபலிபுரம், இலங்கை, மாலத்தீவுகள் என எல்லா இடங்களுக்குமிடையில் ஒரு ஒற்றுமை உண்டு. சுனாமியால் தாக்கப்பட்டதல்ல அந்த ஒற்றுமை. கிழக்கிலிருந்து சுனாமி வந்து தாக்கு முன்னரே மேற்கிலிருந்து வரும் மேட்டுக்குடிச் சுற்றுலாப் பயணிகள் அந்த மண்ணின் மைந்தர்களுடைய வாழ்வையும் நிலத்தையும் தாக்கிச் சூறையாடிவிட்டார்கள். வசிக்கும் மக்க

**நாளேடுகளில், பிணங்களின் அருகருகே வள்ளல் வேடமிட்ட பிணந்தின்னிகளின் கூச்சல்.**



படிப்பகம்

www.padippakam.com


ளின் கையிலிருந்து ரசிக்கும் கனவான்களின் பைக்கு மாறி விட்டது, அந்த மண். இதோ, புதைக்க இடமில்லாமல் தன் சொந்த மண்ணில் காத்து நிற்கிறார் அந்த முதியவர்.



இலங்கை: பற்றிக்கொள்ள, குடும்பமோ வாழ்க்கையோ எதுவுமில்லை.

மரத்தில் தொங்கும் கார்கள், கூரையில் ஏறிய படகுகள் போன்ற அழிவின் 'கவர்ச்சி'க் காட்சிகளுடன் போட்டியிட முடியாத மீனவப் பிணங்கள் பின்புலத்தில் நகருகின்றன. சுற்றுலாப் பயணிகளின் நிலை எண்ணிப் பதறுகின்றன, அரசுகள். சுனாமி தாக்கிய அந்தத் தருணத்தில், சனியன் பிடித்த தெற்கு, தென்கிழக்காசிய நாடுகளில் சிக்கிக் கொண்ட 10,000 பிரிட்டிஷ் சுற்றுலாப் பயணிகளை எண்ணி உருகுகிறது பி.பி.சி. தொலைக்காட்சி. பாஸ்போர்ட் தொலைத்த அமெரிக்க ஐரோப்பியப் பயணிகளுக்காக புதிய அலுவலகங்கள் மின்னல் வேகத்தில் திறக்கப்படுகின்றன.

யானைகளின் தேசமாக நமக்கு அறிமுகப்படுத்தப்பட்ட தாய்லாந்திலும் அழிவு! மக்களைப் புள்ளி விவரங்களாகவும், கடல் சறுக்கு விளையாடிச் செத்த மன்னனின் பேரனை 'சுற்றுலாத் தியாகி'யாகவும் நமக்கு அறிமுகப்படுத்துகிறார் அந்நாட்டின் பிரதமர்.

அந்தமானின் கறுப்பினப் பழங்குடி மக்களின் கதி மூன்று நாட்களுக்குப் பின்னரும் தெரியவில்லை. அவர்கள் பழைய புகைப்படங்கள் மூலம் நமக்கு அறிமுகப்படுத்தப்படுகிறார்கள். சுற்றுலாப் பயணிகளோ நேரடி ஒளிபரப்பில். இந்தியன் ஏர்லைன்சின் மீட்பு விமானத்திற்குள் தாவி ஏறுகிறார்கள், சுற்றுலாப் பயணிகள். குளச்சலில் புதைந்து இறந்த 1000 மீனவர்களைக் காட்டிலும், விவேகானந்தர் பாறையில் சிக்கிக் கொண்ட 500 சுற்றுலாப் பயணிகள் குறித்த கவலையே காமெராக்களின் பெருங்கவலை!

விலைமாதர்களும், குழந்தை விபச்சாரமும், மசாஜ் பார்லர்களும், சர்வ தேச உணவு வகைகளைச் சமைக்கும் கலைஞர்களும், ராக்-பாப் இசைக்கலைஞர்களும் நடனக் கலைஞர்களும், ஷாருக்கானுக்கு கேளிக்கை அரங்கத்தை நொடிப் பொழுதில் நிர்மாணிக்கும் தொழில்நுட்ப வல்லுனர்களும் நிறைந்த இலங்கையில் போதிய மருத்துவர்களும் நர்சுகளும் இல்லை. உதவி கோருகிறார் சந்திரிகா; வேண்டுகோள் விடுகிறார் தாய்லாந்து பிரதமர்.

சென்னை அருகிலுள்ள ஃபிஷர் மேன் கோவ், டெம்பிள் பே, எம்.ஜி.எம். பீச் ரிசார்ட் ஆகியவற்றுக்கு நேர்ந்த சேதம் பற்றிக் கவலை வெளியிடும் எகனாமிக் டைம்ஸ் நாளேட்டின் வாயிலாக சுற்றுலா நிவாரணத்துக்கு அடிபோடுகிறார்கள் முதலாளிகள். பொக்லைன் எந்திரங்களும், தேவாரமும் தேவைப்படாமலேயே மெரினாவின் மீனவர்களைச் சுத்தம் செய்து தந்த இறையருளை எண்ணி அவர்கள் இரகசியமாக மகிழக் கூடும். மீனவர்களற்ற மெரினா அவர்கள் கனவில் விரியக் கூடும். ஆண்டுக்கு 3,21,329 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும், 3000 கோடி அந்நியச் செலாவணியும் வழங்கும் குழந்தை விபச்சார மையமான கோவாவை மேற்குக் கரையில் படைத்த இறைவனுக்கு அவர்கள் நன்றி சொல்லவும் கூடும்.

கடலில் விளையாடும் சுற்றுலாப் பயணிகளைக் காப்பாற்றுவதையே கதையாகக் கொண்ட 'பே வாட்ச்' என்ற அமெரிக்கத் தொலைக்காட்சித் தாடர் இதோ நம் கண் முன்னே உயிர் பெற்று ஓடுகிறது.

அந்தத் தொடரின் நாயகி பமீலா ஆண்டர்சனின் கொழுத்த மார்பகங்கள், பருத்த தொடைகள், தாய்லாந்தின் அலைச்சறுக்கு, இலங்கையின் கடல் கோல்ஃப், பாங்காக்கின் மசாஜ் பார்லர்கள், குமரியின் சூரிய உதயம், எலியட்ஸ் கடற்கரையின் உயர்குடிக் காதலர்கள், மகாபலிபுரத்தின் விபச்சார மாளிகைகள்...

தனது வற்றிப் போன மார்பே பிய்ந்து சிதறும்படி அடித்துக் கொண்டு கதறும் கடலூரின் மீனவப் பெண்; சுமத்திராவின் கடலோரம் இன்னும் காத்து நிற்கும் அந்த முதியவர்.

இவை இருவேறு உலகங்களல்ல; எதிரெதிர் உலகங்கள். நமது அழிகியலும் ரசனையும் அறிவைக் காவு கொள்ளும் தருணமிது. கவனியுங்கள்!

கட்டுமரத்தின் பின்புலத்தில் குமரியின் சூரிய உதயம்; வலை பிரிக்கும் மீனவனின் பின்புலத்தில் பரந்து கிடக்கும் மெரினா! பழங்குடி மக்களின் கறுப் பழகை ஜொலிக்க வைக்கும் அந்தமானின் நீலப் பெருங்கடல். ரசனைகளும் வேறுபடும்போது கவலைகள் வேறுபடும். கண்ணீரும் வேறுபடும்.

இயற்கை, எழில், அலை, கடல், இன்பச் சுற்றுலா குறித்த உங்கள் மனப் பதிவுகளனைத்தையும், அந்த மீனவப் பெண்ணின் கண்ணீரால் அழுந்தத் துடைத்துவிட்டுப் பாருங்கள்! அழகியல் மயக்கங்கள் தெளியும்; அதன் பின்னுள்ள ஆளும் வர்க்க 'கவலைகளின்' உட்பொருள் புரியும். ●

**சுனாமி அழிக்குமுன்னரே தெற்காசியாவை மேற்குலகின் சுற்றுலா சூறையாடி விட்டது.**


படிப்பகம்

www.padippakam.com

# பதிவு செய்தல்

**கே**தம் (துக்கம்) கேட்பது நமது மரபு. அதுவே துக்கத்தின் சுவடேயில்லாத சம்பிரதாயமாக மாறும் போது?

ஆனால், ஆறுதலுக்காக ஏங்கித் தவிக்கும் இந்த மக்கள்? இப்படியொரு நாடகத்தை அவர்கள் கண்டதில்லை. ''என்னைப் பெத்த அம்மா'' என்று ஊரான் பிள்ளைகளைக் கட்டியழும் அந்தப் பெண்கள், கண்ணீரில்லாமல் உதடு துடிக்காமல் கூறப்படும் ஆறுதலைக் கேட்டதில்லை.

இது சாத்தியமா? சாத்தியம்தான். ஒரேநாளில் சென்னை, கடலூர், நாகை, குமரி என தமிழகத்துக்கே 'ஆறுதல்' கூறிவிட்டு போயஸ் தோட்டத்தில் வந்து இளைப்பாறுதல் சாத்தியம் என்று நிரூபித்திருக்கிறார் புரட்சித் தலைவி. ஹெலிகாப்டரின் சன்னல் வழியே கூட பூமியைக் குனிந்து பார்க்காமல், மருத்துவமனைப் படுக்கையில் துடிக்கும் மீனவர்களைக் குனிந்து பார்க்காமல் ஆறுதல் கூறுவதைச் சாத்தியமாக்கியிருக்கிறார் ஜெ.

சுனாமியை விஞ்சும் வேகத்தில் இந்தச் சுற்றுப் பயணத்தை ஏற்பாடு செய்திருக்கிறது அரசு எந்திரம். முதல்வரின் பாதுகாப்பு ஏற்பாடுகள், அவரது ஹெலிகாப்டர் வந்திறங்க ஓடுபாதை, தங்குவதற்கு அறை, ஆங்காங்கே கழிவறை வசதிகள், முதல்வருக்குப் பிடித்தமான உணவு, அஞ்சலி செலுத்தத் தேவையான பிணங்கள், அவற்றின் நாற்றத்தை அடக்க மருந்துப் பொடிகள், முதல்வர் ஆறுதல் கூறத் தேவையான அகதிகள், அவரை வரவேற்க ஆட்சியர்கள், போலீசு அதிகாரிகள், உயிருக்குப் போராடும் மக்களை உள்ளே விட்டுவிட்டு மருத்துவமனையின் வாயிலில் நின்று முதல்வரை வரவேற்கும் மருத்துவர்கள் - எல்லாம் தயார்!

மண்டபங்களில் தங்கியிருக்கும் அகதிகளுடன் கலந்திருந்து கைதட்டத் தேவையான தொண்டர்களும் தயார்! இத்தனைத் தயாரிப்புக்களை அரசு எந்திரம் செய்தபோதும் ஒரு சோகமான முகத்தைத் தயார் செய்து கொள்ள முதல்வரால் முடியவில்லை. ''ஒரு பெண் என்றும் பாராமல் என்னை அவமதித்து விட்டார்கள்'' என்று தமிழகத்தையே சுற்றி வந்து அழுது, தன் துயரத்தைத் தாய்க்குலத்தின் துயரமாக மாற்றிய அந்த நடிகைக்குக் கண்ணீர் வரவில்லை.



**இரு குழந்தைகளையும் இழந்த ஒரு குமரி மாவட்டத் தாய்.**

''உற்றார் உறவினரை இழந்தது கடவுள் செயல். மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள்'' என்றார். இந்த அருள் வாக்கை மக்கள் கேட்கச் செய்வதற்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்ட அதிகார வர்க்கத்தைச் சற்று அயர்ந்து கண்மூடக் கூட அனுமதிக்காமல் அடுத்தடுத்து வந்திறங்கினார்கள் அமைச்சர் பெருமக்கள். மாறன், மணிசங்கர், ப.சிதம்பரம், சிவராஜ் பாடில், சோனியா... அனைவருக்கும் இதே வகையான ஏற்பாடுகள்.

பிறகு சங்கராச்சாரி கைது எனும் தேசியப் பிரச்சினைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் அத்வானி இந்தப் பிராந்தியப் பிரச்சினைக்காகவும் வந்தார். அவருக்கும் இதே ஏற்பாடுகள்... பாதுகாப்புகள்! தலைவர்களின் துயரம் தொலைக்காட்சிகளிலும் பத்திரிக்கைகளிலும், மக்கள் மனதிலும் பதிவு செய்யப்பட்டு விட்டது. கேதம் கேட்கும் சம்பிரதாயம் முடிந்தது. அரசு எந்திரத்தின் நிவாரணப் பணி முடிந்தது. பிணம் கொத்தும் காக்கைகள் பறந்துவிட்டன.

கொல்வதற்கு மட்டுமே பயிற்றுவிக்கப்பட்டிருக்கும் போலீசு பிணங்களைத் தொடுவதில்லை. அழுகிய பிணங்களை அப்புறப்படுத்துவதற்காக விதிக்கப்பட்ட துப்புரவுத் தொழிலாளர்கள் இதற்காகவே பிற மாவட்டங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறார்கள். இராணுவம் அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து எல்லையைப் பாதுகாப்பதற்கானது; அதனை இயற்கையால் ஆக்கிரமிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பதற்காகக் களத்திலிறக்குவது தேசத்தின் பாதுகாப்பைக் கேள்விக்குள்ளாக்கி விடும். ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகத் தேர்தலின்போது முடுக்கிவிடப்படும் அரசு எந்திரம் ஜனங்களைப் பாதுகாக்கப் பயன்படுமாறு வடிவமைக்கப்படவில்லை. ஆசிரியர்கள் மக்கள் தொகையைக் கணக்கெடுக்கலாம், பிணங்களைக் கணக்கெடுக்க மாட்டார்கள். மரம் வளர்ப்புப் பிரச்சாரத்திற்கு மாணவர்களை இறக்கிவிடலாம். மக்களுடன் உறவாட விடுவது அவர்களை மனிதர்களாக மாற்றும் அபாயத்தில் அரசை இறக்கி விடும். லட்சக்கணக்கான தொண்டர்களைக் கொண்ட கட்சிகள் நிவாரணப் பணியிலிறங்குவதில்லை. அவர்கள் தொண்டு செய்யும் உணர்வற்ற தொண்டர்கள்.

இதுதான் துயரத்தின் உண்மைப் பதிவு. இதுதான் கண்ணீரில் கலந்திருக்கும் உப்பு. இதுதான் அரசு. இது சூறையாடுவதற்கு மட்டுமே பயிற்றுவிக்கப்பட்ட சுனாமி! ●

---

**புரட்சித் தலைவி அருள்வாக்கு: "உற்றார் உறவினரை இழந்தது கடவுள் செயல்; மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள்!"**


படிப்பகம்

www.padippakam.com


# மதம்

கேரளத்தில் கொல்லம் - ஆரிய சமாஜக் கோயில் கொடிக்கம்பம் தவிர மிச்சம் மீதி இல்லை - எல்லாம் சுனாமிப் பேரலை கொண்டு போய்விட்டது.

வேளாங்கன்னி - தமிழில் பிரார்த்தனை செய்து கொண்டிருந்த 1000 பேர் அலைக்குப் பலி. ஒவ்வோராண்டும் புனிதப் பயணம் செல்லும் சென்னை அய்யப்பன்தாங்கலைச் சேர்ந்த ஒரு கிறித்தவக் குடும்பம் அலைக்குப் பலி.

*நாகூர் - சென்னை ஆவடி முசுலீம் புனிதப் பயணிகள் அங்கே கடற்கரையில் பலி.*

*இலங்கை - காலே என்ற இடத்தில் புத்தர் சிலை நீங்கலாக அனைத்தையும் கடல் கொண்டு விட்டது.*

*இந்தோனேசியா - பந்தா அசே நகரில் மசூதி அருகே வெள்ளுடை போர்த்தி அடுக்கிய பிணங்கள்.*

— இந்த மதம் தான் என்றில்லை, எல்லா மதங்களிலும் எல்லாக் கடவுளையும் கும்பிடும் பக்தர்கள் பல ஆயிரம் பேர் இந்தோனேசியா, சுமத்ரா, அந்தமான் - நிக்கோபார், இலங்கை, இந்தியா என்று எல்லா நாடுகளிலும் சுனாமி அலைகளுக்குப் பலியாகி விட்டார்கள். ''வேறுவேறு மதம் - கடவுள் என்று பேதம் நான் பார்ப்பதில்லை'' என்று கடலம்மா சொல்லிவிட்டாளோ?

இறந்த சடலங்களுக்கு அடையாளமாக ஒரு ஃபோட்டோ வைத்து ஃபாதர் பிரார்த்திக்கலாம்; ஆனால் கிட்டத்தட்ட 1,20,000 பேர் ஆசியப் பகுதியில் பலியாகி விட்டார்கள். அத்தனை ஆன்மாக்களுக்கும் என்ன அடையாளம் சொல்வது? எந்த மதமென்று சொல்வது?

ஆனால் இப்படி அடையாளம் சொல்லி தங்கள் மதங்களின் சீடர்களாக ஆக்கிக் கொள்பவர்கள் இந்தச் சாவுகளுக்கு எந்தவித ஆன்மீக விளக்கத்தையும் வெட்டவெளிச்சமாகக் கொடுக்க முன்வரவில்லை. மாறாக, பார்ப்பன ஏடான ஜூ.வி. போன்றவை மூலம் வதந்திகள் பரப்புகின்றன. ''திருவாரூர் துறைமுகமாகிவிடும் என கல்வெட்டுக் குறிப்புகள் சொல்வதாக... செவிவழிச் செய்தி ஒன்று... (பற்றி) பேச ஆரம்பித்திருக்கும் சிலர் 'திருவாரூர் தியாகராஜர் கோயிலைக் கடல்நீர் தொடவேண்டும் என்றொரு ஐதீகம் இருக்கிறது. கடல் அலைக்குத் தப்பி திருவாரூர் பக்கம் ஈரம் சொட்ட வந்தவர்கள் தியாராஜர் கோயிலில் வந்து தப்பியிருப்பதைப் பார்க்கும்போது அந்த ஐதீகம்தான் பலித்துவிட்டதோ' என்று எண்ணத் தோன்றுகிறது என்கிறார்கள்'' என்று விளக்கம் தருகிறது ஜூ.வி. ஏடு (2.1.2005).

இந்தோனேசியா, சோமாலி இன்ன பிற நாடுகள் பற்றி திருவாரூர் தியாகராஜன் என்ன ஐதீகம் சொல்கிறான்?

மழை - கடவுளின் கொடை, அருள், கருணை. சுனாமி அலை வீச்சு இயற்கையின் சீற்றம்; கடவுளின் சீற்றம் அல்ல. அப்படிச் சொன்னால் இந்த ஏழைகள் மேல் சீற்றம் கொள்ளும் கடவுள் வெறுக்கப்படுவார். ஆனால் கடவுள்களை முன்தள்ளுகின்ற மதமும், அதன் கோயில்களும் ஒடுக்கப்பட்ட ஏழை, 'கீழ்ச்சாதி' மக்களை, விலக்கி வைக்கின்றன. சவேரியார் சர்ச் தவிர, சுசீந்திரம், நாகராஜா, சென்னை திருவல்லிக்கேணி, சிதம்பரம் நடராசர் போன்ற அத்தனை இந்துக் கோயில்களும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களைத் தஞ்சம்புக அனுமதிக்கவில்லை.

சாதாரண நாட்களில் குழியில் கூட கடவுளால் சாதிவாரியாக 'ரகம்' பிரிக்கப்படும் மக்களை இயற்கை ஒரே குழியில் சேர்த்தது. இவ்வளவு இருந்தும் வாழ்க்கை அவலங்களிலிருந்து கற்பனையில் தன்னை விடுவித்துக் கொள்ள மதத்தை மனிதன் பிடித்துக் கொள்கிறான்; அது அவனது ஏக்கப் பெருமூச்சாக இருக்கிறது. ஆனால் மதத்தைக் கொழுத்த நிறுவனமாக மாற்றிக் கொள்ளும் மதவாதிகள் எவ்வளவு வக்கிரத்தோடு மனிதனை, உழைப்பாளிகளை நடத்துகிறார்கள்? வரலாறு நெடுகிலும் எத்தனை எடுத்துக்காட்டுகள்? இதோ இன்று நம் கண் எதிரிலேயே நடப்பவை வேறென்ன?

டிச. 26-ஆம் தேதி சுனாமி அலையால் வீசி எறியப்பட்டுப் பலியானவர்கள் பல ஆயிரம் பேர். அதற்கடுத்த நாள் எங்கெங்கோ சிதறிப் புதைந்து கிடந்த உடல்களைத் தேடி எடுத்துக் கொண்டிருந்தார்கள் சுற்றத்தார். அதே நாளில் சிதம்பரம் சிவனுக்கு சரியாகப் பகல் 2.15 மணிக்கு ஆருத்ரா தரிசனம். கடலூரில் 50 கிராமங்கள் முற்றிலும் அழிந்து தேவனாம்பட்டினம், சிங்காரத் தோப்பு, தாழங்குடா, புதுக்குப்பம், புதுப்பேட்டை, பின்னத்தார் போன்ற மீனவக் கிராமங்களில் புதையுண்ட 500 பிணங்களை பொக்லைன் போட்டுத் தோண்டி எடுக்கிறார்கள் - அதேநேரம்



**குமரி மாவட்டம் கீழ்மணக்குடியில் அலையால் நொறுங்கிய திருச்சிலுவை ஆலயம்.**

**சென்னை கடற்கரை மயானமாகிய அதேநாளில் திருவல்லிக்கேணி கோயிலில் திருப்பாவை சொற்பொழிவு!**



படிப்பகம்

www.padippakam.com

அம்பாளுக்கு லட்சார்ச்சனை. திருவாடனைச் சாமிக்கு அலங்காரம்; முத்துப்பல்லக்கு; கடலூர் எஸ்.பி. பன்னீர் செல்வம் என்.எஸ்.எஸ்., என்.சி.சி. மாணவர்கள் சகிதம் வந்து ஆஜராகிப் பலத்த பாதுகாப்பு கொடுக்கிறார் சாமிக்கு; ஊர் முழுக்க விடுமுறை அறிவிக்கப்படுகிறது. கடலூர் முழுக்க ஒப்பாரி; சிதம்பரம் முழுக்க நாதசுரக் கச்சேரியோடு பஞ்சமூர்த்தி வீதி உலா.

அருகே சென்னை மெரீனா, பட்டினப்பாக்கம், ராயபுரத்தில் சுமார் 400 பேர் இறந்து கிடக்க, திருவல்லிக்கேணி, மயிலையில் விஷ்ணுகோயிலில் திருப்பாவை சொற்பொழிவு; ''உன்பணி என்றும் செய்ய எனக்கு நீ அருளுவாய்'' என்று நம்மாழ்வார் பாசுரங்கள் பாடப்படும் பத்துநாள் 'இராப்பத்து' (இரவு ஓதுதல்) விழா. குறையொன்றுமில்லாமல் நடக்கிறது.

'கடவுள் மக்களைத் தண்டித்து விடுவார்' என்று யாரும் சொல்லமாட்டார்கள் என்று தான் நாம் நினைப்போம். ஆனால் அந்த எல்லைக்கும் இந்து வெறியர்கள் போவார்கள்.

''இந்துமதத்தை அழிக்க முயன்றதால் கடல் கொந்தளிப்பு'' என்று ஜெயிலுக்குப் போன கிரிமினல் ஜெயேந்திரனுக்கு ஆதரவாக (தினத்தந்தி, 28.12.04) விசாகப்பட்டினம் சாரதா பீடம் மடாதிபதி ஜகத்குரு சங்கராச்சாரி ஸ்வரூபானந்த இந்திர சரஸ்வதி திமிரோடும் கொழுப்போடும் அறிக்கை விட்டிருக்கிறார்.

திருச்சி ஆஞ்சநேயர் கோயில் சுவரில், இதேபோல 26.12.04 அன்று மாலை கரும்பலகையில் விசுவ இந்து பரிசத் எழுதியதைக் கண்டித்து ம.க.இ.க. தோழர்கள் 10 பேர் ஆர்ப்பாட்டம் செய்து கைதானார்கள்.

ஜெயேந்திரன் என்ற ஒரு பார்ப்பனக் கொலைகாரனைக் கைது செய்தால் கடவுள் ஒரு லட்சம் கொலை செய்வானா? இப்படி எழுதுகின்ற கேடுகெட்ட பார்ப்பனப் பிறவி, சிதறிக் கிடக்கும் சடலங்களைத் தின்னும் நாகை நாய்களைவிடக் கேவலம்தானே?

இறந்த ஆன்மாக்களின் சாந்திக்கு மோட்சதீபம் ஏற்றச்சொல்கிறது ஜெயில் சாமி ஜெயேந்திரன். வெளியே உற்றம் சுற்றம் இழந்து இளம் பிஞ்சுகளைப் பறிகொடுத்துத் தவிக்கின்ற பல்லாயிரம் குடும்பங்களுக்காக, உயிருடன் உள்ள இந்த ஆன்மாக்களின் சாந்திக்காக - ஜெயேந்திரனுக்குத்தான் மோட்சதீபம் ஏற்ற வேண்டும்.

வேலூரை சுனாமி தாக்கவில்லை; மனிதர்களைக் கொன்ற சுனாமி மடங்களை அழிக்கவில்லை; அந்த வேலையை நமக்காக விட்டு வைத்திருக்கிறது.

•

# வக்கிரம்

''ஒரு மேற்கு ஐரோப்பியனின் மரணம் 12 ஆசிய மக்களின் மரணத்திற்குச் சமம்'' என்கிறார் ஆதம்ஸ் எனும் அறிஞர். உலகின் செய்தி ஊடகங்கள் பேரழிவு குறித்து எவ்வளவு செய்தி அல்லது நேரம் ஒதுக்க வேண்டும் என்று தீர்மானிப்பது அந்த அழிவு தோற்றுவிக்கும் மரணத்தின் எண்ணிக்கையைப் பொறுத்ததுதான் என்கிறார் அவர். இதன்படி தற்போது ஒரு லட்சம் சாவுகளை நெருங்கி வரும் ஆசிய சுனாமியலையின் அழிவு 8500 ஐரோப்பியர்களின் உயிர்களுக்குச் சமம். அந்த அளவே செய்தி முக்கியத்துவம் பெறும்.

போர், இயற்கைப் பேரழிவின் மூலமே உலக செய்திச் சானல்கள் பிரபலம் பெறுகின்றன. 91 இராக் ஆக்கிரமிப்பை வைத்து சி.என்.என். தொலைக்காட்சி உலகச் சந்தையைப் பெற்று வருமானத்தை 150 சதவீதத்துக்கு அதிகப்படுத்தியது. அதன் பிறகு பி.பி.சி. தற்போதைய சுனாமி அழிவை வைத்து சன் டி.வி. தென்னிந்திய அளவிலும், என்.டி.டி.வி அகில இந்திய ஆங்கிலச் சந்தையையும் முழுமையாகக் கைப்பற்றக் கூடும். ஒருநாட்டின் தேசியத் துயரம் ஒரு செய்தி நிறுவனத்தை லாட்டரிப் பரிசு போல மகிழ வைக்கிறது.

ஆசியச் சந்தையைக் கைப்பற்றும் போட்டியில் சி.என்.என்-ஐ வென்றுவிட்ட பிபிசி, 26 ஞாயிறன்று சுனாமி நில நடுக்கச் செய்தியை இடைவெளியின்றி தொடர்ந்து ஒளிபரப்பியது. தெற்காசிய நாடுகளின் அழிவு மொத்தமாக அளிக்கப்பட்ட நேரத்தில் மாலே, பினாங்கு, புக்கெட், காலே நகர்களில் உயிர் தப்பிய பிரிட்டிஷ் பயணிகளின் தனிக்கதைகள் நேரடியாக ஒளிபரப்பப்பட்டன.

ஈராக் ஆக்கிரமிப்பின்போது அமெ



நாகை அக்கரைப் பேட்டை: 500 பேரைப் பலி கொடுத்த கிராமம்.

**சுனாமியால் செத்த ஒரு லட்சம் ஆசிய மக்கள் 8,500 ஐரோப்பிய உயிர்களுக்குச் சமம்! இதுதான் மேற்குலக ஊடகங்களின் அளவுகோல்!**


படிப்பகம்

www.padippakam.com



ரிக்க இராணுவத்துடன் பல செய்தியாளர்களை அனுப்பி லண்டன் மைய ஒளிபரப்பையே ஈராக்கிற்கு மாற்றிய பிபிசி, தெற்காசிய அழிவுகளுக்கு ஒரு நாட்டுக்கு ஒரு செய்தியாளரை மட்டுமே பயன்படுத்தியது. தனது இணையத் தளத்தில் பிரிட்டிஷ் சுற்றுலா பயணிகளின் உறவினர்களுடைய கவலைகள் மற்றும் கேள்விகளுக்குப் பதிலளிக்க லண்டன் வெளியுறவுத்துறை அமைச்சகத்திற்கென்றே ஒரு செய்தியாளரை நியமித்து ஒரு மணிக்கொரு தடவை ஒளிபரப்பியது.

27-ம் தேதி ஆசிய அழிவை தலைப்புச் செய்தியாக மட்டும் காட்டிய பி.பி.சி, தனது வழக்கமான நிகழ்ச்சிகளை ஒளிபரப்பியது. இலங்கையில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படும் கார், ரயில், பேருந்துகள் அடங்கிய காட்சியை முடித்து வந்த மகிழ்ச்சியில் லேண்ட் ஓவர் எனும் அதிநவீன கார் மலை, மேடு, பள்ளம், சகதியில் எப்படி சொகுசாக பயணம் செய்கிறது என்பதை நீளத்தில் நடந்ததை 25 கோடி மக்கள், 200 நாடுகளில் 44 மொழிகளில் பார்த்தனர். உலக வரலாற்றில் அதிகம்பேர் பார்த்த நிகழ்ச்சியாம் இது. ஒரு இலட்சம் பேர் பலியாகி பல இலட்சம் பேர் வீடிழந்து, கோடி மக்கள் அலறும் தெற்காசியக் காட்சிகள் ஓரிரு நிமிடங்களில் புள்ளி விவரமாய் வந்து போகின்றன. உலக மீடியாவின் வக்கிர தருமம் இதுதான்.

என்றாலும் உள்நாட்டிலும் அந்த தருமம் மாறிவிடவில்லை. 26-ஆம் தேதியன்று சுனாமி அழிவையும் 27-இல் அம்பானி விவகாரத்தையும் "பிரேக்கிங் நியூசாக" என்.டி.டி.வி வெளியிட்டது. ஒரேநாளில் சுனாமி பின்னுக்குப் போய் அம்பானி முன்னுக்கு வந்த காரணம், ரிலையன்ஸ் பங்குகள் கோலோச்சும் பங்குச் சந்தையில் என்டிடி.வியின் பங்குகளும் இருக்கின்றன. 26-இல் தமிழகத்தில் சாவுகள் 4000 எனவும், 27-இல் "கருணாநிதி உடல்நிலை குறித்து போலீசு விஷமப்



நாகை:
புதைப்பதற்கு அரசு வரவில்லை; தின்பதற்கு நாய்கள் வந்துவிட்டன.

20 நிமிடம் விளக்கியது. வெள்ளக் காட்சிகளால் ஊறும் சோகத்தை ஒரு ஆடம்பர வாகனத்தின் பார்வை வழியாக அறிவிக்கிறது. காட்சி - உலகின் வக்கிர விளைவு இதுதான்.

97-இல் மரணமடைந்த கேளிக்கைச் சீமாட்டி டயானாவின் இறுதி ஊர்வலம் 10 லட்சம் பேருடன் 3 மைல்

பிரச்சாரம் - ஆற்காடு கண்டிப்பு" எனவும் சன் டி.வி. 'ஃப்ளாஷ் நியூஸ்' வெளியிட்டது. சில ஆயிரம் உயிர்கள் போய், பல ஆயிரம் ஜீவன்கள் அலறும் நேரத்தில் சன் டி.வி.யின் விசேடக் கவலை ஒரு அருவெறுப்பின்றி வேறென்ன?

"அங்கே லேட்டஸ்ட் நியூஸ் என்ன?" இது சுனாமி அழிவு குறித்து பிபிசி முதல் சன் நியூஸ் வரை செய்தி படிப்பவர்கள் செய்தி சேகரிப்பவர்களிடம் கேட்ட கேள்வி. மேலும் பேரழிவின் துயரத்தையோ அதன் பரிமாணத்தையோ எப்படி உணர்த்துவது என்பதல்ல அவர்கள் கவலை. சுனாமி அலையின் பிரம்மாண்டத்தை எப்படிக் காட்டுவது என்று கடல் கொந்தளிப்பின் போது எடுக்கப்பட்ட முதல் காட்சிகளுக்காக அவர்கள் அலைந்தார்கள். பினாங்கு நகரின் சுற்றுலாப் பயணி ஒருவர் தற்செயலாக எடுத்த காட்சி இவர்களுக்குக் கிடைத்தவுடன் அடித்தது லாட்டரி. உலகம் முழுவதும் பல முறை அந்தத் தத்ரூபமான காட்சி ஒளிபரப்பப்பட்டது. பிணங்களின் நடுவே வற்றிய கண்ணீருடன் இடைவிடாது அழுது அரற்றிய பெண்களின் கதைகள் அவர்களது ரசனைக்கு ஈடுகொடுக்கவில்லை.

அடுத்து கிரிக்கெட்டின் ஸ்கோர் போல உடல்களின் எண்ணிக்கை அதிகரிப்பதை விறுவிறுப்புடன் காட்டினர். டிடி நியூஸ், ஹெட்லைன்ஸ் டுடே, என்.டி.டி.வி போன்ற சானல்களின் கீழ்ப் பத்தியில் விப்ரோ, டி.வி.எஸ். எஸ்கார்ட்ஸ், ரிலையன்ஸ், கோத்ரெஜ், கில்லெட், இந்தியா சிமெண்ட்ஸ், மாருதி, சத்யம், போன்ற நிறுவனங்களின் பங்கு மதிப்பின் ஏற்ற இறக்கமும், மேலே நாகை, கடலூர், ஆந்திரா, அந்தமான், இலங்கை, இந்தோனேசியாவின் உடல் எண்ணிக்கை அதிகரிப்பதும், ஒரே நேரத்தில் காட்டப்பட்டன. இதற்குப் பொழிப்புரை தேவையில்லை.

சென்னையின் கரைகளில் பிணங்கள் ஒதுங்கத் தொடங்கியதை முதலில் படம்பிடித்த சன் டிவி, அதை 'மனநலம் பாதிக்கப்பட்டவர்கள், இதய பலவீனம் உள்ளவர்கள், பெண்கள், குழந்தைகள் பார்க்க வேண்டாமெ'ன அடிக்கடி கேட்டுக் கொண்டது. ஆனால் இந்தச் செய்தி நிகழ்ச்சிகளின் போது விளம்பரங்களுக்கு மட்டும் குறை வில்லை.

மாற்றுடையின்றி மக்கள் முகாமில் தவிப்பதைக் காட்டியவுடன், 'பட்டு சேலைக் காத்தாட, மனசு கூத்தாட' ஜெயச்சந்திரன் டெக்ஸ்டைல்ஸ் அழைத்தது. வீடே அடித்துச் செல்லப்பட்ட காட்சிக்குப் பிறகு "அமெரிக்க முத்திரையுள்ள பிரீமியரை விடுத்து வேறு தரக்குறைவான குக்கரை வாங்கு

**கறுப்பு ஞாயிறு: குன்னக்குடி வயலின், ஜேசுதாஸ் கச்சேரி, பத்மாசுப்பிரமணியம் பரதம், எஸ்.வி.சேகர் நாடகம் இனிதே நடந்தன.**

www.padippakam.com



வேனா?'' என்ற ஆலோசனை வந்தது. மகள் திருமணத்திற்குக் குருவி போல சேர்த்து வைத்த தங்கத்தை கடல் எடுத்துக் கொண்ட செய்திக்குப் பின் ''தங்கக் குருவி எங்க வீட்டுக்கு வருவாயா?'' என்று சரவணா ஸ்டோர்ஸ் நகை மாளிகைக்காக மன்மத ராசா சாயாசிங் பாடுகிறார். சகதி, தெரு, மரம், மருத்துவ மனைகளில் இறைந்து கிடக்கும் பிணங்களைக் காட்டிய உடன் ''ஸ்லீப்வெல் ஹாலிடே மெத்தை அதிக பரவசம் தருவது'' நினைவூட்டப்படுகிறது.

இந்த எதிர்மறைக் காட்சிகளின் வக்கிரம் டிவியில் மட்டுமல்ல, ஹிந்து முதல் தினத்தந்தி வரையிலான நாளிதழ்களிலும் அப்படித்தான் வெளிவந்தன. நாளிதழ்களில் மட்டுமல்ல, சமூகத்தின் நடவடிக்கைகளும் அப்படித்தான் இருந்தன.

மெரினா முதல் காசிமேடு வரை கடற்கரையே இழவுக் கரையாக மாறியிருந்த போதும் டிசம்பர் சங்கீத சீசன் நிகழ்ச்சிகள் நிறுத்தப்படவில்லை. நாரத கான சபா, இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ், நுங்கம்பாக்கம் கல்சுரல் அகாதமி, முதலியவற்றில் சின்மயா, டி.எம்.கிருஷ்ணன், உன்னி கிருஷ்ணன், குன்னக்குடி, ஊர்மிளா சத்திய நாராயணன், ஜேசுதாஸ் போன்றோர் ஆடினர், பாடினர், வயலினை மீட்டினர். சென்னையின் இந்த நீரோக்களுக்கு மத்தியில் நீரோ சக்கரவர்த்தி எஸ்.வி.சேகர், தனது அல்வா, மெகா வசூல், பெரியதம்பி சின்னதம்பி, குழந்தைசாமி முதலான நகைச்சுவை நாடகங்களை நடத்தினார். 500 - 1000 கொடுத்து அரங்கம் நிறைந்து சிரித்துக் கலைந்தவர்கள் பலர்.

''என்னப் பெத்த அம்மா, என்னப் பெத்த தங்கம்'' என ஆயிரக்கணக்கில் பெண்கள் வெடித்து அழுத அதே நேரத்தில்தான் மேற்கண்ட கலை உபாசனைகள் நடந்திருக்கின்றன. இத்தகைய அருவெறுப்பான சமூகத்தில் வாழ்வதற்குப் பதில் அந்த சுனாமியில் நாமும் இறக்கவில்லையே என்பதைத் தவிர எதையும் நினைக்க முடியவில்லை.

26-இன் சுனாமி சோகத்தைவிட டாக்காவில் வங்க தேச அணியிடம் தோல்வியடைந்த இந்தியாவிற்காகக் கவலைப்பட்டவர்கள் அதிகம். டி.வி.யில் அதிக இந்தியர்கள் அன்று கிரிக்கெட் போட்டியைத்தான் பார்த்தார்கள். காரணம் சுனாமியின் கொடூரங்களை நினைத்துப் பார்க்கும் அளவுக்கு அவர்கள் இதயம் 'வலுவானதில்லை'. மெரினா முதல் குளச்சல் வரை கிரிக்கெட் ஆடிய மீனவச் சிறுவர்கள் பலியாகியிருக்கிறார்கள். இப்படி ஒரு பித்தைப் பரப்பிய 'கொலைகார' இந்திய அணி, ஜட்டி முதல் தலைக்கவசம் வரை பன்னாட்டு நிறுவனச் சின்னங்களைப் பொறித்திருக்கும் அந்த தேசபக்த சிங்கங்கள், 27-ம் தேதி 2 நிமிடம் அஞ்சலி செலுத்திவிட்டுப் போட்டியை ஆரம்பித்தார்கள். ஆம். 26-ம் தேதி இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட மக்களைப் பலி கொடுத்த இந்தியாவில் எந்த ஒரு இயக்கமும் நிற்கவில்லை.

அறியாமல் கொன்ற சுனாமியின் அழிவை, அந்த அழிவின் சோகத்தை, அலறலை, ஈவு இரக்கமின்றிக் கொன்ற இந்தியாவின் இத்தகைய இயக்கத்தில் உங்களின் பங்கு என்ன? உண்மையைப் பரிசீலியுங்கள். ●

## வீரம்

காட்டில் வாடிய வீரப்பனை சதிராட்டம் ஆடி பிடித்துக் கொன்றது அதிரடிப்படை. ஸ்காத்லாந்து யார்டு அல்ல, தமிழக காவல் துறைதான் வீரத்தில் முதலிடமென்று உச்சிமோந்து கோடிகளில் பரிசளித்தார் ஜெயலலிதா. அதிரடிப்படையின் 'ஆபரேசன் குக்கூனை' (பட்டுப்புழுக் கூடு) அட்டைப்படக் கட்டுரை மூலம் புல்லரித்த பத்திரிகைகள் விஜயகுமார், வெள்ளைத் துரை, டிரைவர், செந்தாமரைக் கண்ணன் போன்ற 'வீரர்களின்' கதைகளைப் பிளந்து கட்டின. ஆனால் சுனாமி அலையில் சின்னாபின்னமாகிய கடற்கரையை இந்த அதிரடிப்படை எட்டிக் கூடப் பார்க்கவில்லை. இவ்வளவிற்கும் அதிரடிப் படை அமைக்கப்பட்டபோது இயற்கை பேரிழப்புகளுக்காகவும் பணியாற்ற வேண்டும் என்பது அதன் அடிப்படைக் கடமைகளில் ஒன்று. அடிப்படையை நிறைவேற்றச் சொன்னால் ஆர்ப்பரிக்கும் அலைகளில் அட்டைக் கத்திகளின் 'வீரம்' அம்பலமாகும் என்பதால் அரசு அனுப்பவில்லை. அடர்ந்த காடுகளில் ஆதிவாசிகளை கேட்பார் கேள்வியின்றிக் குதறிய இம்மிருகங்களின் 'வீரத்தை'த்தான் ஐயாயிரம் பேரைப் பலிவாங்கிய சுனாமியும் நிருபித்திருக்கிறது.

கடலோரக் காவல் படை. அமைதிக் காலத்தில் பத்திரிகையாளர்களையும், அதிகார வர்க்கக் குடும்பத்தினரையும் நடுக்கடலுக்கு அழைத்துச் சென்று, கடலில் தத்தளிப்பவர்களை எப்படிக் காப்பாற்றுவது என்பதை மயிர்க் கூச்செரியும் வகையில் நடத்திக் காட்டும் கோமாளிகளின் படை. இவர்களின் கப்பல்கள் அரசுப் பிரதிநிதிகள் களிப்பதற்கான மிதவை விடுதிகள். இராமேசுவரத்தின் மீனவர்களைப் பொறுத்தவரை



மனித குலத்தின் மழலை இனம்
'எங்களுக்கு உதவ யாருமேயில்லையா?' என்று கதறுகிறது.



படிப்பகம்

www.padippakam.com



இவர்கள் வில்லன்கள்.

அலையடித்து ஆழ்கடலுக்குள் பிணங்கள் இழுக்கப்பட்ட இரண்டாம் நாளில் இப்படையின் தென்பிராந்திய அதிகாரி மின்னலடிக்கும் பளீர் சீருடையில் இப்படிச் சொல்கிறார்: ''விசாகப் பட்டினம் முதல் குமரி வரை மீட்புப் பணிக்கான கோரிக்கைகள் வருகின்றன. சென்னைத் துறைமுகத்தில் நின்றிருந்த இரண்டு கப்பல்கள் சேதமடைந்ததால் உடனடியாக உதவ முடியவில்லை. இப்போது எங்கள் கப்பல்களும், ஹெலிகாப்டர்களும் கடலைக் கண்காணிக்கின்றன'' . அலையடித்த போது தத்தளித்த மக்களுக்குக் காவல் இல்லை. ஓய்ந்த போது கண்காணிப்பு! பெயரோ கடலோரக் காவல்படை.

இவர்களது ஹெலிகாப்டர்கள் தூக்கி வந்த பிணங்களும், குற்றுயிர் மனிதர்களும் மெரினா கடற்கரையில் உணவுப் பொட்டலங்கள் போல கொட்டப்பட்டனர். எடுத்துக் காப்பாற்றியவர்கள் மீனவர்கள். மக்களும், மீனவர்களும் வாழும் தமிழகக் கடற்கரையில் எங்கேயும் ஹெலிகாப்டர் தரையிறங்கும் தளம் கிடையாது. தளமெல்லாம் தங்கத் தலைவிக்கும், தியாகத் தலைவிக்கும் மட்டுமே. சுனாமியின் அடுத்த சில மணிநேரங்களில் இவர்கள் இயங்கியிருந்தால் பலரைக் காப்பாற்றியிருக்க முடியும். செய்யவில்லை. அறியாமல் கொன்றது சுனாமி. அறிந்தே கொன்ற கடலோரக் காவல் படையை என்ன செய்யலாம்?

இந்திய இராணுவம். உலகின் நான்காவது பெரிய படை. ஜெய் ஜவானின் வீரதீரங்கள் கார்கிலின் போதும், இந்தி சினிமா - சீரியல் மூலமும் பறைசாற்றப்பட்டவை. ஆயினும் உண்மையோ மாறானது. கார்கில் போரில் பதக்கம் பதவி உயர்விற்காக வெற்றியை சினிமா போலப் புனைந்து தலைமைக்கு அனுப்பிய மேஜர் சுரீந்தர் சிங் பதவி நீக்கம் செய்யப்பட்டு மூன்றாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார். இந்திய வரைபடத்தின் ஒரு அங்குலத்தைக் கூட பாகிஸ்தான் கைப்பற்றி விடக் கூடாது என்பதற்காக கார்கில் போரில் ஒரேநாளில் பல லட்சம் வீரர்கள் நாடெங்கிலுமிருந்து குவிக்கப்பட்டார்கள்.

ஆனால் ஒருதேசத்தின் உயிரென வாழும் மக்கள் சில ஆயிரம் பேர் கொல்லப்பட்ட போதும் இராணுவம் வரவில்லை. தேசிய இனங்களை ஒடுக்குவதற்காக வடகிழக்கில் பல்லாண்டுகளாகக் குடியிருக்கும் இராணுவம், தென்கிழக்கில் ஒரு தேசிய இனம் உயிரை விடும் போதும், விட்ட பிறகும் வரவில்லை. மக்களின் உடல்கள் அழுகிய தக்காளிகளைப் போல பெருங்குழியில் கொட்டப்பட்டுப் புதைக்கப்படும் இரண்டாம் நாளில் கல்பாக்கம் அணு உலையைக் காக்க ஜம்மு காசுமீர் சிறப்பு ஆயுதப் பிரிவும், நாகைக்கு மதராஸ் பொறியியல் படைப்பிரிவும் வந்தன. நாகைக்கு பொறியியல் பிரிவு எதற்கு? அரசுத் தலைவர்கள் வசதியாக வந்து போக சாலை-பாலங்களைச் செப்பனிட!



குப்பைகளைப் போல் அகற்றப்படும் இந்தோனேசிய மக்கள்.

இந்திய இராணுவம் ஒரு மக்கள் இராணுவமில்லைதான். இருப்பினும் 80களில் செய்து வந்த இயற்கை துயர் நிவாரணப் பணிகள் கூட இன்று இல்லை. ஏனெனில் இது உலகமயமாக்கலின் இராணுவம். ஜம்மு - காசுமீரில் பரவியிருக்கும் இந்திய இராணுவத்தின் போர் உணர்ச்சியைத் தூண்டச் செய்வது தேசபக்திக் கதைகளல்ல. ஷாருக்கான், ஐஸ்வர்யாராய் முதலான கனவுத் திரை வெண் தோல்கள் துருப்புகளுடன் கும்மாளமிட்டுக் குஷிப்படுத்துகின்றன.

இந்தக் குஷியான படித்த இளைய தலைமுறையை இராணுவத்திற்குள் கவர்ந்திழுக்கவும் தேசபக்தி உதவாது. சில ஆண்டுப் பணிக்குப் பின் இவர்கள் தனியார் - பன்னாட்டு நிறுவனங்களில் சேருவதற்கு அனுமதிக்கப்படவிருக்கிறார்கள். ஏற்கெனவே ஒடுக்குமுறை நிறுவனமாக இருந்த இராணுவம் சுனாமிக்கு முன்பே உலகமயமாக்க அலையால் களிவெறி இராணுவமாக மாறிவிட்டது. இது ஈராக்கில் வெறியாட்டமும், களியாட்டமும் போடும் அமெரிக்கத் துருப்புகளின் அலைவரிசையில் சேர்ந்துவிட்டது. உயிரைக் கொல்லும் சுனாமியைவிட, அணுஅணுவாய் வதைக்கும் அபுகிரைப்பின் பேரழிவு அபாயம் நிறைந்தது.

இதுபோக விமானப்படை. இப்படையின் சாகச சர்க்கஸ் நிகழ்ச்சியை மெரினா கடற்கரையில் நடத்திய சூரிய கிரண் குழுவினருக்கு ஜெயா அரசு மொய் எழுதிய தொகை 50 இலட்சம். பேரலையால் வாழ்விழந்த மக்கள் காப்பாற்றுமாறு கதறியபோது, இந்த வேடிக்கைச் சூரியன் உதிக்கவில்லை; ஒளிந்து கொண்டது.

விஜயகுமாரின் அதிரடிப்படை முதல் விமானப்படை வரை உண்மை நிலை இப்படியிருக்க இனிவரும் மாதங்களில், சுனாமி அழிவில் இவர்களாற்றிய சாகசங்கள் இந்தி - தமிழ் சினிமாக்களில் புனையப்படலாம். புஷ் வெற்றியைக் கொண்டாடும் விதத்தில், ஈராக்கின் பலூஜா நகரத்தின் 3 லட்சம்

**மீன்களின் பெயரைச் சப்புக் கொட்டத் தெரிந்த நாக்கிலும், அந்த மக்களின் உப்பைத் தின்று வளர்ந்த உடலிலும் விசுவாசம் இல்லை.**



படிப்பகம்

www.padippakam.com



மக்களை வெளியேற்றி விட்டு, நகரத்தை குண்டு வீசி பொட்டல்காடாக்கிய பிறகு அமெரிக்க இராணுவம் 'வெற்றி வீரர்களாக' ஜெனரல் ஜிம்மேட்டிஸ் தலைமையில் நுழைந்தது. இந்த கொலை - கேலிக் கூத்தை ஹாலிவுட்டின் யுனிவர்சல் ஸ்டூடியோ நிறுவனம் நடிகர் ஹாரிசன் ஃபோர்டை மேற்கண்ட மேஜராக நடிக்க வைத்து 2005-இல் திரையிடப் போகிறதாம். அட்டைக் கத்தியின் அருவருப்பை இத்துடன் முடிப்போம்.

**வீ**ரம். இதுமட்டுமே வீரம். சக மனிதர்களைக் காப்பாற்ற எதை, எப்படி, எப்போது செய்ய வேண்டுமோ அவற்றை தன்னுயிரைப் பணயம் வைத்து செய்தவர்கள் கீழ்க்கண்ட போராளிகள். இவர்களில் சிலர் இறந்து விட்டனர். பலரின் பெயர் கூட எமக்குத் தெரியாது. அர்ஜுனா விருதும், அட்டைப்படக் கவுரவமும் வாய்க்கப் பெறாத இந்த எளிய, அழகான மனிதர்கள் சுனாமியின் பிரம்மாண்டத்தை எதிர்த்துப் போராடினார்கள். சென்னை, கடலூர், நாகை, சீர்காழி வரை நிவாரண முகாம் அமைத்துப் பணியாற்றும் எமது தோழர்கள் சேகரித்துக் கொடுத்த சில வீரத் தருணங்கள், இந்த மக்கள்தான் புரட்சி செய்வார்கள் என்பதை உங்களுக்கு உணர்த்தக் கூடும்.

சென்னை பட்டினப்பாக்கம் - சீனிவாசபுரம். கடலால் உருத்தெரியாமல் குலைக்கப்பட்ட ஒரு மீனவர் குடியிருப்பு. அசோக் குமார், கடலுழைப்பால் உரமேறிய இருபது வயது இளைஞர். பாம்பைப் போல சீறிக் கொண்டு வந்தது அலை. மக்கள் தலைதெறிக்கதப்பி ஓடியபோது இவர் ஒரு கணம் நின்றார். சில இளைஞர்களை சேர்த்துக் கொண்டு தத்தளித்த சிலரை ஒரு மூலைச் சாலையில் கரையேற்றினார்.

ஒருகணம் யோசித்தார். உடன் அவரது குழுவினர் மிதந்து வந்த கூரைக் கம்புகளைச் சேர்த்தனர். மிதப்பவர்களிடம் வீசினர். ''உஷாரா - ஒரப்பா நில்லு, ஊன்றி நில்லு, தண்ணி போக்குல ஓடாதே, தெம்பா இரு, தம் கட்டி வா'' அசோக் குமாரின் ஆணைகள் அருமையாக வேலை செய்தன. நூற்றுக்கணக்கான விலைமதிப்பற்ற மனித உயிர்கள் காப்பாற்றப்பட்டன. பின்பு வீடு நினைவுக்கு வர குதித்து நீந்தினார். அதற்குள் அவரது குடும்பம் பாதுகாப்பாக நீந்தி அருகாமைக் குடியிருப்பில் கரையேறி விட்டனர். நொறுக்கப்பட்ட வீட்டில் தத்தளித்த தாயை தோளில் போட்டு நீந்தினார். அதன்பிறகு பல மணி நேரம் உயிரையும் பின்பு உடல்களையும் காப்பாற்றியது அவரது குழு. அவர்களது உடலிலே காயங்களும், தோளிலே கடுமையான வலியும் இருந்தபோதும் 'மற்ற உயிர்களைக் காப்பதற்கே எங்கள் உயிர்' என்ற உண்மை அவர்கள் முகத்தில் களையுடன் ஒளி வீசுகிறது. இந்த முயற்சிகளில் ஈடுபட்டுப் பலரைக் காப்பாற்றிய வீரமணி என்ற இளைஞர் தனது கடைசி முயற்சியில் அலையில் சிக்கி உயிர் துறந்து விட்டார். ''மற்றவர்களைப் பற்றி கவலைப்பட்ட வீரமணிக்கு தன் உயிரைப் பற்றி கவலையே கிடையாது'' என்று அவரது நண்பர்கள் இன்னமும் கதறுகிறார்கள்.



சக உழைப்பாளியுடன் அசோக் குமார், சென்னை சீனிவாசபுரம்.

வயதான கஸ்தூரி அம்மாளைக் காப்பாற்றிய சேகர். நான்கு பேரைக் காப்பாற்றிய ராஜேஷ். சிறுவர் - சிறுமியரைக் காப்பாற்றிய சின்னப் பையன் மற்றும் அகஸ்டின், மோகன். ''சீனிவாசபுரத்துல எத்தனையோ பேரைக் காப்பாத்துனோம். அவரு, இவருன்னு எண்ணித் தீராதுங்க. நாங்க ஒருத்தரை ஒருத்தர் காப்பாத்துனோம். மீனவர்களை மட்டுமில்ல, இங்க வாழற மத்த குடும்பங்களையும் காப்பாத்தினோம். இது எங்களுக்கு ரத்தத்தோடு ஊறின பழக்கம்'' என்கிறார் சின்னபையன்.

கடலூர் தேவனாம்பட்டினம். சீனிவாசன் கடலூர் நகராட்சியின் டிராக்டர் ஓட்டுநர். 26-ஆம் தேதி மீட்பு வேலைக்குச் சென்றபோது சிதறிக்கிடந்த பிணங்களை அப்புறப்படுத்த பலர் தயங்கினர். இவரும் இவரது நண்பர்களும் உடல்களை டிராக்டரில் போடும்போது, பிணக்குவியலில் கிடந்த ஒரு சிறுவனின் கடைவாயில் நுரை வழிந்திருக்கிறது. பதறிய சீனிவாசன் சிறுவனின் வயிற்றை அமுத்தி தட்டாமாலை போல சுழற்றினார். கடல் நீரைக் கக்கிய சிறுவன் விழித்துக் கொண்டான். நீரில் தத்தளிக்கும் மக்களைக் காப்பாற்றிய இளைஞர்களின் ஆவேச உணர்ச்சி, பிணங்களை அகற்றும் இந்த 'அருவெறுப்பான' வேலையில் ஈடுபட்ட சீனிவாசனிடமும் இருந்தது. இல்லையேல் விழித்த இந்த சிறுவன் ஏதோ ஒரு குழியில் புதையுண்டிருப்பான்.

தேவனாம்பட்டினத்தின் விக்ரமாதித்தன். அலையடித்தபோது ஒரு வீட்டின் முன் கதவை உடைத்துச் சென்ற வெள்ளம் பின் கதவை பிய்த்துக் கொண்டு வெளியேறியது. உள்ளே ஒரு ஆள் உயர வெள்ளத்தில் சிக்கிய பெண்ணின் அலறல். அஞ்சாத விக்கிரமாதித்தன் தன் நண்பருடன் ஒரு படகில் சென்று அந்தப் பெண்ணையும், அருகாமையில் மூச்சுத்திணறலுடன் தத்தளித்த வேறு சிலரையும் காப்பாற்றினார்.

கடலூர் சாமியார் பேட்டையின் அருள். தனது மீன் வலையைச் சுத்தம்

**சகமனிதர்களைக் காப்பாற்ற எதை, எப்படி, எப்போது செய்ய வேண்டுமோ அதைச் செய்ய உயிரைப் பணயம் வைத்தவர்கள் இவர்கள். இதுமட்டுமே வீரம்!**



படிப்பகம்

www.padippakam.com



செய்து கொண்டிருந்தார். அப்போது கடற்கரையிலிருந்தவர்கள் மீன் வாங்க வந்த மீனவப் பெண்கள். தமிழகக் கடற்கரையைச் சூறையாட 2000 கி.மீட்டர் பயணம் செய்து வந்த அந்த அலை இங்கேயும் பாய்ந்தது. கவிழ்த்து தூக்கி வீசப்பட்ட அருள் ஒரு கணத்தில் தன் அடியையும் வலியையும் மறந்து சுதாரித்துக் கொண்டு வயதான தாயைத் தன் தோளிலேந்தி ஒரு மேட்டில் சேர்த்தார். அருகில் இருந்த சிறு படகில் ஏறி ஒரு தென்னமட்டையைப் பிடித்து கையை நங்கூரமாக்கி, படகு வெள்ளத்தில் அடித்துச் செல்லாமல் பார்த்துக் கொண்டு அலை அடித்துச் சென்ற இரு பெண்களைக் காப்பாற்றினார். பின்பு வெள்ளத்தின் போக்கிலேயே படகைச் செலுத்தி மேலும் மூன்று பேரைக் காப்பாற்றினார்.

கடலூர் புதுக்குப்பத்தைச் சேர்ந்தவர் தேவதாஸ் என்ற தீபாவளி. இங்கே அலை மீண்டும் மீண்டும் அடித்தது. வலையில் கழுத்து சிக்கிய மீனவர் ஒருவர் மூச்சுத் திணறிய போது தீபாவளி முக்குளித்து அவரைக் காப்பாற்றினார். பின்னர் நீச்சல் தெரியாதவர்கள், காலில் அடிபட்ட பெண்கள் என ஐவரை இரு கரங்களால் அணைத்து வெள்ளத்தின் எதிர்த்திசையில் மூச்சுப்பிடித்து தரையில் எம்பி எம்பிக் குதித்து காப்பாற்றினார். 6 உயிர்களை அரும்பாடுபட்டுக் கரை சேர்த்த தீபாவளியின் உடல் சோர்ந்திருந்தாலும் இதயமோ மேலும் காப்பாற்றுமாறு வேகமாக துடித்துக் கொண்டிருந்தது.

ஏழாவது உயிரைக் காப்பாற்ற மீண்டும் கடலில் குதித்த அந்தக் காளை அதிவேகமாய்த் திரும்பிய வெள்ளத்தில் இழுபட்டு ஒரு பள்ளத்தில் மாட்டிக் கொண்டது. பிறகு திரும்பவில்லை. தீபாவளியின் உடல் மறுநாள்தான் பிணமாக கரை திரும்பியது. அப்போதும் இன்னும் எத்தனை பேரைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்பது போல அவரது இரு கைகளும் விரிந்திருந்தன.

அவரால் காப்பாற்றப்பட்ட அந்த அறுவரும் தீபாவளிக்காக இன்னும் அழுகிறார்கள்.

நாகை மாவட்டம் அக்கரைப்பட்டு கிராமம். 1500 பேர் மக்கள் தொகையில் 500 பேரைக் கடலுக்குக் காவு கொடுத்த மயான கிராமம். பேரலை ஒரு மலைப்பாம்பைப் போல விழுங்கிய நேரத்தில் பழனிச்சாமி தன் மனைவி, குழந்தையை மிகுந்த சிரமத்துடன் காப்பாற்றினார். பிறகு அந்த ஊரில் உயிருடன் எஞ்சிய மக்களுடன் பழனிச்சாமியின் மனைவியும், குழந்தையும் திருவாரூர் முகாமுக்குச் சென்று விட்டனர்.



சீனிவாசன்,
தேவனாம்பட்டினம், கடலூர்.

பழனிச்சாமி வரவில்லை. காணவில்லை - இறந்து விட்டார் என்றஞ்சிய மனைவி அருகாமைக் கரைகளில் தேட ஆரம்பித்து விட்டார். ஆனால் பழனிச்சாமி இறக்கவில்லை. குடும்பத்தைக் காப்பாற்றிய கையுடன் மீன்பிடித் தொழிலுக்குப் பயன்படும் அரைடிராயரைப் போட்டுக் கொண்டு அக்கரைப் பட்டியிலேயே சுற்றினார். இரண்டு நாட்கள் இரவு பகலாய், சோறு தண்ணியில்லாமல், தன் கிராம மக்களைக் காப்பாற்ற முடியாதா என்று வெறிபிடித்தவரைப் போல அலைந்து திரிந்தார். கடலை முறைத்தவாறு காத்திருந்தார். ஆயினும் அவரால் சில பிணங்களைத் தான் சேகரிக்க முடிந்தது.

பல கிராமங்களிலும், அவரது பிணத்தைத் தேடி சுற்றியலைந்த அவரது மனைவி இறுதியில் அக்கரைப்பட்டியிலேயே தனது கணவனை உயிருடன் கண்டு சமாதானப்படுத்தி அழைத்துச் சென்றார். திருவாரூர் முகாமிலிருக்கும் பழனிச்சாமி இப்போதும் எதையோ முறைத்தவாறுதான் இருக்கிறார்.

சுனாமி வருவதற்கு முன்பு எச்சரிக்கை செய்ய மறந்த வானிலைத் துறை அழிவு நடந்த பிறகு, ''மேலும் இரண்டு நாட்கள் சுனாமி சீற்றம் இருக்கும், யாரும் கடலுக்குப் போக வேண்டாம்'' என எச்சரிக்கை செய்தது. உயிரைக் காப்பாற்ற வராத அரசின் நிர்வாகம், பின்பு பிணங்களை சேகரிக்க முனைந்தபோது இந்த அறிவிப்பினால் மீட்புப் பணிகளையும் நிறுத்தியது. கடலுக்குள் செல்ல காவல்துறையும், தீயணைப்புத் துறையும் மறுத்துவிட்டது. உயிர்களைத் தான் காப்பாற்ற முடியவில்லை, உடல்களையாவது மீட்டெடுத்து அடக்கம் செய்ய வேண்டும் என்று துடித்த கடலூர் மீனவர்கள் பலர், தங்கள் உயிரைப் பணயம் வைத்து படகுகளுடன் கடலுக்குள் பாய்ந்தார்கள். இதையே கொட்டும் மழையில் நாகையிலும், குமரி குளச்சலிலும் நூற்றுக்கணக்கான மீனவர்கள் செய்தனர். இல்லையேல் பல உடல்கள் ஆழ்கடலில் அடித்துச் செல்லப்பட்டிருக்கும் அல்லது அக்கக் காகப் பிய்த்தெறியப்பட்டிருக்கும்.

கன்னியாகுமரியின் பிரபலமான முக்கடல் சங்கமிக்கும் சங்கிலித் துறை. 'இந்துக்கள்' புனித நீராடும் படித்துறை. ஐயப்ப பக்தர்கள் 25 பேர் நீராடிய போது பாய்ந்து வந்த சுனாமி அவர்களை இழுத்துச் சென்றது. ஏற்கெனவே

**"என்ன செய்வது என்று தெரியாத நேரத்தில் உயிரை வெறுத்துத்தான் கடலில் குதித்துச் சிலரைக் காப்பாற்றினோம்!"**



படிப்பகம்

www.padippakam.com



பாறைக்குக் கீழே ஆழமும் அலைகள் அதிகமும் இருக்கும். அந்த இடத்தில் நீச்சல் தெரிந்தவர்கள் விழுந்தாலும் பிழைக்க முடியாது. அதனால்தான் சங்கிலி கட்டப்பட்டு அதற்குள்தான் நீராட வேண்டும். பாறைகள் அதிகமிருக்கும் அந்த இடத்தில் சம்பவம் நடந்த உடனே மீனவர்கள் கடலில் குதித்துச் சிலரைக் காப்பாற்றினர். ''என்ன செய்வது என்று தெரியாத நேரத்தில் உயிரை வெறுத்துத்தான் கடலில் குதித்துக் காப்பாற்றினோம்'' என்றார் அவர்களிலொருவர். இதே நேரத்தில் சற்று தூரத்தில் இருக்கும் விவேகானந்தர் பாறையில் 300-க்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் இருந்தனர். அலையடித்த பிறகு அரசு படகுப் போக்குவரத்து ஊழியர்கள் அகன்று விட்டனர். மீட்பவர் யாருமில்லை.

குமரி மாவட்ட எல்லையிலிருக்கும் விஜய நாராயணபுரத்திலிருக்கும் கப்பற்படைத் தளத்திலிருந்து வந்த ஹெலிகாப்டர் பாறையைச் சுற்றி வந்து, உணவு, நீர்ப் பொட்டலங்களை வீசியதே தவிர யாரையும் காப்பாற்ற முடியவில்லை. ஆனல் வந்தார்கள் குமரியின் வீரமிக்க அந்த மீனவர்கள். சிறு படகுகளில் பாறைக்குச் சென்று பத்து, பத்து பேராக மீட்டுக் கொண்டு வந்தனர். பிரம்மாண்டமான விவேகான்ந்தர், திருவள்ளுவர் சிலை பாறைகளின் பின்னணியில், பேரிரைச்சலுடன் வீசிய கடல் அலையை எதிர்த்து சிறு படகில் பயணிகளை அமர்த்தி நின்று கொண்டே படகைச் செலுத்திய அந்த மீனவர்களின் காட்சி, கோழையைக் கூட வீரனாக்கும்.

இப்படி உயிர் காத்த இந்த மீனவர்கள்தான் விவேகானந்தர் படகுத் துறைக்கு அருகே ஆக்கிரமித்திருக்கிறார்கள் என்று ஆர்.எஸ்.எஸ். அமைப்பும், அரசாங்கமும் அவர்களைப் பல்வேறு வகைகளில் தொல்லை செய்து வந்தது. குமரி மாவட்டம் முழுவதும் மீனவர்கள் அனைவரும் கிறித்தவ மதத்தினர்தான். இந்த விவேகானந்தர் பாறைதான் முன்பு குருசடிப் பாறையாக இருந்து 60-களில் ஆர்.எஸ்.எஸ்.ஆல் ஆக்கிரமிக்கப்பட்டது. குமரி நகரின் பல பத்து ஏக்கர் நிலங்களை வளைத்து சிறு நகரையே விவேகானந்த கேந்திரம் என்று ஆர்.எஸ்.எஸ். உருவாக்கியிருக்கிறது. இதில் சப்பாத்தியும் வெண்ணெயும் உண்டு கொழுத்து வெள்ளையும் சொள்ளையுமாய்ச் சேவையாற்றும் விவேகானந்த தொண்டர்கள் எவரும் பாறைக்கு வந்த பயணிகளைக் காப்பாற்ற வரவில்லை. அந்தோணிசாமியும், அம்புரோசும்தான் காப்பாற்றினார்கள்.



அருள், சாமியார்பேட்டை, கடலூர் (இடது);
விக்கிரமாதித்தன், தேவனாம்பட்டினம், கடலூர் (வலது)

மீனவர்கள் பலமணி நேரம் போராடி பயணிகளைக் காப்பாற்றிய பிறகே போலீசு வந்தது.

கேரளத்தின் கொல்லம் நகரருகே இருக்கும் ஆழிக்கல் மீனவ கிராமத்தில் 130 மக்கள் பலியாகினர். அதில் பலர் பெண்கள். காரணம் முதலில் தங்கள் குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டும் என்று முயன்றார்கள். ஆம். தமிழகக் கடற்கரையில் பலியானோரிலும் கணிசமானோர், காப்பாற்ற முயன்றோர் தான். ஒவ்வொரு கிராமத்திலும் வீரமணி, தீபாவளியைப் போன்று பலரும் உயிர் துறந்திருக்கின்றனர்.

நீங்கள் படித்த இத்தனைச் சம்பவங்களும் சுனாமியலை அடித்த ஒரு சில நிமிடங்களில் நடந்தவை. உங்கள் வாழ்க்கையில் ஒரு சில நிமிடங்களில் சாதாரண நடைமுறை வேலைகளைக் கூடச் செய்ய முடியாது. இரண்டு நாட்களாகியும் அசைந்து கொடுக்காத இராணுவம், போலீசை வைத்திருக்கும் நாட்டில் 2 நிமிடங்களில் தன்னுயிரைப் பணயம் வைத்துப் பலரைக் காப்பாற்றியதை நீங்கள் கருதுவது போல மீனவர்கள் ஒரு அரிய செயலாகக் கருதுவதில்லை. சின்னத்தம்பி கூறியபடி தண்ணீரில் தத்தளிப்பவர்களைக் காப்பாற்றுவது ஒரு மீனவனுக்கு இரத்தத்தில் ஊறிய விசயம். அதனால்தான் இந்தப் போராளிகள் தம்மால் காப்பாற்ற இயலாத ஆயிரக்கணக்கான உயிர்களுக்காக இன்னமும் அழுகிறார்கள்.

வீரத்தையும், தீரத்தையும், சோகத்தையும் சினிமாவிலும், சீரியலிலும் கண்டு மயங்கியிருக்கும் உங்கள் கண்கள் சுனாமி அலையை தீரத்துடன் எதிர்த்துப் போராடிய இந்த மாவீரர்களின் உண்மைக் கதைகளைப் பார்த்தாவது திருந்தட்டும். இந்த வீரத்திற்கு துணிமணி, அரிசி, பணம் மட்டும் கொடுத்து மரியாதை செய்வது அவமானம். குடும்பத்தையும், தொழிலையும் பறிகொடுத்து ஆதரவற்றோராய் இருக்கும் இம்மக்களுடன் ஓரிரு வாரங்களாவது தங்கி நிவாரணப் பணிகள் செய்து கூடவே ஆறுதல் தர முயலுங்கள். பெற்றோரை இழந்து நூற்றுக்கணக்கில் அனாதைகளாக இருக்கும் குழந்தைகளைத் தத்தெடுத்து வளருங்கள். உண்மையான வீரத்திற்கு இதைவிடக் குறைவான மரியாதை செய்வது என்பது சாத்தியமில்லை.

வீரத்தை உரிய முறையில் பாராட்டுவதினூடாகத்தான் வீரத்தின் இலக்கணத்தை நாம் உணர முடியும். ஆம். வீரம் என்பது சக மனிதர்களைக் காப்பாற்ற எதை, எப்போது, எப்படிச்செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்வது தான். அவர்கள் செய்திருக்கிறார்கள். நீங்கள்? ●

**வீரத்தை, தீரத்தை, சோகத்தை — சினிமாவிலும் சீரியலிலும் கண்டு மயங்கிய உங்கள் கண்கள், இந்த உண்மைக் கதையைப் பார்த்தாவது திருந்தட்டும்!**



படிப்பகம்

www.padippakam.com



# பாத்துப் போங்கோ... அது... அவாள் எடம்!

● என்ன மாமு! பெரிய சாமி படா கில்லாடியா கீது! நாம இங்க முட்டி செத்துப் போய் கீறோம்... சாமீ இன்னாடான்னா.. பூ கொடுக்றேன், ஆசீர்வாதம் கொடுக்றேன்னுட்டு, ஊரான் பொண்டாட்டி, பொண்ணு, ஆயான்னு அல்லாருக்கும் ரூட் போட்டு 'குஜால்' பண்ணிகீது! மேட்டரு படா சோக்காகீது பாத்தியா...?

☐ தோடா... சாமி இப்டி அநியாயமா ரவுடி மாரி கொலை பண்ணலாமான்னு கேளு. அது நாயம். ஒண்ணுக்கு போலாமா, ரெண்டுக்குப் போலாமான்னு கேக்குற! அறிவு கீதா உனுக்கு?

● நான் இன்னா கேக்குறேன், நீ இன்னா சொல்றே? ஒண்ணும் புர்லியா?

☐ புரியாம இன்னா? முதல்ல உன் முதுவுல கீற அழுக்க கழுவு. அப்பால சாமியப்பத்திப் பேசு. ரேசன் அரிசிய துண்ட்டு பன்னிக் குட்டி மாரி பெத்துப் போட்டுக்கினே கீற. நீ முருங்க குச்சி மாரி கீற. உனுக்கே இவ்ளோ கீதே, ஜெகத்குருன்னா சொம்மாவா? உன்ன மேரி ரிக்ஸா மெறிக்கிற வேலயா? யாரானாலும் அட்தவன் கஸ்டம் புரியாம கலாய்க்கக் கூடாது.

● தூ.. வாயக் கழுவு, சாமியாரா அவன்? மூஞ்சப் பாரு. அறுத்துப் போட்ட பன்னி மாரி. நம்ம டி.வி. அட்டேஸ்மென்ட்ல ஒரு பொடி பையன் சொல்வானே ''ஆர் லீக்ஸ்னா நா அப்டியே சாப்டு வேன்னு'' அதமேரி ஆர்லிக்ஸ் மாமியவே அப்டியே சாப்ட்டுகிறான். அது போவுதுபா, ஊர்கோலம் மாரி, சீரங்கம் உஷா, ஜெயா, மைதிலி, அனுராதாக்கா.. அப்பாலிக்கா... நம்ம சொர்ணமாலியா... நல்லா மேய்ஞ்ச்சிக்கிறான் மாமூ...!

☐ வாயை மூடு! மேய்ஞ்சிகிறான், கீஞ்சுகிறான்னு சொல்லாதே! 'என்ன வுடுங்கடா, நா எங்கன்னாப் போய்... மேய்ஞ்சிக்கேறேனு' அந்தாளு ஓட்னானுல்ல, வுட்டான்களா? எஸ்கேப் ஆனவனையும் புட்ச்சி இட்டாந்து அடைச்சு வச்சா இன்னாடா பண்ணுவான்? பால் குடி, தயிர் குடி, முந்திரி துண்ணு, பிஸ்தா துண்ணு, பழம் துண்ணு... ன்னு, அவன் வாயீ, வவுறு... சந்து... பொந்து எல்லாத்திலயும் வெடி மருந்த திணிச்சுட்டு... இப்ப வெடிச்சிருச்சி.. வெடிச்சிருச்சின்னு அலறுனா... அவன் இன்னாடா பண்ணுவான்?

● அதுக்காக ஊர் மேய சொல்லுதா? அம்மகுண்டியா குந்திகினு ஒரு பொம்பிளய கூப்டலாமா? மாமிங்க பாவம் ரத்தகதி ரணகதி ஆயி அலறுதுங்கோ. நீ சாமியாருதான, அதான் உனுக்கு அத்து வைத்தியமோ, சித்த வைத்தியமோ ஏதோ ஒண்ணு வச்சிருக்கீல்ல, அத்த வச்சி சமாளிக்க வேண்டியத்தானே!

☐ கம்னு கெட.... அதுபேரு அத்துவைதம். பெரீய்ய விசயம்லாம் இன்னான்னு புரியாம பேசக்கூடாது. அத்துவைதம் அப்படின்னா... நீ... நானு.. இந்த சாராயம்... கோட்டரு... ஆம்பள... பொம்பள... ஏணி... எருமாடு எல்லாம் மாயைன்னு அருத்தம். அவன் கரீட்டா தான் எல்லாத்தையும் பாத்துக்கிறான்.. அப்புக்கும்.. அப்துல்கலாமுக்கும் ஒரே மாரிதான் ஆசீர்வாதம் குடுத்துக்கிறான். அத்த யாரும் கேக்க மாட்றான். பொம்பள மேட்டர மட்டும் ஏண்டா கொடயிறீங்க? சொர்ணமால்யா பொண்ணு மாரி, அனுராதா தங்கச்சி மாரி - அப்படீன்னு அவன் வித்யாசம் பாக்கிற தில்ல. நீ ஏன் பாக்கிற?

● அது இன்னா மாயையோ இன்னா எளவோ! கருவாட்டுக்கு அலயிற பெருச்சாளி மாறி கல்யாணம் ஆன மாமிங்களா பாத்து கலாஞ்சியிருக்கிறான். நம்மள தேவ்டியாளுக்கு பொறந்தவனுங் கோன்னு சொல்றானே, எதுக்குடா சொல்றான்னு ரோசனை பண்ணி ரோசனை பண்ணி பாத்திருக்கேன். இப்பதான் தெர்து. ஊரான் பொண்டாட்டியா பாத்து தேடித் தேடி மேஞ்சிருக்கானே, அவுனுக்கு அல்லா பொம்பளையும் தேவ்டியாளாத்தான் தெரியும். நல்ல வேளை மாமு. நம்மள்ளாம் சுத்தமில்லன்னு வுட்டான். சுத்தமான மாமிங்கதாம்பா பாவம்!

☐ இன்னாடா பாவம்? யார்னா அந்த சாமியாருக்கு நேந்த பாவத்த நெனச்சி பாத்தீங்களா? மூணு வேளை முனியாண்டி விலாஸ் பிரியாணி துண்ட்டு நீ மூடிக்னா இருப்பே? அவன் துண்ற அயிட்டம் எல்லாம் என்னா வெள்ளாட்டா? ஒரு சித்த வைத்தியங்கிட்ட போய் கேட்டுப் பாரு... பலான.. பலான அயிட்டம் துண்ணா அவன் கதி இன்னாவுண்ணு கேளு! கன்ட்ரோலு பண்ண முடியுமான்னு கேளு.

● புலி குகைக்குள்ளார போயிட்டு புடிங்கிடுச்சி.... புடிங்கிடுச்சி.. ன்னா? அங்க ஏன் நீ போறே அப்படீன்னு அந்த மாமிங்கள... யாராவது கேட்டீங்களா?

☐ ஆனந்த விகடன், கல்கீன்னு எல்லா பொஸ்தகத்திலியும் சாமி மூஞ்சில அருள் தெரியுது, அது தெரியுதுன்னு வேற எழுதி வுட்றான். அதப் படிச்சி படிச்சி மாமிங்க பேஜாராயிட்டாங்கோ... சாமிய சுத்தி பிகருங்கள நிக்கவுட்டு தொடக்கூடாது, படக்கூடாதுன்னா மன்சன் இன்னாடா பண்ண முடியும்?

● நீ சாமியாருதான. போக வேண்டிய தானே... பட்னத்தாரு. வள்ளலாரு மாரி.

☐ வுட்டாதானே! அப்புறம் 6000 கோடி சொத்த ஆரு நிர்வாகம் பண்றது? நீயும் நானும் பண்ண முடியுமா? இப்பகூட பாப்பாரப் பசங்க இன்னா சொல்றானுங்க? சாமி ஆஸ்பத்திரி கட்னாரு, காலேஜ் கட்னாருன்றான். இந்த வேலைய செய்யறதுக்கு ஏன்டா சாமி? இந்த வேலையத்தான் சினிமாக்காரன் விஜயகாந்தும் சாராய உடையாரும் செய்றானுங்களே...

● அவுங்க செய்யிற அல்லா வேலையும் செய்யணுமாம். அவனுகள மாரியே புல்லா துன்னனும். ஏசி ரூம்ல தூங்கணுமாம். ஆனா ***அது*** மட்டும் கூடாதாம். இன்னாடா நாயம் பேசுறீங்க?

● பச்சையப்பன்



படிப்பகம்

www.padippakam.com



# ஜெகத்குரு ஜெயலலிதேந்திர ஸரஸ்வதி!

சங்கராமனைக் கொலை செய்தது ஜெயேந்திரன்தான் என்பது உண்மையே ஆனாலும், அதற்கு எப்பேர்ப்பட்ட அசைக்க முடியாத ஆதாரங்கள் இருந்தாலும் ஜெயேந்திரனைக் கைது செய்யுமாறு ஜெயலலிதா எப்படி உத்திரவிட்டிருக்க முடியும்?

ஆர்.எஸ்.எஸ். எதிர்ப்பாளர்களையும் ஆர்.எஸ்.எஸ்.காரர்களையும் ஒரே நேரத்தில் குடைந்து வரும் கேள்வி இது. ''இதிலென்ன ஆச்சரியம்? என்னுடைய ஆட்சியில் எப்போதுமே சட்டத்தின் முன் அனைவரும் சமம்தான்'' என்று ஒரு விஷமப் புன்னகையுடன் இதற்குப் பதிலளிக்கிறார் புரட்சித் தலைவி.

விசாரணையின் பரப்பு அதிகரித்துக் கொண்டே செல்வதால் ''இதில் வேறு ஏதோ உள்நோக்கம் இருக்க வேண்டும்'' என்று ஐயம் எழுப்புகிறார் கருணாநிதி. ''ஆமாம்'' என்று வேறு ஒரு முனையிலிருந்து இதனை ஆமோதிக்கிறார் இல. கணேசன். ஜெயலலிதாவின் உள்நோக்கம் குறித்த பேச்சு தவிர்க்கவியலாமல் ஜெயேந்திரனுக்குச் சாதகமாக அமைகிறது.

மாறாக, ''சட்டத்தின் முன் அனைவரும் சமம்'' என்ற ஜெயலலிதாவின் கூற்றை நாம் ஆமோதித்தாலோ, இந்தக் கைது நடவடிக்கையின் அரசியல் ஆதாயம் அனைத்தையும் புரட்சித் தலைவியின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்க வேண்டியதாகிறது.

''ஜெயலலிதா எந்த நோக்கத்திற்காகக் கைது செய்திருந்தாலும், சங்கராமன் எந்த நோக்கத்துக்காக ஜெயேந்திரனை அம்பலப்படுத்தியிருந்தாலும் அதன் விளைவு பார்ப்பன எதிர்ப்பாளர்களுக்கும், பகுத்தறிவாளர்களுக்கும் சாதகமாக அமைந்திருக்கிறதா இல்லையா? இதற்கு மேல் இதனைத் துருவி ஆராய்வதால் நமக்கென்ன பயன்?'' என்ற கேள்வி எழலாம்.

ஓரளவிற்கு, ஓரளவிற்கு மட்டுமே இந்தப் பார்வை சரியானது. ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த இரு நபர்களிடையே தோன்றும் முரண்பாடுகளுக்குக் காரணமான திரைமறைவு இரகசியங்களை நாம் அறிவது சாத்தியமில்லை என்ற எதார்த்த நிலையின் காரணமாக, வேறு வழியின்றி வேண்டுமானால் நாம் இந்த முடிவுக்கு வரலாம்.

ஆனால் ஜெயலலிதாவின் நேர்மை மற்றும் நடுநிலை குறித்து உருவாக்கப்படும் பிரமைகளைத் தகர்க்க வேண்டுமானால், சங்கரமடம் என்ற பார்ப்பனக் கோட்டையைத் தகர்ப்பதை நோக்கி மக்களை நாம் அணிதிரட்ட வேண்டுமானால், இந்த **'ஆச்சரியப்படத்தக்க'** நிகழ்வு எப்படிச் சாத்தியமானது என்பதை நாம் புரிந்து கொள்வது அவசியம்.

சங்கரமடம் எனும் ஆளும் வர்க்கத்தின் ஆன்மீக அடியாட்படையை சாதி ரீதியாகவும் வர்க்க ரீதியாகவும் ஒடுக்கப்படும் மக்கள் தமது சொந்தப் போராட்டத்தின் மூலம் நிர்மூலமாக்கியிருக்க வேண்டும். அதைச் செய்வதற்குத் தேவையான விழிப்புணர்ச்சியோ, அரசியல் ரீதியான உந்துதலோ ஊட்டப்படாத மக்கள் திரளின் மடியில் 'யாரோ' அடித்த கல்லால் இந்தக் கனி விழுந்திருக்கிறது.

சங்கரமடத்தின் ஊழல்கள் நாளுக்கொன்றாய் ஊர்வலம் வந்தபோதும் ஒரே ஒரு கல் கூட சங்கரமடத்தின் மீது மக்களால் எறியப்படவில்லை. ஜெயலட்சுமி விவகாரம் போலவே ஜெயேந்திரன் விவகாரமும் டீக்கடை அரட்டைக்குகந்த நொறுக்குத் தீனியாகவும், பரபரப்பு இதழியத்திற்கு அடித்த பரிசாகவும் மாறி வருகிறது.

ஜெயலட்சுமி விவகாரத்திலாவது 'பாதிக்கப்பட்ட' போலீசு அதிகாரிகள் சார்பில் யாரும் உண்ணாவிரதமோ, ஆர்ப்பாட்டமோ நடத்தவில்லை. ஆனால் 'பாதிக்கப்பட்ட' ஜெயேந்திரருக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறது ஆர்.எஸ்.எஸ். அதையும் மவுனமாக வேடிக்கை பார்த்தபடியே நகர்ந்து கொண்டிருக்கிறது தமிழ்ச் சமூகம்.

அமெரிக்க ஜனாதிபதியை**யே** கூண்டில் ஏற்றிய மோனிகா லெவின்ஸ்



படிப்பகம்

www.padippakam.com

**கொலைக் குற்றத்துக்காக சங்கராச்சாரியைக் கைது செய்தே ஆக வேண்டும் என்று நிர்ப்பந்திப்பதற்கான புறச்சூழல் எதுவும் தமிழகத்தில் இல்லை.**

கியின் குற்றச்சாட்டு, லட்சக்கணக்கான டன் காகிதத்தையும் ஆயிரக்கணக்கான மணிநேர தொலைக்காட்சி நேரத்தையும் விழுங்கிச் செரித்த பிறகு, அதையே அமெரிக்க 'ஜனநாயகத்திற்கு'ச் செறிவூட்டப்பட்ட அடியுரமாக மாற்றித் தந்தது. "அதிபராகவே இருந்தாலும் அமெரிக்க ஜனநாயகத்தில் சமம்தான்" என்ற பொய்யான பொதுக்கருத்தை அந்தப் பரபரப்பின் முடிவில் அறுவடை செய்து கொண்டது அமெரிக்க ஆளும் வர்க்கம்.

ஜெயேந்திரன் கைது விவ்காரம் இந்திய ஜனநாயகம் குறித்த புதியதோர் மாயையை உருவாக்கப் போதுமானதில்லையெனினும் ஜெயலலிதாவின் துணிச்சல் குறித்த மாயையை இது மக்கள் மத்தியில் மேலும் வலுப்படுத்தியிருக்கிறது. **'பார்ப்பன** ஜெயலலிதா' என்ற மதிப்பீட்டின் மீதான நம்பிக்கையைப் பலவீனப்படுத்தியுமிருக்கிறது.

"நான் ஒரு பாப்பாத்திதான்" என்று சட்டமன்றத்திலேயே அறிவித்துக் கொண்ட ஜெயலலிதா, சங்கரமடத்துடனும் பார்ப்பனப் பாசிசக் கும்பலுடனும் மிகவும் நெருக்கமாக இருந்து மதமாற்றத் தடை, கிடா வெட்டத் தடை, அன்னதானம் எனப் 'பெரியவாளின்' மனதிற்குகந்த நடவடிக்கைகளை அவாளே ஆச்சரியப்படும்படியான வேகத்தில் செய்து காட்டிய ஜெயலலிதா அந்தப் பெரிய'வாளையே' கைது செய்ய உத்தரவிட்டது எப்படி?

இந்தக் கேள்விக்கான விடையும், ஜெயலலிதாவின் துணிச்சல் அல்லது பிடிவாதம் என்றழைக்கப்படும் குணாதிசயத்திற்கான விளக்கமும் பிரிக்க முடியாதபடி பிணைந்துள்ளன. இதனைப் புரிந்து கொள்வதன் மூலம்தான் இந்தச் 'சாகச' நடவடிக்கையின் அரசியல் பயனை ஜெயலலிதா அறுவடை செய்து கொண்டு விடாமல் தடுக்க இயலும்.

ஆளும் வர்க்கத்தின் இரு பிரிவினரிடையே அல்லது இரு நபர்களிடையே முரண்பாடும் மோதலும் தோன்றுவது நாம் இதுவரை கண்டிராத அதிசயமல்ல. கண்முன்னே நாம் காணும் அம்பானி சகோதரர்களின் சொத்துத் தகராறு, இதற்கு முன் நிகழ்ந்த அம்பானி-வாடியா மோதல், ஆளும் வர்க்கக் கட்சிகளான பா.ஜனதா - காங்கிரசுக்கிடையிலான மோதல், 'கட்டுப்பாட்டுக்குப் பெயர் போன' பாசிசக் கட்சியான பா.ஜனதாவிற்குள்ளேயே நாம் காணும் மோதல்கள், சமீபத்திய உமா பாரதி விவகாரம் - இவையெல்லாம் சில சான்றுகள்.

முதலாளித்துவ வர்க்கத்தினரிடையே நிலவும் போட்டி மற்றும் பகைமையின் உருத்திரிந்த வடிவங்கள் இவை. "பிரபலமான பார்ப்பன மடாதிபதி ஒருவரைக் கைது செய்யுமாறு ஒரு பாப்பாத்தியே எங்ஙனம் உத்திரவிட்டிருக்க இயலும்?" என்று ஜெயலலிதாவின் சாதியப் பரிமாணத்தை மட்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்வரை இந்தப் புதிருக்கு விடை காண முடியாது.

ஜெயலலிதாவால் தலைமை தாங்கப்படும் அ.இ.அ.தி.மு.க. ஒரு ஆளும் வர்க்கக் கட்சி என்பதை விளக்கத் தேவையில்லை; ஆனால் அது 'ஆளும் வர்க்கங்களின் அறிவுபூர்வமான பிரதிநிதிகள்' என்ற பொருளில் பொருந்தி வரும் காங்கிரசு, பா.ஜனதா, ஜனதா போன்ற கட்சிகளையொத்த ஆளும் வர்க்கக் கட்சியல்ல. ஆளும் வர்க்கங்களின் நலனையே மக்கள் நலனாகச் சித்திரிக்கும் கொள்கைகளோ, திட்டமோ, திசைவழியோ தேவைப்படாத போனபார்ட்டிஸ்ட் கட்சி.

"நாய் என்றால் வால் இருக்க வேண்டும். கட்சி என்றால் கொள்கை தேவை" என்ற சம்பிரதாயத்தையொட்டி எம்.ஜி.ஆரால் உருவாக்கப்பட்ட அண்ணாயிசம், போனபார்ட்டிசத்தின் தமிழ்வடிவம். இன்று 'புரட்சித் தலைவியே கட்சி, அவரது புகழே கொள்கை, அவரது வாய்மொழியே சட்டம்' என்று மேற்படி கொள்கை மேலும் துலக்கம் பெற்றிருக்கிறது.

"எங்கள் கட்சியில் புரட்சித் தலைவி மட்டுமே ஒன்று, நாங்களெல்லாம் பூச்சியம்" என்று பூச்சியங்களே பிரகடனம் செய்வதும், தன்னிடமிருந்து விலகியவர்களை 'உதிர்ந்த ரோமங்கள்' என்று புரட்சித்தலைவி வருணிப்பதும், உதிராமல் எஞ்சியிருக்கும் ரோமங்களே அதை ஆமோதிப்பதும் நாமறிந்த உண்மைகள்.

இத்தகைய 'ஜனநாயகபூர்வமான' ஒரு கட்சி, இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்தின் அங்கமாக அங்கீகரிக்கப்பட்டிருப்பது - அ.தி.மு.க.வின் சீரழிவுக்கல்ல - இந்த முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகத்தின் சீரழிவுக்கு ஒரு சான்று.

**ஆம்!** போனபார்ட்டிசம் என்பது முதலாளித்துவ ஜனநாயகத்தின் சீரழிந்த வடிவங்களில் ஒன்று. கொள்கைகள், லட்சியங்கள் போன்ற புனித மேலாடைகளையெல்லாம் களைந்து விட்டு "மக்களுக்கு - கவர்ச்சிவாதம், தமக்கு - அரசு சன்மானங்களை அதிவேகமாகப் பொறுக்கித் தின்னும் பிழைப்புவாதம்" என்ற இரண்டு அம்சத் திட்டத்தையே வாளாகவும் கேடயமாகவும் ஏந்திக் களத்திலிறங்கும் 'போனபார்ட்டு'கள் ஒரு வகையில் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் 'புனித' மரபை மீறும் 'கலகக்காரர்கள்'!

ஆளும் வர்க்கச் சேவைதான் இவர்களுடைய நோக்கம் என்றாலும், அத்தகைய சேவையை நேர்மையாகவும் இலட்சிய நோக்குடனும் (காமராஜ், ராஜாஜி போல) செய்ய மறுத்து ஆளும் வர்க்கத்திடமே சேவைக் கட்டணம் வசூலிப்பவர்கள். ஆளும் வர்க்க அரசியலின் அங்கீகரிக்கப்பட்ட வரம்புகளும் மரபுகளும் தமது தனிப்பட்ட நலனுடன்

**தன்னுடைய சொந்தச் சாதியினரின் தலைமைப் பீடத்துடைய புனிதத்தைக் கேள்விக்குள்ளாக்கும் விதத்தில் 'ஜெ' மேற்கொண்டிருக்கும் 'கலகத்தை'ப் புரிந்து கொள்ள வேண்டுமானால், தனது சொந்த வர்க்கத்தின் அரசியல் நிறுவனங்களுக்கு 'எதிராகவும்', அவற்றின் 'புனிதத்திற்கு' எதிராகவும் இதுகாறும் 'ஜெ' என்ற போனபார்ட் நடத்தி வந்துள்ள கலகங்களை ஒரு பறவைப் பார்வையாவது பார்க்க வேண்டும்.**



படிப்பகம்

www.padippakam.com

முரண்படும்போது அவற்றை மீறவும், இழிவுபடுத்தவும், ஏளனம் செய்யவும் துணிபவர்கள். இத்தகைய நடவடிக்கைகளின் விளைவாக எல்லா வர்க்கங்களுக்கும் அப்பாற்பட்ட, மேலானதொரு அரசியல் சக்தியைப் போன்ற தோற்றத்தை அவ்வப்போது மக்களிடையே உருவாக்க வல்லவர்கள்.

இனி, ஜெயலலிதாவிடம் திரும்புவோம். ஜெயலலிதா என்ற தனிநபரின் துணிவு அல்லது பிடிவாதம் என்று வருணிக்கப்படும் தனிப்பட்ட இயல்பு, 'போனபார்ட்டிசம்' என்றழைக்கப்படும் இழிந்த ஆளும் வர்க்க அரசியல் வடிவத்தின் மூலமாகத்தான் அரசியல் அர்த்தம் பெறுகிறது.

அதாவது 'ஜெ'-வின் இந்தத் தனிப்பட்ட குணாதிசயமானது, தன்னைப் போற்றத்தக்கதாகக் கருதும் ஒரு கட்சியையும், அங்கீகரிக்கத்தக்கதாகக் கருதும் ஒரு சமூகத்தையும், சகித்துக் கொள்ளத்தக்கதாகக் கருதும் ஆளும் வர்க்கத்தையும், நிறைவேற்றத்தக்கதாகக் கருதும் அரசு எந்திரத்தையும் பெற்றிராவிட்டால் அது அரசியல் நடவடிக்கையாக மாறமுடியாது என்று பொருள்.

போனபார்ட்டிசம் என்ற சொற்றொடரின் பொருளை விளங்கிக் கொள்வதற்கு வாசகர்களுக்கு உதவும் பொருட்டுத்தான் மேற்கூறிய விளக்கத்தை எழுத நேர்ந்தது. இத்தகைய விளக்கத்தினை அவசியமற்றதாக்கும் விதத்தில் - *தன்னை நெப்போலியனுடன் ஒப்பிட்டுக் கொண்ட லூயி போனபோர்ட்டிற்குச் சற்றும் குறையாத விதத்தில்* - 'தன்னுடைய நினைவாற்றல் நெப்போலியனுக்கு இணையானது' என்ற இரகசியத்தை சமீபத்தில்தான் தமது விசுவாசிகளுக்கு வெளிச்சமாக்கியிருக்கிறார் ஜெயலலிதா.

தன்னுடைய சொந்தச் சாதியினரின் தலைமைப் பீடத்துடைய புனிதத்தைக் கேள்விக்குள்ளாக்கும் விதத்தில் 'ஜெ' மேற்கொண்டிருக்கும் 'கலகத்தை'ப் புரிந்து கொள்ள வேண்டுமானால், தனது சொந்த வர்க்கத்தின் அரசியல் நிறுவனங்களுக்கு 'எதிராகவும்', மரபு எனும் சாம்பிராணிப் புகையால் பாதுகாக்கப்படும் அவற்றின் 'புனிதத்திற்கு' எதிராகவும் இதுகாறும் 'ஜெ' என்ற போனபார்ட் நடத்திவந்துள்ள கலகங்களை ஒரு பறவைப் பார்வையாவது பார்க்க வேண்டும்.

●●●

**ச**மீபத்திய ஆளுநர் நியமன விவகாரத்திலிருந்து துவங்குவோம். மாநில முதல்வரைக் கலந்தாலோசனை செய்வதென்ற 'மரபை' மைய அரசு மீறிய போது தன்னுடைய எதிர்ப்பை 'மரபு வழியில்' அவர் பதிவு செய்யவில்லை. சிவராஜ் பாடீலின் தொலைபேசி உரையாடலைப் பதிவு செய்தார்; ஒரு மரபு மீறலுக்கு இன்னொரு மரபு மீறல் மூலம் பதிலடி கொடுத்தார். பிறகு இரகசியக் காப்பு எனும் 'மிகப்புனிதமான மரபை'யே நையாண்டி செய்யும் விதத்தில் அந்த உரையாடலை அப்படியே வெளியிட்டு, தன்னுடன் தொலைபேசியில் 'காதும் காதும் வைத்தாற் போல்' பேசியதாக நம்பிக் கொண்டிருக்கும் எல்லா ஆளும் வர்க்கக் கனவான்களுக்கும் திகிலூட்டினார்.

ஜெயேந்திரருக்கு ஆதரவாகத் தொலைபேசியில் பேசவிரும்பிய ராஜசேகர் ரெட்டியின் கருத்தை அவர் தொண்டைக்குழியில் வைத்தே தணிக்கை செய்தார்.

**சங்கரமடத்தின் ஊழல்கள் நாளுக்கொன்றாய் ஊர்வலம் வந்தபோதும், ஒரே ஒரு கல் கூட சங்கர மடத்தின் மீது மக்களால் எறியப்படவில்லை. ஜெயலட்சுமி விவகாரம் போலவே ஜெயேந்திரன் விவகாரமும் டீக்கடை அரட்டைக்குகந்த நொறுக்குத் தீனியாகவும், பரபரப்பு இதழியத்திற்கு அடித்த பரிசாகவும் மாறி வருகிறது.**



தொலைக்காட்சிப் பேட்டியில் தன்னை மடக்கி மதிப்பிழக்கச் செய்த பிரபல பத்திரிகையாளர் கரன் தாப்பரை காமராவின் முன்னிலையிலேயே கணக்கு தீர்த்தார். ''உங்களைச் சந்தித்ததில் மகிழ்ச்சி'' என்று பேட்டியின் முடிவில் அவர் கூறிய உபசார வார்த்தையை மறுத்து ''எனக்கு மகிழ்ச்சியில்லை'' என்று கூறியதன் மூலம் பழம் பெருமை மிக்க விக்டோரிய மரபைத் தகர்த்தார்; ''ஆங்கிலத்தில் பேசுவதால் என்னை சீமாட்டி என்று 'மலிவாக' எடை போட்டாயோ?'' என்று கரண் தாப்பருக்கு சூடு வைத்ததுடன் ஆங்கில அறிவு ஜீவிப் பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் பீதியூட்டினார்.

அநாமதேயங்களான தனது அமைச்சர்கள் மீதும், ஐ.ஏ.எஸ். - ஐ.பி.எஸ். படித்த அதிகார வர்க்கத்தின் மீதும் பாரபட்சமின்றி நிலையாமைத் தத்துவத்தைத் திணித்ததன் மூலம், அப்பதவிகளுக்குரிய கவுரவத்தை நிரந்தரமாகப் பிடுங்கி, தனது சொந்த ஆகிருதியை மேலும் உப்ப வைத்துக் கொண்டார். முதலாளித்துவ ஜனநாயக அமைப்பைப் பாதுகாக்கும் 'இலட்சிய வேட்கை' கொண்ட சில அதிகாரிகளிடமிருந்தும் அதை உறிஞ்சி, தன்னுடைய பதவியைப் பாதுகாத்துக் கொள்ளும் கவலை மட்டுமே அவர்களிடம் எஞ்சியிருக்குமாறு பார்த்துக் கொண்டார்.

நீதித்துறையின் கவுரவம் மற்றும் சர்வவல்லமை குறித்த தப்பெண்ணங்களைத் தகர்க்கும் விதத்தில் உயர்நீதி மன்றத்தின் சந்நிதானத்திலேயே தனது மகளிரணியை டான்ஸ் ஆடச் செய்தார். நீதிபதிகளின் முகத்துக்கு முன்னால் சூட்கேஸ்களையும் முதுகுக்குப் பின்னால் உளவுத்துறையையும் ஒரே நேரத்தில் ஏவிவிட்டு அவர்களை ஊசலாட வைத்தார். சக்கர நாற்காலியில் தோழியை அமர்த்தி சட்டத்தின் சந்துகளில் உலா வரச் செய்தார். ''நீதியின் எல்லை ஆளும் வர்க்கத்தின் மனச்சாட்சியில் முடிவடைகிறது'' என்ற உண்மையை உச்சநீதி மன்றத்தின் வாயாலேயே (டான்சி வழக்கில்) ஒப்புக் கொள்ள வைத்தார்.

பீகாரின் கண்காணாத கிராமங்களில் நடைபெறுவதாகத் தமிழகம் கேள்விப்பட்டிருக்கும் வாக்குச்சாவடிக் கைப்பற்றலை, சென்னை மாநகரத்தில் தொலைக்காட்சிக் காமெராக்களின் முன்னிலைலேயே நடத்திக் காட்டினார். ''ஓட்டுப் போட விரும்பும் மக்கள்



படிப்பகம்

www.padippakam.com

கூட தங்களது ஜனநாயக உரிமையை நிலைநாட்டிக் கொள்ள ஆயுதமேந்தியாக வேண்டும்'' என்ற உண்மையை, புரட்சியாளர்களே பொறாமைப்படும் வேகத்தில் மக்களுக்கு உணர்த்திக் காட்டினார். காந்தி, நேரு, அண்ணாவின் வரிசையில் தேசியத் தலைவராகி மறைய விரும்பும் கலைஞரையும், மடிந்தாலும் சட்டமன்றத்துக்குள்ளேயே மடிய விரும்பும் அவரது கட்சியினரையும் சாத்தான்குளத்தில் தேர்தல் புறக்கணிப்பை நோக்கி நெட்டித் தள்ளினார்.

லாப வேட்டை எனும் தன்னுடைய இழிந்த நோக்கத்தை மறைத்துக் கொள்வதற்கு முதலாளி வர்க்கம் பயன்படுத்தும் சொற்றொடர்களான ''தேசநலன், தொழில் முன்னேற்றம், பொருளாதார வளர்ச்சி, வேலை வாய்ப்பு'' போன்ற மேக்கப் சாதனங்களால் புரட்சித் தலைவியை எந்த முதலாளியும் ஏமாற்ற முடிந்ததில்லை. 'ராயனுக்கு உரியது ராயனுக்கு' என்ற தனது சட்டத்தின் முன், பன்னாட்டு முதலாளிகள் முதல் பிளாஸ்டிக் வியாபாரிகள் வரை அனைவரும் சமமே என்பதை அவர் நிரூபித்தவண்ணமிருக்கிறார். தாங்களே உருவாக்கிய முதலாளித்துவ ஜனநாயகம் எனும் மாயைக்கு ஆட்பட்டு சில முதலாளிகள் லஞ்ச ஊழலை எதிர்த்துப் 'பிதற்றும்' தருணங்களிலும், அவர்களைத் தடுத்தாட்கொண்டு 'ரொக்கப்பட்டுவாடாவைத் தவிர்த்த உன்னத உறவெதுவும் நமக்கிடையே இல்லை' என்ற உண்மையை அவர்களுக்குப் புரியும் விதத்தில் உணர்த்தியிருக்கிறார்.

உயர்குடி மக்களின் விருந்துகளிலும் தனிப்பட்ட சந்திப்புகளிலும் வழக்கமாக அங்கீகரிக்கப்படும் 'மேன்மக்களின் சில்லறைத் தனங்களை' அவர் சந்திக்கு இழுத்திருக்கிறார். ''கவர்னர் முதல்வரின் கையைப் பிடித்து இழுத்தார்'' என்ற குற்றச்சாட்டை மறுக்கவும் முடியாமல் மழுப்பவும் முடியாமல் சென்னாரெட்டியை முக்காடுபோட்டு ஓடச்செய்தார்.

காவிரிப் பிரச்சினைக்காக முதல்வர் பதவியிலிருந்தபடியே உண்ணாவிரதமிருந்ததன் மூலம் மத்திய - மாநில அரசுகளுக்கிடையிலான முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ளும் சட்டபூர்வமான மற்றும் மரபு வழிப்பட்ட வழிமுறைகளைக் கேள்விக்குள்ளாக்கி ஆளும் வர்க்கத்தை கைபிசைந்து நிற்கச் செய்தார். இன்னொருபுறம் இரண்டு லட்சம் அரசு ஊழியர்களை ஒரே நாளில் வேலைநீக்கம் செய்ததன் மூலம்



**சுப்பிரமணிய சாமி என்ற வெள்ளை வேட்டி கட்டிய பார்ப்பான் ஜெயலலிதாவுக்குச் செய்து தந்த அதே பணிகளைத் தான், காவி உடை தரித்த இந்தச் சுப்பிரமணியும் செய்திருக்கிறான் எனும்போது, சங்கராச்சாரியிடம் கூடுதல் மதிப்போ பணிவோ கொள்ளத்தக்க அவசியம் எதுவும் ஜெயலலிதாவுக்கு இருந்திருக்க முடியாது.**

இந்திய ஆளும் வர்க்கத்தையே எழுந்து நின்று கைதட்டவும் வைத்தார்.

ஒரே நேரத்தில் ஆசை நாயகியாகவும் அபாயகரமான நோயாகவும், உறுதியான அடியாளாகவும் உடனே ஒழித்துக் கட்ட வேண்டிய தலைவலியாகவும் தோற்றம் காட்டி ஆளும் வர்க்கத்தை தொந்திரவுக்குள்ளாக்கும் அரசியல்வாதிகளின் வரிசையில் ஜெயலலிதா முதலிடம் பிடிக்கிறார். நாடாளுமன்ற ஜனநாயகத்தை உள்ளிருந்து கருவறுப்பதையே தமது நோக்கமாகக் கொண்டிருக்கும் பாரதிய ஜனதா கும்பல், இந்த 'ஜனநாயக' அமைப்புமுறைக்கு அவ்வப்போது காட்டும் போலிப் பணிவு, மரியாதை என்பன போன்ற சலுகைகளைக் கூட புரட்சித் தலைவி எப்போதுமே காட்டியதில்லை. நாயிடம் விளக்குக் கம்பம் பெறக்கூடிய மரியாதைக்கு அதிகமான எதையும் இந்த நாடாளுமன்ற அமைப்பு முறை புரட்சித் தலைவியிடமிருந்து இதுகாறும் பெற்றதில்லை.

இந்தக் கலகங்கள், அவமதிப்புகள் மற்றும் மரபுமீறல்கள் எவையும் ஆளும் வர்க்கத்தின் நலனையே கேள்விக்குள்ளாக்குபவையல்ல. சொல்லப்போனால், மிதவாதப் பசப்பல்களின்றித் தீவிரமாகவும், அலங்கார ஜோடனைகளின்றி அம்மணமாகவும் ஆளும் வர்க்கத்தின் வேட்கையையும் முரண்பாடுகளையும் அம்பலமாக்குகின்றன ஜெயலலிதாவின் நடவடிக்கைகள்.

தன்னுடைய கட்சியின் சமூக அடித்தளமாக விளங்கும் அரசியல் ரீதியில் பின்தங்கிய விவசாயிகளும், உதிரி வர்க்கத்தினரும் தன்னிடம் காட்டும் பணிவை, அமைச்சர்கள் காட்டும் நன்றிக் கடனை, இந்தத் தேசமே தன்னிடம் காட்ட வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். ஒரு போனபார்ட் என்ற முறையில் தன்னுடைய இந்த எதிர்ப்பார்ப்பிலிருந்து அவர் யாருக்கும் விலக்களிக்கவில்லை - **ஜெகத்குரு உட்பட.**

ஜெயேந்திரன் கைதின் காரணமாக 'ஜெயலலிதா ஒரு பார்ப்பன பாசிஸ்டு' என்ற நமது மதிப்பீடு மாறிவிடவில்லை. பார்ப்பனப் பாசிசம் என்பது அவருடைய *சொந்தக் கொள்கை.* தன்னுடைய சாதி மற்றும் வர்க்கத்துக்கேயுரிய இயல்புணர்வின் உந்துதல் அடிப்படையில் அவர் ஒரு பார்ப்பன பாசிஸ்ட். கோல்வால்கர் ஹெட்கேவர் போன்ற ஞானசூனியங்களின் நூல்களைப் படித்தோ அல்லது அத்வானி போன்ற அரை நிஜார் சுயம் சேவக்குகளால் அறிவொளியூட்டப்பட்டோ அவர் இந்தக் கொள்கையை வந்தடையவில்லை. தன்னைத் தவிர்த்த வேறொரு மேதையின் கொள்கையைப் பின்பற்றுவது ஒரு போனபார்ட்டிஸ்டின் கவுரவத்துக்கு ஒவ்வாதது என்பதனால் கொள்கை விசயத்திலும் அவர் தனது சொந்தக் காலில் மட்டுமே நிற்க விரும்புகிறார்.

பாரதிய ஜனதா என்ற கட்சிக்கும் அதன் தலைவர்களுக்கும் ஜெயலலிதா அளித்து வந்த மதிப்பென்பது, அது ஒரு அனைத்திந்தியக் கட்சி என்ற அசவுகரியமான உண்மை தோற்றுவித்த நிர்ப்பந்தமேயொழிய, உளப்பூர்வமானது அல்ல. பார்ப்பன எதிர்ப்பின் சுவடே இல்லாத வடமாநிலங்களில் பா.ஜ.க. ஈட்டிய வெற்றியைக் காட்டிலும் பெரியார் இயக்கம் தழைத்த மண்ணில் 'பாசாணத்தில் புழுத்த புழுவாக', தான் நாட்டியிருக்கும் வெற்றிக் கொடியே போற்றத்தக்கது என்பது ஜெயலலிதாவின் கருத்து.


படிப்பகம்

www.padippakam.com

இது புரியாமல் தங்களைத் தேசியத் தலைவர்கள் என்று கருதி இறுமாப்புக் கொண்டிருந்த அத்வானி - ஜஸ்வந்த் சிங் வகையறாக்களை சொடக்குப் போட்டு போயஸ் தோட்டத்துக்கு வர வழைத்ததும், ஏறத்தாழ நெடுஞ்சாண் கிடையாகக் காலில் விழச் செய்த பின்னரே, 'அநாதைக்கு இஸ்திரிப் பெட்டி வழங்குவதைப் போல' தனது ஆதரவை அவர்களுக்கு வழங்கியதும் சமீப கால வரலாறு.

தமிழகத்தையே வீழ்த்திய தன்னுடைய தனித்திறமைக்கு மதிப்பளித்துத் தனது கோரிக்கையை நிறைவேற்றத் தவறிய குற்றத்துக்காக ஒரே நொடியில் பா.ஜ.க. ஆட்சியைக் கவிழ்க்கவும் அவர் தயங்கவில்லை.

அவ்வாறு கவிழ்த்தபோது பார்ப்பனப் பாசிசத்தின் எதிர்காலம் குறித்த தனது கவலையை அவர் மறு தேதி குறிப்பிடாமல் தள்ளி வைத்தார். ஒரு போனபார்ட்டிஸ்ட் என்ற முறையில் தனது சொந்த அரசியல் எதிர்காலம் பற்றி மட்டுமே அவர் கவலைப்பட்டார்.

'இது நம்மவா ஆட்சி' என்று முன்னர் சங்கராச்சாரி கூறியதைப் போன்ற பொருளிலான குறுகிய சாதிப் பாச மல்ல ஜெயலலிதாவின் பார்ப்பனப் பற்று. அது அரசியல் சித்தாந்த ரீதியிலானது. தன்னையே பிரதமராக்கி வழிபடும் இந்து - இந்தியா குறித்த நப்பாசையையும் உள்ளடக்கியது. எனவே, 'நம்மவள்' என்ற தோரணையில் ஜெயாவிடம் உரிமை எடுத்து நெருங்கவும், அறிவுரை கூறவும், கடிந்துரைக்கவும் முயலும் பார்ப்பனர்கள் அதற்கான விலையைக் கொடுத்தாக வேண்டும் - இந்து பத்திரிகை வாங்கிக் கட்டிக் கொண்ட வழக்குகளைப் போல.

''கேடிகள், ரவுடிகள் அடங்கிய அ.தி.மு.க. என்கிற பெரும் கொள்ளைக் கூட்டத்தை ஒரு ரிங் மாஸ்டரைப் போலத் தன்னந்தனியாக நின்று சமாளித்துக் கொண்டிருக்கும் தனது திறமையை, திராவிட இயக்கத்தைப் பார்ப்பன இயக்கமாக உருமாற்றிய தனது அறிவுக் கூர்மையை அங்கீகரித்து, மதித்து, எட்டநின்று புகழ வேண்டுமேயன்றி, தனக்குப் புத்திமதி சொல்ல முயலக்கூடாது'' - என்பதே பார்ப்பன அறிவுத்துறையினர்க்கும் ஆளும் வர்க்கத்திற்கும் ஜெயா விடுக்கும் செய்தி.

இந்துத்துவக் கொள்கையை அமல்படுத்தத் துடிக்கும் பார்ப்பனக் கும்பலால் ஆட்டுவிக்கப்படும் தன் முனைப்பற்ற கைப்பாவையல்ல ஜெயலலிதா. தனது சொந்தத் திட்டத்தின்படி இந்துத்துவத்தை மேலிருந்து திணிக்கும் முயற்சியில் சங்கராச்சாரியும் இராம. கோபாலனும்தான் ஜெயாவின் சதுரங்கக் காய்கள். தனது துணிவின் நிரூபணமாக ஜெயலலிதா அதிரடியாகக் கொண்டு வந்த மதமாற்றத் தடைச்சட்டம், அத்வானி போன்றோரை வெறும் வாய்ச்சவடால் பேர்வழிகள் என்று ஆர்.எஸ்.எஸ்-ஸுக்கே நிரூபித்துக் காட்டும் ஒரு முயற்சியும் கூட.

ஜெயலலிதாவின் ஆன்மீக நம்பிக்கை எனப்படுவதும் ஆளும் வர்க்கத்துக்கேயுரிய கொடுக்கல் - வாங்கல் முறையிலானது. நன்மை - தீமைக்குக் கூலி கொடுக்கும் தார்மீக அதிகாரமாக அவர் கடவுளைக் கருதுவதில்லை. சாதி, சாராயம், உருட்டுக் கட்டை, பணப் பெட்டி போன்ற லவுகீக உபகரணங்களின் பட்டியலில் 'கடவுள்' என்ற ஆன்மீக உபகரணமும் ஜெயலலிதாவின் வெற்றிக்கு வேலை செய்கிறது. அவ்வளவே!



தேர்தல் வெற்றி, நீதிமன்றத் தீர்ப்பு போன்ற குறிப்பான இலக்குகளை அடைவதற்கு உதவும் திறமையற்ற கோயில்களுக்கும் கடவுளர்களுக்கும் ஜெயலலிதாவின் சந்நிதியில் வேலையில்லை. அந்தக் கடவுளர்களை 'வேலை வாங்கும்' தொழில்நுட்பம் அறிந்த வல்லுநர்கள் என்ற முறையிலேதான் பணிக்கர்களும், புரோகிதர்களும் ஜெயலலிதாவின் மரியாதையைப் பெறுகிறார்கள்.

எனவே, ஒரு பணிக்கருக்கு இணையான மரியாதையை சங்கராச்சாரியின் மீது ஜெயலலிதா வைப்பதற்கு எந்த முகாந்திரமும் இல்லை. மேலும் ஜெயலலிதாவின் அரசியல் உயர்வுக்கு சங்கராச்சாரி எந்த விதத்திலும் காரணமாக இல்லை. மாறாக, 1991-96 காலகட்டத்தில் சங்கராச்சாரியின் 'ஆன்மீக உலகம்' தான் ஜெயலலிதாவின் தயவில் விரிவடைந்தது. பா.ஜ.க அரசிடம் காரியம் முடிக்கவும், வழக்குகளை முடக்கவும், கறுப்புப் பணத்தைக் கைமாற்றவும் உதவிய இடைத்தரகன் என்ற தகுதிக்கு மேல் வேறெந்தச் சொந்தத் தகுதியும் ஜெயேந்திரனுக்கு இல்லை. சுப்பிரமணிய சாமி என்ற வெள்ளை வேட்டி கட்டிய பார்ப்பான் ஜெயலலிதாவுக்குச் செய்து தந்த அதே பணிகளைத்தான் காவி உடை தரித்த இந்தச் சுப்பிரமணியும் செய்திருக்கிறான் எனும்போது, சங்கராச்சாரியிடம் கூடுதல் மதிப்போ பணிவோ கொள்ளத்தக்க அவசியம் எதுவும் ஜெயலலிதாவுக்கு இருந்திருக்க முடியாது - காமெராவுக்கு முன்னால் ஜெயேந்திரனிடம் லேசாகப் பணிந்து நிற்க நேர்ந்த அந்தக் கசப்பான தருணங்களைத் தவிர.

ஒரு பார்ப்பனப் பாசிஸ்டு என்ற முறையில் ஜெயலலிதாவைப் புரிந்து கொள்வதற்கான கோட்டுச்சித்திரம் இது.

ஒரு மேட்டுக்குடிப் பார்ப்பனப் பெண் என்ற முறையில் ஜெயலலிதாவிடம் குடிகொண்டிருக்கும் வர்க்கத் திமிரும் சாதிய இறுமாப்பும் அசாத்தியமானவை. ஆங்கிலக் கான்வென்டிலிருந்து ஆணாதிக்கம் கோலோச்சும் கோடம்பாக்கம் திரையுலகிற்குள் திடீரெனத் திணிக்கப்பட்டு, அங்கே ஒரு அரைக் கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டு, எம்.ஜி.ஆரின் பாசிசக் குரூரங்களை அனுபவித்து, பின்னர் அவற்றையே தானும் உட்கிரகித்துக் கொண்டு எம்.ஜி.ஆரின் அரசியல் வாரிசாக ஜெயலலிதா தன்னை நிலைநிறுத்திக் கொண்ட கதை நெடியது.

ஜெயலலிதாவின் கருத்துப்படி அவர் யாருடைய உதவியுமின்றி அரசியலில் தன்னைத்தானே நிலைநிறுத்திக் கொண்டவர். தன்னிடம் அண்டியிருந்து நத்திப் பிழைத்தவர்கள் தன்னை ஏளனம் செய்தாலோ விமரிசித்தாலோ அவர்களை விசேடமாகக் குறிவைத்துப் பழிவாங்க மறக்காதவர். சு.சாமியும், வை.கோ.வும், திருநாவுக்கரசும் பிரபலமான உதாரணங்கள்.



படிப்பகம்

www.padippakam.com

ஒரு நடிகை என்ற முறையில் பெரிய மனிதர்களின் அந்தரங்க வக்கிரங்களை அறிந்தவர். அதேநேரத்தில் இந்தப் பலவீனர்களுக்குத் 'தீனி' போடுவதன்மூலம் தன் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளவும் தயங்காதவர்.

ஒரு பாப்பாத்தி என்ற முறையில் 'உயர்ந்த' ரசனையும், ஆங்கிலப் புலமையும் தனக்கு உண்டென்று 'இந்து' பத்திரிக்கை வாசகர் வர்க்கத்துக்கு அவர் நிரூபிக்க விரும்புகின்ற அதே வேளையில், கருணாநிதியின் மீது எஸ்.எஸ்.சந்திரன் போன்றோர் தொடுக்கும் மட்டரகமான தாக்குதல்களையும், தன் மீது சொரியப்படும் அருவெறுக்கத்தக்க புகழுரைகளையும் கூச்சமின்றி ரசித்து வாய்விட்டுச்சிரித்து மகிழ்பவர்.

'மேட்டுக்குடி லும்பன்' என்ற இரு சொற்களில் மேற்சொன்ன குணாதிசயங்கள் கொண்ட ஒரு நபரை அடக்கி விடலாம். ஆனால் ஜெயலலிதாவைப் பொறுத்தவரை இது வும் ஒரு பரிமாணம்.



**கொலைக்குற்றங்களும், பாலியல் குற்றங்களும் தோற்றுவித்திருக்கக் கூடிய ஆத்திரத்தை பன்மடங்கு விரியப்படுத்திய குற்றம் - ஜெயலலிதாவையே முட்டாளாக்கிய குற்றம். முன்னது தனிநபர் ஒழுக்கம் தொடர்பானது. பின்னதோ ஜெ-வின் அதிகாரம் மற்றும் நம்பகத்தன்மை தொடர்பானது.**

சமீபத்திய தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து அரசு ஊழியர் பணி நீக்கம், மதமாற்றத்தடை, இலவச மின்சாரம் என எல்லா முடிவுகளையும் அவர் ஒரு சேரத் திரும்பப் பெற்றவுடன் தம் கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டார்கள் ஆளும் வர்க்க அறிவுஜீவிகள். ''நெளிவு சுளிவைப் பழகி விட்டார்; பிடிவாதத்தைத் தளர்த்திவிட்டார்; சாதனைகளைக் குவிக்கக் கற்று விட்டார்; இனி தேவதைதான்...!'' என்று பார்ப்பன அறிவுத்துறையினர் துள்ளிக் குதித்து மேலெழும்பிய அந்தக் கணமே, திருக்கை வால் அடியாக அவர்கள் முகத்தில் இறங்கியது சங்கராச்சாரியார் கைது!

**சா**தாரண எம்.எல்.ஏ.க்களையும் போலீசு அதிகாரிகளையும் கொலைக் குற்றச்சாட்டிலிருந்து பாதுகாக்கும் ஜெயலலிதா, பார்ப்பன மடாதிபதியைக் கைவிட்டது ஏன்? திரைமறைவு பேரங்களில் தோன்றிய பல முரண்பாடுகள் காரணங்களாகப் பட்டியலிடப்படுகின்றன. ஆனால் அவற்றையெல்லாம் சில மிரட்டல்கள் மூலமே 'ஜெ' முடிவுக்குக் கொண்டு வந்திருக்க முடியும்.

பொய்க் குற்றவாளியை ஆஜர் செய்யத் தூண்டி, மசால்வடை வைத்து சங்கராச்சாரியைப் பொறியில் சிக்கவைத்த இந்த மர்மக் கதையில் 'ஜெ'-வின் தனிப்பட்ட பாத்திரம் முதன்மையானது. ஐதராபாத்துக்கு விரட்டிச் சென்று கைது செய்த முறை, முதல் குற்றவாளியாய்ச் சேர்த்த விதம், அனைத்துக்கும் மேலாக உயர்நீதி மன்றத்தில் அரசு வழக்குரைஞர் பயன்படுத்திய கவிதை வரிகள்! அதில் ஜெயலலிதாவின் முத்திரை பளிச்செனத் தெரிந்தது.

'சலுகை பெறத் தகுதியில்லாத கிரிமினல்', 'கூலிப் படைத் தலைவன்' என்ற அந்தச் சொற்கள் ஜெயலலிதாவுக்கு மட்டுமே சொந்தமானவை. 'இப்படிப் பேசு' என்ற உத்தரவில்லாமல் ஒரு அரசு வழக்குரைஞர் பேச முடியாதவை.

இத்தகைய கடுமையான சொற்களால் சங்கராச்சாரியை அர்ச்சிப்பதற்கும், காமக் களியாட்டங்கள் குறித்த செய்திகளைத் தணிக்கை செய்யாமல் அவிழ்த்துவிட்டு சங்கரமடத்தின் புனிதத்தைக் கந்தலாக்குவதற்கும் ஜெயலலிதாவைத் தூண்டியது எது?

சங்கரராமன் மனைவியின் கண்ணீரா? பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளான அனுராதா ரமணனின் கண்ணீரா? மறைக்கப்பட்ட பல கொலைகள் குறித்த செய்திகளா? சங்கரராமனின் கடிதங்கள் விவரிக்கும் காமக்களியாட்டங்களா? அல்லது ''தேர்தல் தோல்விக்குக் காரணம் ஜெயலலிதாவின் அகங்காரம்தான்'' என்று பேட்டி கொடுத்த சங்கராச்சாரியின் 'வரம்பு மீறிய' திமிரா?

நிதி கொடுக்கல் வாங்கல் பிரச்சினைகளுக்கு அப்பாற்பட்டு இவையனைத்துமே காரணங்களாக அமைந்திருக்கலாம். பெரிய மனிதப் பொறுக்கித்தனங்களை அனுபவித்து உணர்ந்ததால் தோன்றிய கூடுதல் வெறுப்பாக இருக்கலாம். ஒரு பார்ப்பன விதவையின் கண்ணீர் தோற்றுவித்த விசேடமான பரிதாபவுணர்ச்சியாகவுமிருக்கலாம். அல்லது பெண்களைக் கொச்சையாக வருணிக்கும் ஜெயேந்திரனின் நாக்கு ஜெயலலிதா வரை நீண்டு அது அவரது காதுக்கு எட்டியுமிருக்கலாம். லாம்... லாம்... என்ற இந்தப் பட்டியல் நாம் அறியாத எல்லைகளுக்கெல்லாம் விரிந்து செல்லலாம்.

**ஒ**ன்று நிச்சயம். தனக்கே அதிகாரத் தரகு வேலை பார்த்து கமிசன் வாங்கியிருக்கும் ஜெகத்குருவை வள்ளலார் என்று நம்பி ஜெயலலிதா மோசம் போயிருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் பார்ப்பனியம் அங்கீகரிக்கும் துறவிக்கான பொது ஒழுக்கத்தில் மேற்படி திரைமறைவு வேலைகள் அனைத்தும் அடக்கம்.

ஆனால் திரைமறைவு லீலைகள்? அவற்றின் விரிவும் வீச்சும் ஜெயலலிதாவை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கக் கூடும். எந்தவிதமான அறிவும் திறமையுமில்லாத ஒரு தற்குறி, சுற்றுலா கைடு போல மொழிக்குப் பத்து வார்த்தை தெரிந்து வைத்துக் கொண்டு பாவ்லா காட்டும் ஜாலக்காரன், அமர்ந்திருக்கும் நாற்காலியின் உயரத்தையே தனது மேன்மையின் நிரூபணமாகக் கருதிக் கொள்ளும் ஒரு அற்பன், குறைந்தபட்சம் தனிநபர் ஒழுக்கத்தைக் கூடப்



படிப்பகம்

www.padippakam.com

பேணமுடியாத ஒரு தறுதலை தன்னிடம் வாலாட்டுவதா, என்று அவர் ஆத்திரமடைந்திருக்கலாம்.

ஆனால், 'கிரிமினல்' 'கூலிப்படைத் தலைவன்' என்ற இனிய வசவுகள் மிகுந்த பொருட்செறிவுள்ளவை. அ.தி.மு.க. எனும் மாஃபியா கும்பலில் அம்மா போட்ட பிச்சையான அமைச்சர் பதவியில் இருந்து கொண்டு, அம்மாவுக்கே தெரியாமல் 'திருட்டுத்தனமாக' கொள்ளையடிக்கும் துரோகிக்கும், அம்மாவுக்கே தெரியாமல் சொந்த சாம்ராச்சியமொன்றை உருவாக்கிக் கொள்ளும் கருங்காலிகளுக்கும் மட்டுமே உரியவை அந்தச் சொற்கள். எத்தகைய குற்றம் வளர்ப்பு மகனைக் 'கிரிமினல்' ஆக்கி கஞ்சாகேஸில் உள்ளே தள்ளியிருக்குமோ, அத்தகைய குற்றம், ஜெயேந்திரனின் குற்றம்.

தன்னால் ஆளாக்கப்பட்ட சங்கராச்சாரி, தன்னிடம் பல்லிளித்துப் பல சலுகைகளைப் பெற்ற பரதேசி, தனக்கே தெரியாமல் ஒரு நிழல் சாம்ராச்சியத்தை உருவாக்கியிருப்பதும், அதன் கிரிமினல் வேலைகளுக்குத் தனக்கே தெரியாமல் தனது செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டிருப்பதும் ஜெயலலிதாவின் சந்நிதியில் மன்னிக்க முடியாத குற்றங்கள்.

இது அறம் வழுவிய குற்றத்தால் மட்டுமே அம்மாவுக்கு ஏற்பட்ட சீற்றமல்ல. எம்.ஜி.ஆர் என்ற வக்கிரம் பிடித்த பெண்பித்தனை தமிழகத்தின் தாய்க்குலமே தெய்வமாகப் போற்றிய போதிலும், அந்த நடிகனின் உண்மை முகம் இந்த நடிகைக்குத் தெரிந்தேயிருந்தது. இங்கோ, தன் சாதியில் பிறந்ததற்கு மேல் வேறெந்தத் தகுதியுமில்லாத ஒரு சிறு கும்பல், துறவி என்ற ஒரேயொரு தகுதியைக் காட்டித் தன்னிடமே நடித்து அதிகாரமும் பவிசும் பெற்று இப்போது தன்னையே ஏமாற்றி ஒரு தனி சாம்ராச்சியம் நடத்தவும் துணிந்திருக்கிறது.

ஆகவே, கொலைக்குற்றங்களும், பாலியல் குற்றங்களும் தோற்றுவித்திருக்கக் கூடிய ஆத்திரத்தை பன்மடங்கு வீரியப்படுத்திய குற்றம் - ஜெயலலிதாவையே முட்டாளாக்கிய குற்றம். முன்னது தனிநபர் ஒழுக்கம் தொடர்பானது. பின்னதோ ஜெ-வின் அதிகாரம் மற்றும் நம்பகத்தன்மை தொடர்பானது.

கொஞ்சம் எளிமைப்படுத்தி மக்கள் வழக்கில் சொல்வதென்றால், ''திருப்பதிக்கே லட்டா?'' என்பதுதான் கேள்வி.

**சங்கரமடம் எனும் மூலாம் வெளுத்த தங்கக் கலசத்தை மட்டுமின்றி, அதைத் தாங்கி நிற்கும் தரகு முதலாளி வர்க்கம், அதிகார வர்க்கம், அறிவுத்துறை, ஊடகங்கள் என்ற கோபுரத்தின் கட்டுமானத்தையே ஒவ்வொரு கல்லாய் உருவி மக்கள் முன் காட்சிக்கு வைக்கும் இந்த அரிய வாய்ப்பை, நாம் பயன் படுத்த முனையாத வரை, வெற்றி நமக்கல்ல, 'புரட்சித்தலைவி'க்குத்தான்.**

இந்தக் கோபத்திற்குக் கணக்குத் தீர்த்துக் கொள்ள தற்போது நாம் காண்கின்ற வழிமுறைகளையெல்லாம் ஜெயலலிதா கையாண்டிருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஊர் உலகத்துக்கு வெளிச்சமாகாமல் ஊமையடியாகக் கூட சங்கரமடத்தை அடித்திருக்கலாம்.

கொலைக்குற்றத்துக்காக சங்கராச்சாரியைக் கைது செய்தேயாக வேண்டும் என்று நிர்பந்திப்பதற்கான புறச்சூழல் எதுவும் தமிழகத்தில் இல்லை. தி.மு.க.வின் போராட்டம் நடந்திருந்தாலும் அது அடையாளப் போராட்டமாகவே முடிந்திருக்கும். அதற்குப் பின்னரும் ஜெயலலிதா கைது செய்திருக்கவில்லையெனினும், ஒரு பார்ப்பன எதிர்ப்பு எழுச்சியை தமிழகத்தில் உருவாக்கவல்ல சக்திகள் இங்கு இல்லை.

புறச்சூழலின் இந்த எதார்த்தமான நிலைமைதான் விசித்திரமான முறையில் 'சங்கராச்சாரி கைது' எனும் 'துணிச்சலான' நடவடிக்கைக்கும் காரணமாகியிருக்கிறது.

**ஒழுக்கத்தின் உறைவிடமாக 2000 ஆண்டுகளாக நடித்துக் கொண்டிருந்த பார்ப்பனக் கும்பலின் மீதே 'ஒழுக்கத்தை' நிலை நாட்டியதன் மூலம் நல்லொழுக்கத்தின் புதிய ஜெகத்குருவாக அவதரித்துள்ளார் ஜெயலலிதா.**

சங்கராச்சாரியைக் கைது செய்வதன் மூலம் பார்ப்பன மதமும், பார்ப்பன ஒழுக்கமும் கேலிக்குள்ளாக்கப்படுமென்பது ஜெயலலிதா அறியாததல்ல; ஆனால், ஒரு திண்ணை அரட்டை என்ற வரம்பைத் தாண்டி அதுவொரு பார்ப்பன எதிர்ப்பு எழுச்சியாகவோ, இயக்கமாகவோ வளர்ந்து கைமீறி விடாது என்ற உண்மைதான் ஜெயலலிதாவின் துணிச்சல் அல்லது கோபம் என்று சொல்லப்படும் தனிப்பட்ட பண்புகளுக்குச் செயல்வடிவம் கொடுத்துள்ளது.

தனிநபர்களின் குணாதிசயங்கள் வீரியமிக்கவையாக இருக்கலாம். அவற்றுக்குப் பல விசேடத்தன்மைகளும் இருக்கலாம். இருப்பினும் ஒரு அளவிற்கு மேல் அவற்றை நுணுகி ஆராய்வது பயனற்றது. எத்தகைய குணாதிசயங்களும் செயல்வடிவம் பெறுவதற்கான வரம்பை, குறிப்பிட்ட அரசியல் - சமூகச் சூழல்தான் தீர்மானிக்கிறது. எனவே நாம் பிரதானமாகக் கவனம் செலுத்த வேண்டிய களம் இதுதான்.

இந்தக் கைது குறித்து தி.மு.க. முதல் தலித் அமைப்புகள் ஈறாக அனைவரும் கள்ள மவுனம் சாதித்துவரும் இந்தச் சூழலில், பார்ப்பன மடங்கள் ஆதீனங்களுக்கும், பார்ப்பனப் பாசிசத்திற்கும் எதிரானதோர் இயக்கத்தினை உந்தித் தள்ளவல்ல 'ஜெயேந்திரன் கைது' எனும் இந்த நெம்புகோல், கேட்பாரற்றுத் தெருவில் கிடக்கிறது. இந்தக் கைது நடவடிக்கையின் அரசியல் ஆதாயம் தங்கத்தட்டில் வைத்து ஜெயலலிதாவிடமே வழங்கப்பட்டிருக்கிறது.

ஒரு புன்னகையுடன் அதை ஏற்றுக் கொள்ளும் உங்கள் அன்புச் சகோதரி, தன்னுடைய துணிவுக்கும் நடுநிலைக்கும் சான்றாக அதை உங்களிடமே காட்டுகிறார். தோல்வியின் காரணமாக அவர் திரும்பப் பெற்ற பார்ப்பனப் பாசிசச் சட்டங்களை நாளை வேறொரு வடிவில் அவர் கொண்டு வர முனையும் போதும், அரசியல் எதிரிகளைப் பழிவாங்கும் போதும் 'சங்கராச்சாரி சத்தியமாக' அவை நடுநிலையானவையாகவே நம்பப்படும். துணிச்சலானவையாகவும் சித்தரிக்கப்படும்.

ஒரு போனபார்ட்டுக்கேயுரிய முறையில் அவர் நாளையே பல்டியடிக்கக் கூடும். சங்கராச்சாரியைப் பணயம் வைத்துத் தனது அரசியல் ஆதாயங்க



படிப்பகம்

www.padippakam.com

ளுக்காக ஆளும் வர்க்கத்தினரிடமே பேரம் பேசக் கூடும். பார்ப்பனப் பாசிஸ்டுக்குரிய மனசாட்சி மேலெழும்பும் பட்சத்தில் வழக்கைப் பலவீனப்படுத்தி சங்கராச்சாரியை விடுவிக்கவும் கூடும்.

நடப்பது எதுவாக இருந்தாலும் அதன் அரசியல் பயனை எந்த ஓட்டுச் சீட்டு எதிர்க்கட்சியும் அறுவடை செய்ய முடியாது. வெறும் பார்வையாளர்களாக இருந்து வேடிக்கை பார்க்க மட்டுமே முடியும். இவர்கள் தாமே தமது தலையில் எழுதிக் கொண்ட விதி இது.

நடப்பது எதுவாக இருந்தாலும் பார்ப்பனப் பாசிஸ்டுகளும், அதிகார வர்க்கமும், பார்ப்பன ஊடகங்களும் ஜெயலலிதாவைக் கைவிடப் போவதில்லை. அவர்களுடைய நெறி அது.

எனவே, பூ விழுந்தாலும், தலை விழுந்தாலும் புரட்சித் தலைவிக்கே வெற்றி! கசப்பாக இருந்தாலும் இது தான் உண்மை.

பார்ப்பனப் பாசிசக் கும்பலை எள்ளி நகையாடித் தட்டித் தகர்த்தெறிவதற்குக் கிடைத்த இந்த அரிய வாய்ப்பை,

சங்கரமடம் எனும் மூலாம் வெளுத்த தங்கக் கலசத்தை மட்டுமின்றி, அதைத் தாங்கி நிற்கும் தரகு முதலாளி வர்க்கம், அதிகார வர்க்கம், அறிவுத்துறை, ஊடகங்கள் என்ற கோபுரத்தின் கட்டுமானத்தையே ஒவ்வொரு கல்லாய் உருவி மக்கள் முன் காட்சிக்கு வைக்கும் இந்த அரிய வாய்ப்பை,

நாம் பயன்படுத்த முனையாத வரை, வெற்றி நமக்கல்ல, புரட்சித் தலைவிக்குத்தான்.

எனினும், நாம் வாய்விட்டுச் சிரிக்க மட்டும் ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. தயார்படுத்திக் கொள்ளுங்கள்.

**மு**டியாட்சியை ஒழித்து குடியாட்சியை உலகிற்கே அறிமுகம் செய்த பிரெஞ்சு நாட்டின் நாடாளுமன்றத்திற்கு, 1848 டிசம்பர் 10-ம் தேதியன்று நடந்த தேர்தலில் **லூயி போனபார்ட்** என்ற கழிசடை நாடாளுமன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

பாட்டாளி வர்க்கத்திடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இந்தக் கழிசடையிடம் சரணடைந்து அல்லல்பட்ட பிரெஞ்சு முதலாளித்துவத்தையும், தன்னைக் காப்பாற்றிக் கொள்ள கழிசடையைத் தவிர வேறு யாரையும் தெரிவு செய்யவியலாத அதன் நிலையையும் ஒருங்கே எள்ளி நகையாடும் ஒரு அற்புத இலக்கியத்தை எழுதினார் மார்க்ஸ். (நூல்: ***லூயி போனபார்ட்டின் பதினெட்டாவது புரூமேர்***)

''இப்பொழுது போனபார்ட்டைத் தேர்ந்தெடுப்பதைத் தவிர முதலாளித்துவ வர்க்கத்துக்கு வேறு வழி கிடையாது என்பது வெளிப்படை. கான்ஸ்டான்சில் நடைபெற்ற திருச்சபையினர் கூட்டத்தில் பரிசுத்தவாதிகள் போப்புகளின் ஒழுக்கக் கேடான வாழ்க்கையைக் குறை கூறிய பிறகு ஒழுக்கச் சீர்திருத்தத்தின் அவசியத்தைப் பற்றிப் புலம்பிக் கொண்டிருந்தார்கள். கர்தினல் பியேர் ட ஆயீ அவர்களைப் பார்த்து இடியோசை போலச் சொன்னார். ''பிசாசே நேரில் வந்தால் தான் இனிமேல் கத்தோலிக்கத் திருச்சபையைக் காப்பாற்ற முடியும்; நீங்கள் தேவதைகளைப் பற்றிப் பேசி என்ன பயன்?'' என்றார். திடீர்ப்புரட்சிக்குப் (1848) பிறகு இதைப்போலவே பிரெஞ்சு முதலாளிகளும் கூக்குரலிட்டார்கள்:

இனிமேல் டிசம்பர் 10-ந் தேதிச் சங்கத்தின் தலைவரால் - **லூயி போனபார்ட்டால்** - மட்டுமே முதலாளித்துவச் சமூகத்தைக் காப்பாற்ற முடியும்! திருட்டு மட்டுமே இனி சொத்தைக் காப்பாற்ற முடியும்; பொய்ச் சத்தியம் மட்டுமே மதத்தைக் காப்பாற்றும்; விபச்சாரமே குடும்பத்தைக் காப்பாற்றும்; குழப்பமே ஒழுங்கைக் காக்கும்!''

பெரியார் பாடுபட்ட தமிழ் மண்ணில் பார்ப்பனியத்தை மீட்டெடுத்துத் தமது இழந்த கவுரவத்தை மீண்டும் நிலைநாட்டிக் கொள்வதற்கு புரட்சித் தலைவியிடம் சரணடைந்தது பார்ப்பனக் கும்பல். புரட்சித் தலைவியோ, *'சமூகத்தின்மீது ஒழுக்கத்தை நிலைநாட்டுவதற்கான பாரம்பரிய உரிமையை'* பட்டா போட்டு வைத்திருந்த பார்ப்பன மடத்திடமிருந்து அந்த உரிமையையும் வேட்டியையும் ஒரே நேரத்தில் உருவி விட்டார்.

ஒழுக்கத்தின் உறைவிடமாக 2000 ஆண்டுகளாக நடித்துக் கொண்டிருந்த பார்ப்பனக் கும்பலின் மீதே 'ஒழுக்கத்தை' நிலைநாட்டியதன் மூலம் நல்லொழுக்கத்தின் **புதிய ஜெகத்குருவாக** அவதரித்துள்ளார் ஜெயலலிதா.

சங்கரமடத்தின் மீது ஒழுக்கத்தை நிலைநாட்டியிருக்கிறது **'பிசாசு'**. அந்த மட்டில் நாம் மனம்விட்டுச் சிரிக்கலாம்.

● **மருதையன்**

# காம கேடிகள்!

**சுபஸ்ரீ** - காஞ்சி மடம் நடத்தும் **காமதுர்கா** மாணவியர் **விடுதியில்** தங்கிப் படித்த 11 வயது ஏழைப் **பார்ப்பனச் சிறுமி.** இன்று அவள் வாலாஜா பேட்டை **மயானத்தின் சாம்பல்.** கொலை செய்த பெண்களின் பிணங்களை சுவரில் வைத்துப் பூசினான் ஆட்டோ சங்கர். பிரேமானந்தாவோ தனது ஆசிரமத்திலேயே புதைத்து மாட்டிக் கொண்டான். **கிரிமினல்** வேலைகளில் 2000 ஆண்டு பாரம்பரியம் கொண்ட **சங்கர மடத்தின் பார்ப்பனக் கும்பல்** சுபஸ்ரீ என்ற அந்த ஏழைச் சிறுமியைச் சாம்பலாக்கிக் காற்றில் **கரைத்து விட்டது.**

''என் வயிறு பற்றி எரிகிறது; என்ன கொடுமையடா, ஒருவர்கூட இவர்களைத் தட்டிக் கேட்கவில்லையே'' என்று தன்னுடைய கடைசிக் கடிதத்தில் குமுறினார் சங்கரராமன். தனக்கு நேர்ந்த கொடுமையைச் சொல்லி அழுவதற்குக் கூட யாருமில்லாமல் அநாதையாய்த் துடித்து அடங்கிய சுபஸ்ரீ என்ற அந்த ஜீவனின் கதை இரக்கமற்ற கொலைகாரர்களையும் உருக்கவல்லது.

கடைய நல்லூரில் ரயில்வே சிற்றுண்டிச் சாலையில் பணியாற்றும் ஒரு தொழிலாளியின் மகள் சுபஸ்ரீ. வறுமையின் கொடுமை தாளாமல், படிக்க வைக்க வழியில்லாமல் தன் 8 வயதுப் பெண்ணை காஞ்சிமடம் நடத்தும் 'ஏழை பிராமணப் பெண்களுக்கான விடுதி'யில் சேர்த்துவிட்டார் அவள் தந்தை.

கடந்த ஜூலை 29-ஆம் தேதியன்று தொடர்ச்சியான ரத்தப் போக்கு காரணமாக இறந்து போனாள் சுபஸ்ரீ. உடனே அவளது உடலை வடஆற்காடு மாவட்



படிப்பகம்

www.padippakam.com

டம் வாலாஜா பேட்டை மயானத்திற்குக் கொண்டு சென்று எரித்துவிட்டனர் சங்கரமடத்தின் கிரிமினல்கள். போலீசில் வழக்கு கிடையாது; சவப்பரிசோதனை கிடையாது; இறந்த குழந்தையின் முகத்தைப் பார்க்க பெற்றோர் கூட வரவழைக்கப்படவில்லை. சாவுச் செய்தியே அவர்களுக்குத் தெரியாது. ஏன், ஏன், ஏன் என்ற கேள்விகளுக்கு விடையில்லை.

''மாதவிடாய்ப் பிரச்சினை காரணமாகத்தான் ரத்தப் போக்கு; இது இயற்கை மரணம்'' என்கிறார் காமதுர்கா விடுதியின் வார்டன் வேதாம்பாள்.

சோற்றுக்கு வழியில்லாத குடும்பத்தில் பிறந்த ஒரு தொடக்கப்பள்ளிச் சிறுமி 11 வயதிலேயே பருவத்துக்கு வந்துவிட்டாள் என்ற கதையை யார் நம்புவது? இதனைப் புலனாய்வு செய்த அவுட்லுக் வார ஏட்டின் நிருபர் சுபஸ்ரீ படிக்கும் எஸ்.எஸ்.கே.வி. தொடக்கப் பள்ளியின் தலைமையாசிரியை சுந்தரி என்பவரைச் சந்தித்து இதுபற்றிக் கேட்டபோது அவர் அளித்த பதில் நமக்கு அதிர்ச்சியூட்டுகிறது.

''சென்ற ஆகஸ்டு மாதம் அந்த 'விடுதித் தலைவி' பள்ளிக்கு வந்து சுபஸ்ரீக்கு டி.சி. வாங்கிச் சென்றார். அவள் பருவத்துக்கே வரவில்லை. அவள் இறந்துவிட்டாள் என்பதே இதுவரை எங்களுக்குத் தெரியாது'' என்றார். இறந்துபோன பெண்ணுக்கு யாராவது மாற்றுச் சான்றிதழ் வாங்குவார்களா? இந்தக் கேள்விக்கும் விடையில்லை?

''மாதவிடாய்க்கால ரத்தப்போக்கு காரணமாக ஒரு சிறுமி இறந்துவிட்டதாகக் கூறுவது மருத்துவவீதியில் சாத்தியமே இல்லாதது'' என்கிறார்கள் மகப்பேறு மருத்துவர்கள். ஆனால் சுபஸ்ரீயின் ஏழைப் பெற்றோரை அழைத்து வந்து ''எங்கள் மகளின் மரணத்தில் எங்களுக்குச் சந்தேகமில்லை'' என்று போலீசில் சொல்ல வைத்து விட்டார்கள் சங்கரமடத்துக்கிரிமினல்கள்.



யாரைச் சந்தேகிப்பது? குற்றவாளியை அடையாளம் காட்டும் வாக்குமூலத்தை அவுட்லுக் நிருபரிடம் வழங்கியிருக்கிறார் அந்த விடுதியின் காவலர். ''விஜயேந்திரரும் அவர் தம்பி ரகுவும் விடுதிப் பெண்களுக்குச் சுலோகம் சொல்லிக் கொடுக்க அன்றாடம் மாலை நேரத்தில் வருவார்கள். கடந்த 3 மாத மாகத்தான் வருவதில்லை.''

அந்த விடுதி இன்னொரு தடயத்தை யும் தன்னிடம் வைத்திருக்கிறது. அவை - இரண்டு ஏ.சி. அறைகள்! அந்த அநாதைச் சிறுமிகள் விடுதியில். இரவு நேரத்தை பெண்கள் விடுதியில்தான் கழிக்க வேண்டுமென்று சொல்கின்றனவா சந்நியாசிக்குரிய நியமங்கள்?

## மனிதச்சங்கிலி நடத்தும் மைலாப்பூர் மாமிகள் தங்கள் பெண்களை காமதுர்க்கா விடுதியின் ஏ.சி. ரூமுக்கு 'ஸ்லோகம் கற்றுக் கொள்ள' விஜயேந்திரனிடம் அனுப்புவார்களா?

இதற்கு மேல் என்ன சாட்சியம் வேண்டும் அந்த இரண்டு பன்றிகளையும் அடித்து இழுத்து வருவதற்கு? சந்தேகமில்லையென்று பெற்றோர் சொன்னால் வழக்கை முடித்துவிட முடியுமா? சுபஸ்ரீயின் பெற்றோர் ஒருவேளை விலை போயிருந்தால் அவர்கள் வெறுக்கத் தக்கவர்கள்; காமகேடிகளின் பொய்யை நம்பி மோசம் போயிருந்தால் அவர்கள் பரிதாபத்துக்குரியவர்கள்; போலீசிடம் எழுதிக் கொடுக்குமாறு அவர்கள் காமகேடிகளால் நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தால்? சுபஸ்ரீயின் பெற்றோரையும் உயிருடன் கொலை செய்தததற்காக விஜயேந்திரனும் ரகுவும் தூக்கிலிடப்பட வேண்டியவர்கள்.

ஆனால் பார்ப்பன ஏடுகளோ, சுபஸ்ரீயின் பெற்றோரிடம் 'எழுதி வாங்கிய' சாதனையைக் கொண்டாடுகின்றன. ''சுபஸ்ரீ வழக்கு பிசுபிசுத்துவிட்டது'' என்று கொண்டாடும் ஜூ.வி. முதலாளி பாலசுப்பிரமணியத்தின் பேத்தியையும், தினமலர் கிருஷ்ணமூர்த்தி அய்யரின் பேத்தியையும் நெருப்பு வைத்துக் கொளுத்திவிட்டு சாம்பலைக் கையில் கொடுத்தால் 'ஹர ஹர சங்கர' என்று நெற்றியில் பூசிக் கொள்வார்களா? மனிதச் சங்கிலி நடத்தும் மைலாப்பூர் மாமிகள் தங்கள் பெண்களை காமதுர்க்கா விடுதியின் ஏ.சி. ரூமுக்கு 'ஸ்லோகம் கற்றுக் கொள்ள' விஜயேந்திரனிடம் அனுப்புவார்களா?

இது சங்கரராமன் கொலையைக் காட்டிலும் கொடிய கொலை. தனக்கு நேரவிருக்கும் அபாயத்தையும், தான் மோதிக் கொண்டிருக்கும் எதிரிகளின் இரக்கமின்மையையும் சங்கரராமன் அறிந்திருந்தார். ஆனால் சுபஸ்ரீ? பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்ட அந்தக் கொடிய தருணத்திலும் கூட தனக்கு என்ன நேர்கிறது என்பதைப் புரிந்து கொள்ளவியலாத ஒரு சிறுமி. இந்தக் கிரிமினல்களைத் தெய்வமாகக் கருதி வழிபட்டிருக்கக் கூடிய பேதை! வயிற்றுப்பசிக்குச் சோறு தேடி வந்து, இந்த மிருகங்களின் காமப்பசிக்கு இரையான ஏழை!

மேற்கு வங்கத்தில் ஒரு வசதி படைத்த குடும்பத்தைச் சேர்ந்த பள்ளிப் பெண்ணை வன்புணர்ச்சிக்கு ஆளாக்கிக் கொன்ற மிருத்யுஞ்சய் சாட்டர்ஜி தூக்கிலிடப்பட்டான். விஜயேந்திரன், ரகு மற்றும் காமகேடி மடத்தின் கிரிமினல்கள் மீது இன்னும் வழக்கே பதிவு செய்யப்படவில்லை.

விடக் கூடாது. காமதுர்கா விடுதியின் ஊமையாக்கப்பட்ட பெண்கள் பேசவேண்டும். சுபஸ்ரீயின் உயிர் துடித்து அடங்கிய ஒவ்வொரு கணமும் பேசவேண்டும். காமகேடிகளை அவர்களுடைய மடத்திலேயே ஜீவசமாதி வைக்க வேண்டும். ●





படிப்பகம்

www.padippakam.com

# சங்கராச்சாரியா நீதிபதி?

"அப்புப் பிறை நடுவே அமர்ந்துறை விஷ்ணுவை; உப்புக் குடுக்கைக்குள்ளே உணர்ந்தறிவது எக்காலம்?'' என்று பத்திரகிரியார் உடம்பை ஆண்டவனுக்கு ஒப்படைக்க ஏங்கித் தவித்தார். லோகச் சேமத்திற்குத் தவம் இருப்பதாய்ச் சொல்லும் சங்கராச்சாரியோ ''அப்பு மாட்டிக் கொண்டாலும், தான் தப்புவது எக்காலம்?'' என்று 'சரீர' விடுதலைக்கு சட்டத்தின் ஆன்மாவை நோண்ட ஆரம்பித்து விட்டார்.

கம்பி நீட்டப் பார்த்த ஜெயேந்திரனை, ஜெயலலிதா அனுப்பி வைத்த 'நரகாசுரர்கள்' மெகபூப் நகரில் சுற்றி வளைத்தபோது ''போடு சிவலோகத்துக்கு ஒரு போனை'' என்று சங்கராச்சாரி தனது ஆன்மீக பலத்தைக் காட்டியிருந்தால் நாமும் ''சூப்பர்ரா சுப்பிரமணி'' என்று சொக்கிப் போயிருக்கலாம். ஆனால் கதை கந்தலாகி கவுண்டமணி லெவலுக்குப் போய் ''சி.எம்.முக்குப் போடுறா செல்லை'' என்று அரசியல் செல்வாக்கை அவிழ்த்து விட்டதைப் பார்த்தவுடன், ஓடுவது பக்திப் படமல்ல என்று ஒரு முடிவுக்கு வந்து விட்டார்கள் மக்கள்.

குப்பனும், சுப்பனும் இப்படிப் பேச முடியுமா? அவிழ்ந்து விழுந்த லுங்கியைக் கட்டிக் கொள்ளக் கூட அனுமதிக்காமல், ''ஐயா கூப்புடுறாரு வாடா'' என்று ஏழை பாழைகளை நெட்டித் தள்ளும் போலீசு, ஆதாரங்களை வைத்துக் கொண்டு ஆறு மணி நேரம் தாஜா செய்து ஒரு வழியாகச் சிரமப்பட்டு ஜெயேந்திரனை சீமைப் பசுவைப் போல ஓட்டி வந்திருக்கிறது.

கைது செய்ய வந்த அதிகாரிகளிடமே, ''இது பிராமணாள் வேன் மத்தவா ஏறப்படாது'' என்று சாதி வெறி காட்டிய இந்த தண்டக்கோல் மைனரை தீண்டாமைக் குற்றவழக்கில் கைது செய்து தெருவில் இழுத்து வராமல் தனி விமானம், தனி மரியாதை என சட்டம் தயிர்சாதமாய்க் குழைந்திருக்கிறது. நள்ளிரவில் வெறும் வயிற்றோடு கைது செய்யப்படும் விசாரணைக் கைதிகள் காலையில் ஒரு டீயும், பன்னும் கேட்டாலே, ''தொரைக்கு கரெக்டா டிபன் கேக்குதா? போய் கக்கூசைக் கழுவுடா!'' என்று ஏறி மிதிக்கும் போலீசு, கொலைக் குற்றவாளி ஜெயேந்திரன் ஆசன வாயால் போட்ட உத்திரவுக்கு அடிபணிந்து, பேள்வதற்குத் தலைவாழை இலை அறுத்துத் தந்திருக்கிறது. ஏழை பாழைகள் எங்கள் கால் தூசுக்குச் சமம் என பல சித்திரவதைகளில் நிலைநாட்டுகிறது போலீசு. உன் சட்டமும் போலீசும் என் காலைக் கடனுக்குச் சமம் என நிரூபித்திருக்கிறார் சங்கராச்சாரி. அவாளின் 'சிவில் வாருக்கு' முன்னாலே போலீசின் ரிவால்வர் எம்மாத்திரம்?



**சாதாரணக் குறவர் என்றால்**
**ஆளே காலி!**
**சமயக் குரவருக்குச்**
**சாய்வு நாற்காலி!**

போலீசுதான் இப்படியென்றால், வாதங்களின் துணை கொண்டு வில்லனை விரட்டிப் பிடிக்க வேண்டிய நீதிபதியோ முதல் சந்திப்பிலேயே காதல் வயப்பட்ட கதாநாயகியைப் போல ''சுவாமிகளை ஜாகை வைக்க ஜட்ஜுகளின் தனி பங்களாக்கள் காலியிருக்கிறதே'' என்று கண் ஜாடை காட்டுகிறார். அது மட்டுமல்ல, செசன்ஸ் கோர்ட்டில் அப்பீல் செய்யாமல் நேரடியாக உயர் நீதி மன்றத்திலேயே ஜாமீன் முறையிட அனுமதி. சட்டத்தை மதிக்கும் சாதாரண நந்தன்களுக்கு ஒரு அவசரம் என்றால் விலகாத நந்தி, ஒரு பக்தனைப் படுகொலை செய்த பாதகனுக்கு விருட்டென்று விலகி வழிவிட்டது எங்ஙனம்?

தாழ்த்தப்பட்ட மக்கள் சுத்தமில்லாதவர்கள், வேலைக்குப் போகிற பெண்களிடம் ஒழுக்கமிருக்காது என்று உழைக்கும் மக்களைப் பார்த்து சாதிக் கொழுப்பேறி பேசிப் பேசியே உதிரக் கொதிப்பேறிய இந்தச் சமூகக் குற்றவாளிக்கு சிறப்பு மருத்துவ வசதி. பெண்களைக் காமவெறியோடு பார்த்துப் பார்த்தே கண் அழுத்த நோய் பிடித்த 'ஞான திருஷ்டிக்கு' கண் மருத்துவம்.

ஆயிரக்கணக்கில் கைதான அரசு ஊழியர்களை ஆடு, மாடுகளைப் பட்டியில் அடைப்பது போல் அடைத்து சட்டம் அப்படித்தான் என்ற அதிர்ச்சியில் சிலரைச் சாகடித்த அரசு, இன்று பல்வேறு வழக்குகளில் முதல் குற்றவாளியான சங்கராச்சாரிக்குச் சலுகை காட்டும் மர்மமென்ன? ஒரு காலத்தில் மன்னர்களைக் கைக்குள் வைத்துக் கொண்டு ஒரு குலத்துக்கு ஒரு நீதியான மனுநீதியை சமூகத்தில் அமல்படுத்திய பாரம்பரிய ஜட்ஜான பார்ப்பன மதகுருவும், அதிகார வர்க்கம்தான் என்ற 'ஒரே சாதிப்' பாசமா?

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்றால் 'பணியை நிரந்தரமாக்கு' என்று போராடியதற்காக நள்ளிரவு வேளையில் நடுரோட்டில் சாலைப் பணியாளர்களை போலீசு அடித்து நொறுக்கியபோதும், அள்ளிக் கொண்டு போன போதும் ஜட்ஜ் பங்களா காலியாகவில்லையே ஏன்? ஒரு குடம் தண்ணீருக்கு வழியில்லை என்று உழைக்கும் மக்கள் போராடினால் சிறப்பு அதிரடிப்படை வருகிறது! ஒரு கொலைக் குற்றவாளிக்கு சிறையில் சிறப்புத் தண்ணீர் தொட்டி வைத்துத் தர நீதிமன்றமே ஏற்பாடு செய்து தருகிறது. யாருக்கு சட்டம் சேவை செய்கிறது? கூலி ஏழை விவசாயிகளுக்கு நாட்டில் எலிக்கறி. கூலிப்படைத் தலைவனுக்கு சிறையில் பூரி சப்பாத்தி.

சுதந்திரமாய் வெளியில் வாழ அனுமதிக்கப்பட்டிருப்பதாய்ச் சொல்லப்படும் மக்கள் ''நாங்கள் வாழ வழியில்லை, விவசாயத்திற்கு மானியம் கொடு, விலையில் சலுகை காட்டு''


படிப்பகம்

www.padippakam.com

என்று வீதிக்கு வந்து போராடினால் அடி, உதை. கைதியாய் உள்ளே இருக்கும் சங்கராச்சாரிக்கு அவாள் விருப்பத்தை நிறைவேற்ற அரசு செலவில் பூ, பழம் சலுகை. வெளியில் இருப்பவர்களுக்கு அகப்படாத இகலோக சுகங்கள் உள்ளே இருப்பவனுக்குக் கிடைப்பதன் உள்அர்த்தமென்ன?

ஒரு திருகாணி திருடிய குற்றத்திற்காக நாள் முழுக்க குத்துக்கால் போட்டு உட்கார வைத்தே விசாரணைக் கைதிகளை வதைக்கும் போலீசு, சங்கராச்சாரி ஒரு சாய்வு நாற்காலி கேட்டதற்காக நள்ளிரவில் மூடிய கடைகளைத் திறக்க காஞ்சிபுரம் கடைத் தெருவில் அலைந்திருக்கிறது. அணில் குத்தும் குறவனுக்கு குதிகாலில் லாடம் கட்டி அடி; ஆளையே குத்தும் சமயக் குரவனுக்கோ அலுப்பு தீர சாய்வு நாற்காலி.

'சட்டத்திற்கு முன் அனைவரும் சமம்' என்று கூறும் நீதிபதிகளே ''கோர்ட்டுக்கு வந்த இடத்தில் கோலை வைத்துக் கொண்டு பார்கவுன்சிலில் பூஜை செய்தது விதி மீறல்'' எனச் சீறக்காணோமே. ஏன்? அரை நாளில் நூற்றுக்கணக்கான ஜாமீன் மனுக்களை விசாரிக்கும் விறுவிறுப்பு நீதிபதிகள் எந்தவித அருவெறுப்புமின்றி சங்கராச்சாரியின் ஜாமீன் மனுவை நாய் கவ்விய கந்தல் துணியாய் இழுத்துக் கொண்டே போகும் ரகசியமென்ன?

வேறொன்றுமில்லை. ''அதிகாரவர்க்கம் என்பது அரசின் உணர்வு; அரசின் சித்தம். அரசின் அதிகாரம் வெளித்தோற்றத்திற்கு பொது நன்மையின் பிரதிநிதியாகவும், பாதுகாவலனாகவும் காட்டிக் கொண்டாலும் அதன் உண்மையான அர்த்தம் வேறு. அதற்குப் பின்னால் ஒரு திட்டவட்டமான தனிச்சலுகை பெற்ற கோஷ்டியின் நலன் இடம் பெற்றிருக்கிறது'' என்றார் கார்ல் மார்க்ஸ்.

### மகா பாவியும் மற்ற பாவிகளும்

என்ன நடந்து விட்டது இப்போது? சந்தேகம் என்று இரவில் பிடித்துச் செல்லப்படும் காசுமீர், மணிப்பூர் மக்களைப் போல கைதுக்குப் பிறகு காலையில் எங்காவது பிணமாகக் கிடந்தாரா சங்கராச்சாரி? சந்தேகக் கேசில் பிடித்துப் போன சென்னை கே.கே. நகர் இளைஞரைப் போல சங்கராச்சாரியின் காலை ஒடித்ததா போலீசு? கொலையே செய்தாலும்

**என்ன நடந்துவிட்டது இப்போது? சந்தேகம் என்று இரவில் பிடித்துச் செல்லப்படும் காசுமீர், மணிப்பூர் மக்களைப்போல கைதுக்குப் பிறகு காலையில் எங்காவது பிணமாகக்கிடந்தாரா சங்கராச்சாரி?**

சங்கராச்சாரியின் காலைக் கடனுக்கும், ஊளைச் சதைக்கும் ஒரு குறையும் வராமல் பராமரிக்கிறது அரசு.

'சட்டப்படி சங்கராச்சாரியைக் கைது செய்ததே தவறு' என அரசியல் அமைப்பே ஒரு தனிமனிதனுக்குச் சமமில்லை என்று சவால் விடுகிறது பார்ப்பன மதவெறிக் கும்பல். வீரப்பனுக்குச் சோறு கொடுத்தவர்கள் என்ற சந்தேகத்துக்காகவே ஆண்டுக் கணக்கில் சிறையிலிருக்கும் அப்பாவி 'இந்துக்களுக்காக'க் குரல் கொடுக்காத இவர்கள் பார்ப்பன சங்கராச்சாரிக்காகப் படை கட்டி வேலை செய்கிறார்கள்.




அதிகார வர்க்கமும் எந்த கைதிக்கும் இல்லாத வகையில் சிறைக்கு உள்ளேயே பூசை, புனஸ்காரம் என்று அக்கிரகாரத்தை ஏற்படுத்தித் தருவதுடன், வேலூர் சிறைக்கு வெளியேயும், சூடம், சாம்பிராணி வழிபாடு என்று அங்கே ஒரு கோயில் கடை போடாததுதான் பாக்கி. நீதிமன்றக் காவலில் சங்கராச்சாரி இருக்கிறார் என்பதைவிட சங்கராச்சாரியின் கஸ்டடியில் நீதித்துறை இருக்கிறது என்பதுதான் உண்மை. இப்படி ஜெயிலை மடமாக்கி மக்களின் வரிப்பணத்தை 'ஸ்வாஹா' செய்வதை விடப் பேசாமல் மடத்தையே ஜெயிலாக்கி விடலாம். அரசு ஊழியர் போராட்டத்தின் போது ''நாம் பப்ளிக்கா வரப்படாது'' என்று பம்மிய பல பார்ப்பனர்கள் இப்போது ''பெரியவாளை விடுதலை செய்'' என்று பிராமணர் சங்கமாய் நடுரோட்டில் குதித்து விட்டார்கள்.

சாதியக் கொடுமைகளுக்காகவும், கூலி உயர்வுக்காகவும் போராடும் தொழிலாளர்களை அடித்து அம்மணமாக்கி ஆற்றில் பிணங்களை மிதக்க விடுகிறது போலீசு (மாஞ்சோலை). ஆனால் ஒரு கொலைக் குற்றவாளி தனது விருப்பார்வங்களை அரசுச் செலவில் அனுபவித்துக் கொள்ள நீதித்துறையே பாப்பாரப் படித்துறையாகிறது. மடத்திலிருந்து ஓடிப்போன சங்கராச்சாரிக்கு மனுப்போடும் இந்துவெறிக் கும்பல் அன்றாடம் வேலையிலிருந்து விரட்டப்படும் தொழிலாள இந்துக்களின் நலன்களுக்காக வீதிக்கு வந்து விடைத்தது உண்டா?

தொழிலாள 'இந்துக்களுக்காக' முதலாளிகளிடம் பேச்சு வார்த்தை நடத்த நிர்ப்பந்திக்காத திரிசூலத்தில் ஒரு சூலமான தொகாடியா ''காசுமீர் போராளிகளிடம் கூட பேச்சு வார்த்தை நடத்தும் அரசு காஞ்சிப் பெரியவாளை அழைத்துப் பேசியிருக்கக் கூடாதா?'' என்று நியாயம் கேட்கிறார்.

ஒரு வாதத்திற்கே ஒப்புக் கொள்வோம். பேச்சு வார்த்தையின் நிபந்தனையாக காசுமீர் 'தீவிரவாதிகள்' தங்களிடமுள்ள ஆயுதங்களைக் கீழே போட முன்வரவேண்டும் என்கிறது அரசு. வரலாறு நெடுக பலதரப்பு மக்களின் இரத்தத்தைக் குடித்த, வர்ணாசிரம தர்மம் என்ற பார்ப்பன பயங்கரவாத ஆயுதத்தைக் கீழே போட சங்கராச்சாரி தயாரா?

இல்லை, எந்த காலத்திலும் பார்ப்பன பலாத்காரமும்; ஒரு குலத்துக்கு ஒரு நீதியுமே சங்கராச்சாரி அறிவிக்கும் அருள்வாக்கு. ''கைது'', ''காவல்'' என்ற வார்த்தைகளுக்கான அர்த்தத்தையே மாற்றி அனுபவித்துச் சட்டத்தையே 'கற்பழித்து' விட்டார் சங்கராச்சாரி. சட்டத்துக்கு முன் அனைவரும் சமமில்லை என்பதை சங்கராச்சாரியின் கைது விவகாரங்கள் மூலமாக நிரூபித்து விட்டது அரசு.

● துரை. சண்முகம்



படிப்பகம்

www.padippakam.com



## அன்பே சிவம் விருது விழா:

# முற்போக்கு எழுத்தாளர் மடம்?

உலகம் எக்கேடு கெட்டாலும் எனக்கென்ன என்பது போல பார்ப்பன மேட்டுக்குடியினர் வருடா வருடம் ரசிக்கும் சங்கீத சீசன் நடைபெறும் டிசம்பரில், த.மு.எ.ச. அன்பே சிவத்திற்குப் பாராட்டு விழாவைச் சென்னையில் நடத்தியது. கச்சேரியில் செந்தில்நாதன், கதிரேசன், மேலாண்மை பொன்னுச்சாமி போன்ற சங்க வித்வான்களும், விகடன் புகழ் உலக மகா வித்வான் மதனும் கலந்து கொண்டனர்.

ஆனாலும் கச்சேரி களை கட்டவில்லை. வெளியே 'தோழர் ஸ்டாலினை சைக்கோ, கொலைகாரன் என்று எழுதிய மதனைக் கூப்பிடலாமா, மானமுள்ள சி.பி.எம். அணிகளே சிந்திப்பீர்' என்ற துண்டுப் பிரசுரத்தினை சென்னை ம.க.இ.க. தோழர்கள் விநியோகித்தது, கச்சேரியை அபஸ்வரமாய் அவ்வப்போது ஒலிக்க வைத்தது.

'கம்யூனிச' சார்பாக இருக்கும் ஒரு 'கலை இலக்கிய' அமைப்பு, சங்கர மடம் தன்னைத்தானே அம்பலப் படுத்திக் கொண்டு வரும் இந்த அழகான தருணத்தில் 'இந்துத்துவத்தை' அம்பலப்படுத்தி மாபெரும் இயக்கம் எடுப்பதற்குப் பதில், 'அன்பே சிவம், சிவமே அன்பு' என்று நாம பஜனை செய்வது ஏன் என்பதையும் மேற்படி அபஸ்வர நோட்டீஸ் கேட்டிருந்தது.

பதிலளித்த செந்தில்நாதன் "ஜெயேந்திரர் கைது குறித்து நாங்களும் 2,3 கூட்டம் போட்டோம், உனக்குத் தெரியவில்லை" என்றார். மதனைப் பார்க்க வந்த ரசிகர்களில் பாதிபேர் கூட இல்லாத ஒரு கூட்டத்தை "எங்காத்துக் காரரும் கச்சேரிக்கு"ப் போகிறார் என்ற படியாக த.மு.எ.ச. சாஸ்திரி ஹாலில் நடத்தியது உண்மைதான்; ம.க.இ.க.வின் 'எஸ்.பாஸ்' என்ற கேலிச்சித்திரத்தை தங்கள் சொந்தச் சரக்குப் போல தீக்கதிரில் வெளியிட்டு விளம்பரமும் செய்தார்கள்.

அந்தக் கச்சேரியில் நாங்கள் காது குளிரக் கேட்டு ரசித்த ஒரே ராகம் "ஜெயேந்திரர் கைதை சட்டம் பார்த்துக் கொள்ளட்டும், சங்க பரிவாரங்கள் எதிர்ப்பது தவறு" என்ற சட்டவாத ராகம்தான். இதைத்தான் யெச்சூரி போன்ற தேசிய வித்வான்களும் முன்னர் பாடியிருந்தனர். த.மு.எ.ச. நண்பர்களே! இதே சட்டமும், இந்தச் சட்டத்தைத் தாங்கிப் பிடிக்கும் ஆளும் வர்க்க அமைப்புக்களும்தான் சங்கராச்சாரியின் பார்ப்பனப் பாசிச சாம்ராச்சியத்தைக் கட்டிப் பாதுகாக்கின்றன; பார்ப்பனியத்தைப் பாதுகாக்கும் பாதுகாவலர்களிடமே, பார்ப்பனியத்தை வீழ்த்துவதற்கு மன்றாடுகிறீர்களே வெட்கமாக இல்லை? மாஸ்கோவிலிருந்து நமது தோழர்கள் கைவலிக்க சிவப்பு இலக்கியங்களை மொழிபெயர்த்தது விரயம்தானோ? சிவப்பின் அடிப்படை, அரிச்சுவடி கூடத் தெரியவில்லையே, இதில் தமிழ் சினிமாவைக் காப்பாற்ற வேண்டும் என்ற கண்ணீர் வேறு! முதலில் உங்களுக்காக அழுங்கள், பிறகு சினிமாவுக்காக அழலாம்.

த.மு.எ.ச. 12 ஆண்டுகளாக சிறந்த தமிழ்ப் படங்களுக்கு விருது கொடுத்து வருகிறதாம். அவற்றில் 'புதிய கலாச்சாரத்'தால் 20 ஆண்டுகளாக விமரிசிக்கப்பட்ட படங்களே அதிகம். பம்பாய், மகாநதி, வேதம் புதிது, அழகி, தற்போது அன்பே சிவம். முன்பு மணிரத்தினத்திற்கு விருது விழாவை இதே சென்னையில் நடத்திய போது, "பால்தாக்கரேவின் ஆசிபெற்ற பம்பாய் படத்திற்கு பல்லக்குத் தூக்கும் த.மு.எ.ச." என்று சுவரொட்டி ஒட்டினோம். அப்போது பேசிய வித்வான்கள், பம்பாய் படம் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்டது, அதில் தனிப்பட்ட மனமாச்சரியங்களுக்கு இடமில்லை என்றனர். இப்போதும் அதே ஸ்வரம்தான்.

பொல்லாத 'ஜனநாயகம்'! புஷ் வெற்றி பெற்றதும், போனமுறை பா.ஜ.க. வெற்றி பெற்றதும், 1930-களில் ஹிட்லர் வெற்றி பெற்றதும் கூட இதே 'ஜனநாயக' முறைப்படிதான். போகட்டும்! அன்பே சிவம் குறித்து நீங்கள் நடத்தியதாகக் கூறும் காரசாரமான வாதப் பிரதிவாதங்களை யாவது தொகுத்து மேடையில் பேசியிருக்கலாமே.

இதே திரைப்படம் குறித்து, உலக மயமாக்கத்தினால் ஆதாயம் அடையும் மேட்டுக்குடி வர்க்கத்திடம் கொஞ்சம் கருணை காட்டுமாறும், உலகமயமாக்கத்தினால் பாதிப்படைந்து போராட வேண்டிய தொழிலாளி வர்க்கத்தினை ஊமைகளாயும் அப்பாவிகளாயும்,

**பார்ப்பனியத்தின் கேளிக்கை மரபை காலத்திற்கேற்ப மாற்றியமைத்த கழிசடையான மதன் குறித்து இங்கிதமாக - சங்கீதமாக ஒரே ஒரு விமரிசனத்தைக் கூட மறந்தும் பேசவில்லை என்பது, த.மு.எ.ச.வினரும் மதனின் எழுத்து பாணத்திற்கு வீழ்ந்து விட்டார்கள் என்பதையே காட்டுகிறது.**



படிப்பகம்

www.padippakam.com

அன்பே சிவம் காட்டுகிறதென்று ''புதிய கலாச்சாரத்''தில் விரிவான கட்டுரை - கலை, அரசியல், அழகியல் அனைத்தையும் பரிசீலித்து - வெளியிட்டிருந்தோமே. த.மு.எ.ச நண்பர்கள் ஜனநாயகத்தை ஒரு பக்தன் அல்லது தீவிரவாதி போல நேசிப்பது உண்மையாக இருந்தால், மேடையில் எங்கள் கருத்துக்களுக்குப் பதில் சொல்லியிருக்க வேண்டும்.

பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தை விடுங்கள், முதலாளித்துவ ஜனநாயகத்தைக் கூட பின்பற்ற இயலாத உங்கள் நிலை குறித்து பரிதாபப்படுகிறோம்.

அன்பேசிவத்தில் கிரெடிட் கார்டு, செல்பேசி போன்றவை கேலி செய்யப்படுவது குறித்து மகிழ்ந்த த.மு.எ.ச. நண்பர்களுக்கு மார்க்சியம் அத்வைதத்தின் ரேஞ்சில் அந்தப் படத்தில் கேலி செய்யப்பட்டிருப்பது குறித்து எந்தச் சுரணையுமில்லை. 'அது முழுமையான மார்க்சியப்படமல்ல' என்று விமரிசனம் செய்கிறார்களாம்!

கம்யூனிசம் பின்னடைந்த நேரத்தில், அவதூறுகளுக்கு எதிராகப் பொதுவுடைமைக் கொள்கையை உறுதியாகப் பற்றி நிற்பதை விடுத்து, ஏதோ கொஞ்சம் கம்யூனிசத்தை - வீதி நாடகம், செங்கொடி, சி.ஐ.டி.யு. பெயர்ப்பலகை - காட்டியிருக்கிறார்கள் என்று மயங்குபவன் மண்டூகம். என்ன இருந்தாலும் நீங்கள் கம்பரசனை, பாரதிராசனை மரபில் வந்தவர்களாயிற்றே!

அடுத்து, மதனை ஏன் அழைத்தீர்கள் என்ற கேள்விக்கு, படத்தின் வசனகர்த்தா என்ற முறையில் அழைத்தோம் எனப் பதிலளித்தார்கள். மதனும், த.மு.எ.ச. மேடையிலேயே பேசிவிட்டேன் என்று வெளியில் ஜம்பமடித்து (தனது பாவங்களை மறைக்கலாம்) பேசுமளவுக்கு இது முக்கியமான மேடை என்றார். த.மு.எ.ச. வித்வான் நண்பர்கள் மதனே சங்கோஜப்படுமளவுக்குப் பாடித் தீர்த்தார்கள். கம்பனின் ஒரு வரியை ஒரு வாரம் முழுவதும் ரசிக்கும் ஜீவாவின் நினைவை, மேலாண்மை பொன்னுச்சாமி நிகழ்த்திக் காட்டினார்.

ஸ்டாலினை 'சைக்கோ கொலைகாரன்' என்று மதன் எழுதிய கட்டுரை மதனுடைய 'கருத்தாம்!' 'சங்கரய்யா ஒரு தெருப்பொறுக்கி' என்றும் அவர் 'கருத்து' தெரிவித்திருந்தால் மேடையேற்றி அவார்டு கொடுப்பார்களா? ''அறிஞர் மதன் அவர்களே, அன்பே சிவத்தில் 'தீவிரமாக' கம்யூனிசத்தை ஆதரித்த நீங்கள் ஸ்டாலினைப் பற்றி தவறாகப் புரிந்திருக்கிறீர்களே'' என்று சின்ன விளக்கமாவது தந்திருக்கலாமே!

மதன் யார்? ஜூ.வி. ஒரு பலான பத்திரிக்கை என்று முன்பு ஒரு விளம்பரம் பு.க.வில் கொடுத்திருந்தோம். அதை வாசகர்கள் நினைவுபடுத்திக் கொண்டால் மதனை விளக்கத் தேவையில்லை. ஆபாசம், கிசுகிசு, இரண்டையும் இணைத்து எதை வேண்டுமானாலும் எழுதலாம் என்று தமிழ்ப் பத்திரிக்கையுலகின் போக்கை மாற்றியமைப்பதில் மதன் முக்கியமானவர். பார்ப்பனியத்தின் கேளிக்கை மரபை காலத்திற்கேற்ப மாற்றியமைத்த இந்தக் கழிசடை குறித்து இங்கிதமாக - சங்கீதமாக ஒரே ஒரு விமரிசனத்தைக் கூட மறந்தும் பேசவில்லை என்பது, த.மு.எ.ச.வினரும் மதனின் எழுத்து பாணத்திற்கு வீழ்ந்துவிட்டார்கள் என்பதையே காட்டுகிறது. த.மு.எ.ச.வில் செம்மலரை விட, விகடன் குரூப் பத்திரிக்கைகளுக்குத்தான் ரசிகர்கள் அதிகம் போலும்!

முத்தாய்ப்பாக, ''கலையும் அரசியலும் எவ்வளவு கை கோர்க்கலாம் என்று கற்றுத் தருகின்ற படம் அன்பே சிவம்'' என்று முடித்தார் மேலாண்மை . பொன்னுச்சாமி.

உண்மைதான். 'புதிய கலாச்சாரம்' திரைப்பட விமரிசனத்தின் இறுதியில் இப்படித்தான் இருக்கிறது: ''ஐயா, படத்தைப் பாராட்டுகிறோம். மார்க்சிஸ்டு கட்சியின் திரை அவதாரத்தை இத்தனைத் துல்லியமாக யாரும் வழங்கியதில்லை. ஒருவேளை சி.ஐ.டி.யு.வின் அறிவிப்புப் பலகையைக் காட்டாமல் இருந்திருந்தாலும் இது மார்க்சிஸ்டு கட்சிதான் என்ற உண்மை காட்சிக்குக் காட்சி பொருத்தமான கலையம்சத்துடன் எடுத்தியம்பப்படுகிறது. அதற்காக மீண்டும் பாராட்டுகிறோம்.''

● இளநம்பி





முப்பதே நாட்களில்
தமிழகமெங்கும்
விற்பனையான
பிரதிகள்
75,000

கொலைகள், கொலை முயற்சிகள்,
பாலியல் கொடுமைகள், நிதி மோசடிகள்
என்று வளர்ந்து கொண்டே செல்லும்
காஞ்சி மடத்தின் குற்றங்களுடைய
ஆணிவேரை அடையாளம் காட்டும் நூல்!

சிந்திக்கத் தயங்கும் பக்தர்களையும்
சிந்திக்கத் தூண்டும் எளிய நடையில்!
சிரித்த மறுகணமே சீற்றமும் கொள்ள
வைக்கும் 18 கேலிச் சித்திரங்களுடன்!

வாங்குங்கள்!

ஒவ்வொருவரும் குறைந்தது
பத்து பிரதிகள் வாங்கி நண்பர்களுக்கும்
உறவினர்களுக்கும் விநியோகியுங்கள்!
விற்பனை செய்யுங்கள்!

10 பிரதிகளுக்கு மேல் வாங்குவோருக்கு பிரதிக்கு
ரூ. 1/- கழிவு உண்டு. கூரியர் செலவு தனி.

பிரதிகள் தேவைப்படுவோர் பணவிடை M.O.
அல்லது வரைவோலை D.D
அனுப்பவேண்டிய முகவரி:

இரா. சீனிவாசன்,
16, முல்லைநகர் வணிக வளாகம், 2-ஆவது நிழற்சாலை,
15-ஆவது தெரு அருகில், அசோக் நகர்,
சென்னை - 600 083. தொலைபேசி: 044-23718706

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@rediffmail.com

மகஇக-விவிமு-புமாஇமு-புஜதொமு




படிப்பகம்

www.padippakam.com




## பார்ப்பனப் பத்திரிகைகள்:

# சங்கரமடத்தின் நாடித்துடிப்பு!

— வே. மதிமாறன்

பிரேமானந்தா கைதானபோதும் சரி, திருவாவடுதுறை இளையமடாதிபதி கைதான போதும் சரி, சமீபத்தில் சதுர்வேதி கைதான போதும் சரி, மக்கள் உணர்வை அந்தக் கைதுகள் பாதித்ததில்லை.

'என்னப்பா இது போலி சாமியார்கள் இவ்வளவு பெருத்துப் போய்ட்டாங்க' என்ற அபிப்பிராயத்தோடு முடித்துக் கொண்டார்கள்.

ஆனால் ஜெயேந்திரன் கைதான போதுதான் மக்கள் இன்ப அதிர்ச்சியில் திக்கு முக்காடிப் போனார்கள். பொது இடங்களில் இரண்டு நபர்கள் பேசிக் கொண்டால் கண்டிப்பாக அதில் ஜெயேந்திரனின் கைதும் இடம் பெறும்.

'என்ன இந்த ஆளு இவ்வளவு கேவலமா இருக்கானே?' என்ற ரீதியில் ஆரம்பித்து தங்கள் கவலைகளை கொஞ்ச நேரம் மறந்து, ஜெயேந்திரனின் உல்லாச, சல்லாப வாழ்க்கையைப் பற்றி கை கொட்டிச் சிரித்துப் பேசி மகிழ்ந்து விட்டுத்தான் கலைகிறார்கள். (இது ஒன்றுதான் ஜெயேந்திரனால் மக்களுக்கு கிடைத்த மகிழ்ச்சி) இத்தனைக்கும், சுவாரஸ்யமாகப் பேசுவதற்கு சதுர்வேதி மீது நிறைய பாலியல் குற்றச்சாட்டுகள் இருந்தும் மக்களின் மனதை உற்சாகமாக வைத்திருப்பதில் ஜெயேந்திரனே முன்னணியில் இருக்கிறார். இந்த வகையில் ஜெயேந்திரனுக்கு மக்கள் மத்தியில் அமோக ஆதரவு.

மக்களின் மனநிலை இப்படி இருக்க தினமலர் நாளிதழ் கொஞ்சமும் கூச்ச நாச்சமில்லாமல் இப்படி செய்தி வெளியிடுகிறது. கீழ்க்கண்ட இந்தச் செய்திதான் தினமலரின் அரசியல், தத்துவம், பத்திரிக்கை தர்மம்.

அதாவது, ஆதாரத்தோடு இருக்கிற செய்திகளை பொய் என்பதும், ஆதாரமற்ற செய்திகளை மெய் போல் வெளியிடுவதும்தான் தினமலரின் பத்திரிக்கை தர்மம். இந்த தர்மம் ஆட்களை பொறுத்து ஆதரவாகவோ, எதிராகவோ வெளிப்படும். இதோ ஆதாரமே இல்லாமல் ஒரு ஆதரவு 'செய்தி':

> **ஆதாரத்தோடு இருக்கிற செய்திகளை பொய் என்பதும், ஆதாரமற்ற செய்திகளை மெய் போல் வெளியிடுவதும்தான் தினமலரின் பத்திரிக்கை தர்மம்.**

''காஞ்சி சங்கரமடத்தை அழிக்க நினைக்கும் சதியின் ஒரு அம்சமாக சங்கராச்சாரியார் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கைது அரங்கேற்றப்பட்டுள்ளதாக காஞ்சிபுரம் மட்டும் அல்லாது தமிழ்நாடு முழுவதும் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நேபாள மன்னரை மடத்தின் தீவிர பக்தராக மாற்றியது உட்பட பல தொழிலதிபர்களையும் மடத்தின் தீவிர ஆதரவாளர்களாக்கியது ஜெயேந்திரரின் நடவடிக்கைகள்தான் என்கிறது அவரது நெருங்கிய வட்டாரம்... ஜெயேந்திரரின் இந்த நடவடிக்கைகளால் மடத்தின் புகழ் பரவியது. இதைப் பிடிக்காமல் பலர் மடத்துக்குள்ளேயே குளறுபடிகள் செய்ய ஆரம்பித்தனர். இந்தக் குளறுபடிகளைச் சரி செய்ய முயன்ற போது அவருக்கு எதிராக கோஷ்டிகள் உருவாகின.... திடீர் திடீர் என மடத்து நிர்வாகிகளுடன் பெண்களைச் சம்பந்தப்படுத்திப் பேசுவது எல்லாம் அவ்வப்போது நிகழ்ந்து கொண்டு தான் இருக்கிறது... திட்டமிட்டு கொலை வழக்கில் அவரைச் சிக்க வைத்துள்ளதாக அவரது ஆதரவாளர்கள் குமுறுகின்றனர். மடத்தில் உள்ள கோஷ்டிகளில் சிலர் இப்போது வெளியில் உள்ள மட எதிர்ப்பாளர்களுடன் ரகசிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு இது போன்ற செயல்களில் ஈடுபடுவதாகவும் சந்தேகம் எழுந்துள்ளது. சங்கராச்சாரியாரை சிறையில் அடைத்துவிட்டு மடத்தைச் சூறையாடவும் ஒரு கும்பல் திட்டமிட்டுள்ளதாக ஒரு அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது...'' *(தினமலர், 14.12.04)*

வெட்கங் கெட்டதனத்தின் தமிழ்ப் பத்திரிக்கை வடிவம்தான் தினமலர்.

கருணாநிதி, திருமாவளவன், ராமதாஸ், கிருஷ்ணசாமி, லாலு பிரசாத், விடுதலைப்புலி தலைவர் பிரபாகரன் இவர்களை தலைப்பிலேயே கேவலப்படுத்தி - அவமானப்படுத்தி சவடாலாகச் செய்தி வெளியிடும் தினமலர், ஒரு கிரிமினலான ஜெயேந்திரனைப் பற்றி எப்படி பவ்வியமான

www.padippakam.com

தொனியில் தலைப்புகள் வெளியிட்டி ருக்கிறது பாருங்கள்.

**'ஜெயேந்திரர், கைதுக்கு எதிர்ப்பு. சாதுக்கள் போராட்டம்',**
**'ஆந்திராவில் நாளை 80 லட்சம் பேர் உண்ணாவிரதம்',**
**'ஜெயேந்திரர் கைதால் உலக அளவில் பக்தர்கள் கவலை' - ஜார்ஜ் பெர்னாண்டஸ் பேட்டி,**
**'சகோதரர்கள், பக்தர்கள் உருக்க மான சந்திப்பு',**
**'வேலூர் சிறையில் ஜெயேந்திரர் சுகவீனம்',**
**'ஜெயேந்திரர் கைதுக்கு சர்வதேச சதி காரணம்' - பக்தர்கள் பேரவை குற்றச்சாட்டு,**
**'வேலூர் மத்தியச் சிறையில் தரை யில் உறங்கும் ஜெயேந்திரர்,'**
**'பாம்புகள் நடுவே வாசம்'** ***(பாவம் பாம்புகள்!)***

- இப்படி 'தானாடவில்லையம்மா தசையாடுது' என்று படிப்பவர்கள் மன தில் இரக்கத்தை ஏற்படுத்துகிற தொனி யில் செய்தி வெளியிடுகிறது தினமலர்.

சரி, மோசடிப் பேர்வழி இந்து மதச் சாமியார் என்பதால் ஒரு இந்துமதப் பத் திரிக்கை மத உணர்வோடு இப்படி செய்தி வெளியிடுகிறது என்று பார்த்தா லும், இதோ இன்னொரு இந்து மோசடிப் பேர்வழியைப் பற்றி அதே தினமலர் எப்படிப் பாய்ந்து பிடுங்குகி றது பாருங்கள்.

**'சாதாரண ஆள் இல்லீங்க இந்த சதுர்வேதி',**
**'பண்ணை வீட்டில் மாயாஜாலம்',**
**'செக்ஸ் சாமியார் சதுர்வேதி சதிராட்டம்' '**

- இதுதான் பார்ப்பனிய தர்மம். பார்ப்பனிய ஒழுக்கம் என்பது, அடுத்த வர்களின் ஒழுக்கமின்மையைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் தம்மை ஒழுக்கமா னவர்களாகச் சித்தரித்துக் கொள்வது; ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதல்ல.

பார்ப்பனியத்தின் இந்த மோசடி அவர்களின் இதிகாச, புராணப் புளுகுக ளிலிருந்தே தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. ''இராமனின் மனைவி சீதையின் மீது பிரியப்பட்டான் ராவ ணன்'' - இப்படி அடுத்தவர் மனைவி மீது ஆசைப்பட்டதினால் அவனுக்குத் தக்க பாடம் கற்பித்து, அவனைக் கொன்று தனது ஒழுக்கத்தை உலகுக்கு அறிவித்த பார்ப்பனியம், இந்திரனை தலைமேல் வைத்துக் கொண்டாடுகிறது. இந்த இந்திரனின் 'ஃபுல் டைம் ஒர்க்' அடுத்தவர்கள் மனைவிகளோடு உறவு கொள்வதே. அந்த உறவுக்காக எதை யும் செய்பவனே இந்திரன். குறிப்பாக கடும்தவம் புரிகிற ரிஷி பத்தினிக ளோடு உறவு கொள்வதில் கைதேர்ந்த வன் இந்திரன்.

சுருங்கச் சொல்ல வேண்டுமானால் இந்திரன், அந்தக் காலத்து ஜெயேந்தி ரன் - விஜயேந்திரன்.

இந்த இந்திரனைத்தான் 'தேவர்க ளின் தலைவன்' என்று கொண்டாடுகி றது பார்ப்பனியம். ''எங்களுக்கு மட் டுமே **இந்திர சரஸ்வதி** என்ற பட்டம் சொந்தமானது'' என்று பெருமைப் பட் டுக் கொள்கிறது காஞ்சி மடம்.

இந்திரனோடு ஒப்பிட்டுப் பார்த் தால் ராவணனை ஒழுக்கமானவன் என்று கூடச் சொல்லிவிடலாம். சீதை மீது மோகம் கொண்ட ராவணன் அவள் மீது தன் நிழல் கூடப் படாமல் பார்த்துக் கொண்டான். ராவணனின் முறையற்ற காதலுக்கு மரணதண்டனை வழங்கியது பார்ப்பனியம்.

***பார்ப்பனிய ஒழுக்கம் என்பது, அடுத்தவர்களின் ஒழுக்கமின்மையைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் தம்மை ஒழுக்கமானவர் களாகச் சித்தரித்துக் கொள்வது; ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதல்ல. பார்ப்பனியத்தின் இந்த மோசடி அவர்களின் இதிகாச, புராணப் புளுகு களிலிருந்தே தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.***

தினத்தந்தியின் மொழியில் சொல் வதானால் 'உல்லாசமாக இருந்தபோது கையும் களவுமாகப் பிடிபட்டார்கள்' என்கிற பாணியில் வாழ்ந்த இந்திரனின் முறையற்ற காமத்தை அங்கீகரிக்கிறது பார்ப்பனியம்.

இவைகளிலிருந்து பார்ப்பனியம் சொல்லுகிற நீதி, ''பார்ப்பானல்லாத ஒருவன் பார்ப்பானின் மனைவியை மனதால் நினைத்தாலும் அவனுக்கு மரண தண்டனை. ஆனால் ஒரு பார்ப் பான் அடுத்தவர்கள் மனைவிகளோடு உறவு வைத்துக் கொண்டாலும், அது தண்டனைக்குரிய குற்றமல்ல.'' இது தான் பார்ப்பனிய தர்மம். ஒழுக்கம். இதைத்தான் பார்ப்பனியப் பத்திரிக்கை களான தினமலர், ஜூனியர் விகடன், துக்ளக் போன்றவை முதலாளித்துவ வடிவத்தில் மக்களுக்கு வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றன.

●●●

**ச**ரவணபவன் ராஜகோபாலின் காதலைக் கண்டறிந்து 'அவர் கொலை செய்தார்' என்பதைத் துப்பறிந்து வெளி யிட்ட பெருமை தினமலர், ஜூனியர் விகடனையே சேரும். தனக்கு 'விளம்ப ரம் தருகிற பார்ட்டி' என்கிற சமரசம் இல்லாமல் உண்மையைத் துப்பறிந்து உலகுக்குச் சொன்னார்கள். (அண்ணாச் சியோ தினகரன், தினத்தந்தி, நக்கீரன் போன்ற பத்திரிக்கைகளை விட 'அவாள்' பத்திரிக்கைகளில் விளம்பரம் செய்வதில்தான் ஆர்வம் காட்டுவார். அது அவரின் சைவத் தொழிலின் ரகசி யம். தனிப்பட்ட லாபத்திற்காகவே பல பேர் பார்ப்பன அடிமையாக இருப்ப தின் ரகசியமும் அதுவே. இதில் புது வரவு 'தேவி' வார இதழ்.)

ஆனால், 'ஜகத்குரு ஒரு ஆளை ஜகத்தை விட்டே அனுப்பிவிட்டார்' என்பதை 'நக்கீரன்' துப்பறிந்து தொடர்ந்து எழுதியபோதும் கூட ஜூனி யர் விகடன் 'துப்புக் கெட்டு'க் கிடந்தது. பிறகு லோக குரு கைதாகி லோல்பட ஆரம்பித்த பிறகே வேறு வழியில்லா மல் 'கடவுள்' செய்த கொலையைப் பற்றி செய்திகள் வெளியிடத் தொடங்கி யது.

அந்தச் செய்திகளை அது இப்படி வரையறுத்துக் கொண்டு வெளியிடுகி றது. 'ஜெயேந்திரன் கொலை வழக்கில் சிக்கி இருப்பதற்குக் காரணம் அவர் கொலை செய்ததால் அல்ல, சங்கர மடத் தின் கோஷ்டி தகராறால்' என்கிற பின் னணியில்.

இதில் ஜூனியர் விகடன் ஜெயேந் திரன் கோஷ்டி. (இந்து என்.ராம், டி.என். சேஷன் போன்றோர் விஜயேந் திரன் கோஷ்டி.) இந்தக் கொலையில் ஜெயேந்திரனின் பங்கை அரசல் புரச லாக எழுதும் போது கூட, 'வாசகர்க ளுக்கு ஜெயேந்திரன் மீது அனுதா பத்தை உண்டு பண்ணுவதுபோல் எழுத வேண்டும்' என்பது விகடன் ஆசிரியர் குழுவிற்கு, ஆசிரியர் இட்ட கட்டளை போலும்! இதோ கழுகார் சொல்லுகி றார்:

**''ஜெயேந்திரர் அணி, விஜயேந்தி ரர் அணி என்று இரண்டு கோஷ் டிகள் எதிரும் புதிருமாக கோலோச்சி வந்த கதை இது. இந்த அணிகள் பரஸ்பரம் குழி**


படிப்பகம்

www.padippakam.com

பறிப்பு வேலையிலேயே மூழ்கி இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இந்தக் குழி பறிப்பின் உச்சகட்டமாகத்தான் இன்று கொலை வழக்கு ரேஞ்சுக்கு அசிங்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள்.

'ஜெயேந்திரர் கைதாகி சிறை செல்ல வேண்டும். அதைத் தொடர்ந்து விஜயேந்திரர் எந்த தங்கு தடையும் இன்றி செயலாற்ற வேண்டும். தேவைப்பட்டால், ஆளும் அரசின் விருப்பங்களையும் சிக்கலில்லாமல் பூர்த்தி செய்ய வேண்டும். அந்த எண்ணத்தின் அடிப்படையில்தான் கைது நடவடிக்கை கனகச்சிதமாக அரங்கேற்றப்பட்டது' என்கிறார்கள் இந்த சிலர்!''

— இதுதான் ஜெயேந்திரன் வழக்கை ஜூனியர் விகடன் துப்பறியும் பாணி, சீனியர் விகடனும் இதே பாணிதான். அதுதான் ஆளையே மாத்திடும் (பைத்தியக்காரனா மாத்திடும்) ஆனந்த விகடன்! உதாரணத்திற்கு ஆ.வி.யில் இருந்து ஒருசில பிட்டுக்கள்:

''ஜெயேந்திரரின் ஜாதகக் கட்டங்களைப் புரட்டிப் பார்த்த விசுவாசிகள், புது விஷயம் சொல்கிறார்கள். 'பெரியவாளுக்கு எட்டுல சனி, டிசம்பர் 20-ஆம் தேதிக்கு மேல் கஷ்டமெல்லாம் பனியாப் பறந்துடும். அவரை இந்தப் பாடு படுத்தறவாளுக்கு வர்ற ஜனவரியிலிருந்து கஷ்ட தசை ஆரம்பம். இன்றையநிலைமை புது வருஷத்தில் அப்படியே தலைகீழாகும்' என்கிறார்கள்.

இது எப்படி இருக்கு?

இந்தப் பாணியிலேயே எழுதிகிட்டே வந்து, இன்னும் கொஞ்ச நாளில் 'சங்கரராமனை ஆள் வைத்துக் கொன்னது அவரு சம்சாரம்தான்'னு எழுதினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏன்னா, அதான் ஆளையே மாத்தற ஆனந்த விகடனாச்சே!



பெரிய கிரிமினலுக்கு சின்ன கிரிமினலின் பாதபூசை!

●●●

ஜெயா டி.வி.யிலே 'அரி-கிரி அசெம்பிளி'ன்னு ஒரு அநாகரிகமான நிகழ்ச்சியைப் பார்த்து இருப்பீர்கள். அந்த அநாகரிகமான நிகழ்ச்சியிலே ரெண்டு பைத்தியங்கள் நிகழ்ச்சி நடத்தியதையும் கவனித்திருப்பீர்கள். அதுல ஒண்ணு மொட்டை அடிச்சிக்கிட்டு இருக்கும். அது பேரு பாஸ்கி. இந்தப் பைத்தியம் ஆனந்தவிகடனில் சோகமான மனநிலையோட ஒரு நகைச்சுவைப் பக்கம் எழுதியிருக்கு. இதோ அது செய்த 'ஜாலி கற்பனை':

'போலீஸ் விசாரணை' என்கிற பேரில் ஜெயேந்திரர் மீது கேஸ் மேல் கேஸ் அடுக்கிக் கொண்டே போகிறார்கள்! போகிற போக்கைப் பார்த்தால், இனிமேல் கீழேவரும் கேஸ்களில் கூட அவரைச் சந்தேகப்படுவார்களோ, என்னவோ?!

மடத்துக்குத் தேவையான சந்தன சப்ளையில் வீரப்பன் மோசடி செய்ததால் ஆத்திரமடைந்த ஜெயேந்திரர், வீரப்பனைத் தீர்த்துக் கட்டிவிட்டார் என்கிறது எஸ்.டி.எஃப் போலீஸ்!

'ராஜீவ் காந்தியைக் கொன்ற தற்கொலைப் படைப் பெண்மணி தனுவின் கையில் இருந்த பூமாலைகூட ஜெயேந்திரர் வழக்கமாகப் பூ வாங்கும் பூக்காரி தொடுத்ததோ?' என்று போலீசார் சந்தேகப்படுகிறார்கள்.

இவை தவிர மகாத்மா காந்தி, ஆப்ரஹாம் லிங்கன், கென்னடி போன்றோர் கொல்லப்பட்ட வழக்குகளில் கூட ஜெயேந்திரருக்குத் தொடர்பு இருக்கக் கூடும் என்று இன்டர்போல் ஆராய்ந்து வருவதாகக் கேள்வி!

இது நகைச்சுவையாம்! இதைப்படிக்கிற சங்கரமட பக்தருக்கு ஜெயேந்திரன் மீது பரிதாப உணர்வு வரும். நமக்கு கோபம் வருகிறது. இந்த எழுத்தை அது 'ஜாலியாக கற்பனை' செய்ததாம். இந்த ஜாலியில் பாஸ்கியின் ரத்தக் கண்ணீர் தெரிகிறது.

சிலர் சிரிப்பார், சிலர் அழுவார், ஆனால் இவர் சிரித்துக் கொண்டே அழுகின்றார்.

இந்தக் காரியப் பைத்தியம்

## 'அக்கிரகாரத்து அழகிகள்'

பார்ப்பனியம் மற்ற சாதிக்காரர்களுக்குச் செய்த தீங்கை விடவும் தன் சொந்தச் சாதிப் பெண்களுக்குச் செய்த தீங்கு சொல்லித் தீராது. விதவைகளை அவமானப்படுத்தி, கொடுமைப்படுத்தி, உயிரோடு கொளுத்தியிருக்கிறது பார்ப்பனியம். கங்கை நதியின் வற்றாத தன்மைக்குக் காரணம், அதில் தள்ளிக் கொலை செய்யப்பட்ட பார்ப்பன விதவைப் பெண்களின் கண்ணீரே என்றாலும் மிகையாகாது.

சிறுமிகளை கிழட்டுப் பார்ப்பானுக்கு மணம் முடித்துக் கொடுமைப்படுத்தியது பார்ப்பனியம். பார்ப்பனத் திருமணங்களில் பெண்ணை தந்தை தன் மடியில் உட்கார வைத்துத் 'தாரை வார்த்துக் கொடுப்பது' பால்ய விவாகத்தின் மிச்ச சொச்ச பழக்கம்தான். சிறுமி மணமேடையில் அமராமல் விளையாட்டுத்தனமாக எழுந்து ஓடி விடாமல் தடுக்க, தந்தை மடியில் உட்கார வைத்துப் பிடித்துக் கொண்டதனால் ஏற்பட்ட பழக்கம் அது.

'ஆணுக்குப் பெண் மட்டமில்லை'யென்று பார்ப்பனப் பெண்கள் கருதலாம். உண்மையும் அதுதான். அவர்கள் பிரதமர் பதவியில் கூட அமர முடியும், ஆனால் சங்கராச்சாரியாக முடியாது. ஏன் சங்கர மடத்தில் ஒரு குமாஸ்தா வேலை பார்ப்பதற்குக் கூட அவர்களுக்கு அனுமதி கிடையாது. ''வேலைக்குப் போகும் பெண்களெல்லாம் ஒழுக்கம் கெட்டவர்கள்'' என்பது ஜெயேந்திரனின் 'அருள் வாக்கு'. பார்ப்பனியம் என்பது மற்ற சாதியினரை மட்டுமின்றி பார்ப்பனப் பெண்களையும் கொடூரமாக ஒடுக்கி வந்திருக்கிறது. இந்தக் கணம் வரை இது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. சுயமரியாதை உள்ள எந்தப் பெண்ணும், பார்ப்பனியத்திற்கு எதிரானவராகத்தான் இருப்பார். இருக்க வேண்டும். இதற்கு மேலும் பார்ப்பனப் பெண்கள் ஜெயேந்திரனுக்காக உண்ணாவிரதமிருந்தால், அவர்களை 'அக்கிரகாரத்து அழகிகள்' என்றுதான் அழைக்க வேண்டி வரும்.

— வே. மதிமாறன்

www.padippakam.com

பாஸ்கி வேறு யாரும் அல்ல. தலைவர் ஸ்டாலினைப் பற்றி கேவலமாக எழுதிய, நம்ம 'கக்கா' மதன், அதான் 'ஆய்' மதன் - இவருக்கு அத்திம்பேர்!

●●●

**மொ**ட்டைத்தலை என்றவுடன் தான் 'சோ'வின் யோக்யதை ஞாபகத்திற்கு வருகிறது. ஜெயேந்திரன் கைதில் 'சோ' என்ன சொல்லியிருப்பார்? அவர் எதுவும் சொல்லாமல் இருந்தாலே 'அவர் கருத்து இதுவாகத்தான் இருக்கும்' என்பது முன் முடிவான ஒன்று. கழுதை வாய்திறந்தால் குயில் போலவா கூவும்?

ஆனாலும், துக்ளக்கைப் படிக்கும் போதுதான் ஜெயேந்திரன் கைதில் இன்னொரு மகிழ்ச்சியான சம்பவம் நடந்திருப்பது தெரியவருகிறது. அதாவது 'சோ'வுக்கு பைத்தியம் பிடித்திருப்பது.

சங்கரமடம் அவரின் உயிராக இருக்கிறது. இப்படி ஒரு கைது நடந்திருப்பதைத் தாங்கிக் கொள்ளும் சக்தி சோவுக்கில்லை. பதட்டத்தோடு இருக்கிறார். பதட்டத்திலும் அவர் கருணாநிதியை வசைபாடுவதை, பெரியார் கொள்கைகளை திட்டித் தீர்ப்பதை நிறுத்தவில்லை. (பார்ப்பான் பைத்தியக்கார நிலையில் இருந்தாலும் பெரியாரைத் திட்டுவதில் மட்டும் தெளிவு இருக்கும் போல.)

ஜெயேந்திரனைக் கைது செய்தது ஜெயலலிதா. சோ திட்டுவது கருணாநிதியை. (சோ-விற்கு கடா பல்லில் வலி வந்தால் கூட கருணாநிதி சிரித்து சந்தோசமாக இருக்கிறார், அதனால்தான் எனக்குப் பல் வலிக்கிறது என்பார் போலும்.)

'ஜெயேந்திரன் கொலை செய்திருக்கமாட்டார்' என்று உறுதியாக நம்புகிறார். ஆனாலும் 'அரசு ஆதாரமில்லாமல் கைது செய்திருக்காது' என்றும் மிரளுகிறார். சோ குழம்புகிற குழப்பத்தில் அவர் மொட்டைத் தலையில் 'மயிரே' முளைத்து விடும்போல் தெரிகிறது. அதனாலேயோ என்னவோ அவரின் 'கேள்வி - பதில்' பகுதி வழக்கத்தைவிட அருவெறுக்கத்தக்க நிலையில் கேவலமாக இருக்கிறது.

வி.எஸ். கவிதா மீனா,
செட்டிப்புலம்

*கே: ஜெயேந்திரரை, சங்கரராமன் தொடர்ந்து ப்ளாக் மெயில் செய்து மிரட்டிக் கொண்டே இருந்திருக்கிறாரே! அது குற்றமில்லையா?*

**ப: பத்திரிகைச் செய்திகளை வைத்துப் பார்க்கிறபோது, சங்கரராமன் செய்தது 'கிரிமினல் இன்டிமிடேஷன்' என்கிற குற்றத்திற்கான பிரிவின் கீழ் வரக்கூடிய தன்மை படைத்த செயல் என்று கூறலாம். இதைத் தவிர, வேறு பெயரில் மறைந்து கொண்டு, சம்பந்தப்பட்ட கடிதங்களில் சிலவற்றை எழுதியதால், அது தனிப் பிரிவின் கீழ் வரும். இரண்டுமே குற்றங்கள். ஒவ்வொரு குற்றத்திற்கும், இரண்டாண்டு காலம் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் விதிக்கலாம். ஆனால் சங்கரராமன் உயிருடன் இல்லாத போது, இது சட்டத்தை அறிந்து கொள்கிற சமாச்சாரமே தவிர, நடவடிக்கை கேட்கிற கோரிக்கை அல்ல.**

கொலை செஞ்சதுக்கு என்னய்யா தண்டனைன்னு கேட்டா, இவரு ப்ளாக் மெயிலுக்கான தண்டனையைப் பத்தி எழுதுறாரு. அப்போ சங்கரராமன் என்ன தற்கொலையா செஞ்சிக்கிட்டாரு? சோவின் இந்த வக்கிரத்தைப் படிக்கும்போது நமக்கு ஒன்று ஞாபகம் வருகிறது. ஒரு திரைப்படத்தில் சிவாஜி, சோவைப் பார்த்துப் பாடுவார், ***"போட்டாளே, போட்டாளே உன்னையும் ஒருத்தி பெத்துப் போட்டாளே"*** என்று. இந்தப் பாடல் சோவின் கதாபாத்திரத்தைப் பார்த்துப் பாடிய பாடலாகத் தெரியவில்லை.

ஜெயேந்திரன் கம்பி எண்ணுகிறார்; சோ பைத்தியக்காரனாகி இருக்கிறார். மக்கள் கை கொட்டிச் சிரித்து மகிழ்கிறார்கள். ஒரு சம்பவம் எல்லோருக்கும் ஒரே மாதிரியான உணர்வை ஏற்படுத்துவதில்லை. சிலர் உளறுவார், பலர் மகிழ்வார்.

●●●

**க**டைசியாக ஒன்று:

பக்தர்கள் ஜெயேந்திரனை நம்ப வேண்டாத நேரத்தில் நம்பினார்கள். நம்ப வேண்டிய நேரத்தில் நம்ப மறுக்கிறார்கள். ஜெயேந்திரனை நாம் எப்போதுமே நம்பியதில்லை. ஆனால் இப்போது நம்புகிறோம். அவர் இந்தக் கொலையைச் செய்திருப்பார். இன்னும் இதற்கு மேலே பல கிரிமினல் வேலைகளையும் செய்திருப்பார். ●

## கடற்சீற்றம் காவுகொண்ட மக்களுக்குத் துணை நிற்போம்!

அன்பார்ந்த வாசகர்களே,

பேரழிவின் கோரவிளைவைத் தனியே எதிர்கொள்ள முடியாமல் தவிக்கும் மக்களுக்கு அவசியமான நிவாரணத்தை வழங்குவதும் ஆறுதல் கூறுவதும், புறக்கணித்து ஒதுக்கும் இந்த இரக்கமற்ற அரசுக்கெதிரான போராட்டத்தில் அவர்களுடன் தோளோடு தோள் நிற்பதும் நம் ஒவ்வொருவரின் கடமை. 26.12.04 மாலை முதல் சென்னை-பட்டினப்பாக்கம், கடலூர், நாகை, திருவாரூர், சீர்காழி, குளச்சல் பகுதிகளில் நாங்களும், மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தைச் சேர்ந்த செயல்வீரர்களும் பணியாற்றி வருகிறோம். இந்தப் பணியில் எம்மோடு துணை நிற்கவும், நிதி உதவி செய்யவும் விழையும் வாசகர்கள் கீழ்க்கண்ட முகவரிகளில் எம்மைத் தொடர்பு கொள்ளக் கோருகிறோம்.

இரா. சீனிவாசன், எண்: 4, 5-வது தெரு, செகந்நாதபுரம், சேத்துப்பட்டு, சென்னை - 34. ✆: 2836 0344.

அ. முகுந்தன், 63, என்.எஸ்.கே. சாலை, கடை எண்: 110, 2-வது மாடி, கார்ப்பரேசன் வணிக வளாகம், கோடம்பாக்கம், சென்னை-24. ✆: 9841161822

புதிய கலாச்சாரம், 16, முல்லைநகர் வணிக வளாகம், 2-ஆவது நிழற்சாலை, 15-ஆவது தெரு அருகில், அசோக் நகர், சென்னை - 83. ✆: 2371 8706

**ம.க.இ.க.–வி.வி.மு.–பு.மா.இ.மு.–பு.ஜ.தொ.மு.**

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு...

**இந்த இதழுடன் (ஜன'05) முடியும் சந்தா எண்கள்:**

**3,176,178,186,248,261,361,362,376,435,414,417,442,469,473, 479,571,707,813,814,815,816,817,829,830,832,834,837,841, 842,845,846,847**

**அடுத்த இதழுடன் (பிப்'05) முடியும் சந்தா எண்கள்:**

**30,194, 371, 484, 751, 838, 839, 844, 848, 856, 858, 860, 861, 863, 864, 865, 866, 869, 1129**


படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

டுமெனில், ஜெயேந்திரர் இப்போதே அதைச் செய்யவில்லையா? என்ன, தற்போது பெண்கள் தொடர்பில் பார்ப்பனப் பெண்கள் மட்டுமே இருக்கிறார்கள், இதில் ஏனைய சாதிப் பெண்களையும் சேர்க்கச் சொல்லி கேட்க வேண்டுமா?

12. வேத காலந்தொட்டு இன்றைய சங்க - பரிவார காலம் வரை பார்ப்பனியம் தனது அடிப்படைக் கொள்கைகளைக் கைவிடாமலே பார்ப்பன எதிர் மரபுகளை உள்வாங்கியும், அழித்தும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டுதானே வருகிறது? சங்கரமடத்தின் பன்முக நடவடிக்கைகளும் இந்தப் பரிணாமத்தில் வளர்ந்தவைதானே?

13. பார்ப்பனியத்தின் வருண - சாதி எனும் மக்கள் விரோத தர்மத்தைக் கைவிடாமலேயே, சங்கர மடம் தனது நிழல்உலக, அரசியல் தொடர்புகளைக் கைவிட்டு எளிய உண்மையான சமய அமைப்பாக மாறவேண்டும் என்று கூறும் கல்கி - குருமூர்த்தி - காலச்சுவடு ஆகிய மூவருக்கும் உள்ள தொப்புள் கொடி உறவென்ன?

14. ஜெயேந்திரர் கைது மூலம் பிராமண - பிராமணரல்லாத இந்துக்களைப் பிளவுபடுத்த சதி நடக்கிறது என்று ஆர்.எஸ்.எஸ். கூறுவதற்கும், சங்கர மடம் குறிப்பிட்ட சாதி சம்பிரதாய வட்டத்தைத் தாண்டி பரவலான அளவில் சமூகத்தின் நன்மதிப்பைப் பெற முடியும் என்று காலச்சுவடு கூறுவதற்கும், ஆறு வேண்டாம், ஒரே ஒரு வித்தியாசத்தையாவது காட்ட முடியுமா?

15. வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் தற்போது ஓரளவும் எதிர்காலத்தில் முழுவதுமாகவும் வீசப்பட இருக்கின்ற சங்கரமடத்தை அருங்காட்சியகத்தில் வைத்து (அதுவும் தொன்மையற்ற 160 ஆண்டு புரோக்கர் தொழில் செய்து வந்த மடம்) அழகு பார்க்க நினைப்பதை காலச்சுவடின் அழகியல் கோட்பாடு என்று கொள்ளலாமா?

*பின்குறிப்பு:*

**இவ்விடத்து நோட்டீஸ் கண்ட 60 தினங்களுக்குள் கலையுலக பிரம்ம ஸ்ரீ காலச்சுவடு கம்பெனியார் உரிய ஆன் சரை அனுப்பாத பக்ஷத்தில் ''பிராமணியத்தின் லேட்டஸ்ட் சாஹித்ய பத்ரிகா'' என்ற எமது விருதினை எவ்வித ஆக்ஷேபணையோ எதிர்வாதமோ இன்றி அவாளே ஸ்வீகரித்துக் கொண்டதாக ப்ரகடனம் செய்யப்படுகிறது.**

● இளநம்பி

# அக்கிரகாரம் ஆன்லைன்!

**ஜெகத்குரு கைது என்றால் ஜெகம் முழுதும் பொய்ப்பிரச்சாரம் செய்ய வேண்டாமா? உலகெங்கிலும் (குறிப்பாக அமெரிக்காவில்) குடியேறியுள்ள ஆர்.எஸ்.எஸ். அம்பிகள், இணையத் தளங்கள், மின்னஞ்சல், சாட்ரூம் போன்ற எல்லா வடிவங்களையும் பயன்படுத்தி நடத்தி வரும் பொய்ப் பிரச்சாரத்திற்கு சில சான்றுகளைக் கீழே தருகிறோம். இது அக்கிரகாரத்திற்குள் அவாள் பேசிக் கொள்வதற்கு இணையானது. இதையே எல்லாத் தமிழ் வாசகர்களுக்கும் ஏற்ப கொஞ்சம் பாலிஷ் செய்து கொடுத்தால் அதுதான் தினமலர், ஜூ.வி!**

ஸ்ரீ ஜெயேந்திர ஸரஸ்வதி அவர்களை போலீசு அதிகாரிகள் திரும்பத் திரும்ப அடித்தே ஒப்புதல் வாக்கு மூலம் வாங்கியிருக்கிறார்கள். அவர் 3 நாளாகச் சாப்பிடவேயில்லை. உயர் போலீசு அதிகாரிகள் அவரைக் கறி தின்னச் சொல்லி கட்டாயப்படுத்தியிருக்கிறார்கள் - இது வேலூர்ச் சிறையில் உள்ள பக்தியுணர்வுள்ள ஒரு போலீசுகாரர் நமக்கு தெரிவித்த தகவல். ஸ்வாமிகளைக் கையாள்பவர்களில் பெரும்பான்மையினர் கிறித்தவ அதிகாரிகள். இந்தத் தகவலை வேலூர்ச்சிறை வாசலிலிருந்து இ.மெயில் அனுப்புகிறேன். இது உண்மை. அவசரம். ஸ்வாமிகளை மீட்க ஏதாவது செய்யுங்கள்!

***ஹிந்துஸிதா, சீனியர் மெம்பர்***
***காலை 11.38, 15.11.2004***

கறி தின்ன வைக்கிறார்களா? மனித உரிமைக் கவுன்சில் எங்கே? மீடியா அங்கே என்ன செய்கிறது? எல்லோரும் ரம்ஜான் கொண்டாட்டத்தை எழுதிக் கொண்டிருக்கிறார்களா? நடப்பது முகலாயர் ஆட்சியா?

***யோதா விக்ரமாதித்யா, 15/11/2004***

**உயர்நீதி மன்றத்தில் நடந்த மோதல் பற்றி:**

பிராமணர்களைக் கொல்லப் போகிறார்கள் என்று நான் சொன்னபோது பலர் கேலி செய்தீர்கள். இதோ, உயர் நீதி மன்ற விசாரணையைப் பார்க்கப் போன பிராமணப் புரோகிதர்களைக் கொலை செய்ய முயன்றிருக்கிறார்கள் திராவிடக் கட்சிக்காரர்கள். இவர்களுக்கு என்னதான் வேண்டும்? வேண்டிய அளவு பிராமணர்களைக் கொல்லட்டும். பிராமணப் பெண்களைக் கற்பழிக்கட்டும். வேறு என்ன செய்துவிடப் போகிறார்கள்?

ஜனாதிபதி அவர்களே, நீங்கள் சிறந்த விஞ்ஞானி. ஆனால் உங்கள் இதயம் வேலை செய்யவில்லையா? சநாதன தருமத்தின் சிறகுகள் தீப்பிடித்து எரிகின்றன. நீங்கள் அக்கினிச் சிறகுகள் தந்த புகழ் மேல் ஒய்யாரமாக உட்கார்ந்திருக்கிறீர்களா? இதுவரை நீங்கள் ஒரு அறிக்கை கூட விடவில்லை. வெட்கமாக இல்லையா? பதவி மேலே அவ்வளவு ஆசையா? ஒரு முசுலீம் பயங்கரவாதி கையால் தான் உங்களுக்குச் சாவு!

***சனாதன்***

**பக்தர்களின் குரல்!**

பெரியவாள் கைதானதிலிருந்து கடந்த 3 வாரமாக என் குடும்பமே தூங்கவில்லை. நாஸ்ட்ரடாமஸ் இதைப் பற்றிச் சோதிடம் சொல்லியிருக்கிறார். ''வெறுப்படைந்த பெண்ணின் மன உறுதி முனிவரைச் சிறை பிடிக்கும். பால் சார்ந்த உணவைச் சாப்பிடும் மக்களுடைய அழிவின் தொடக்கமிது. அவர்கள் வடக்கு நோக்கி விரட்டப்படுவார்கள்'' என்கிறார் நாஸ்ட்ரடாமஸ். ஜெயலலிதாவின் கோபம் - சுவாமிகள் கைது - தயிர்சாதம் சாப்பிடும் நம் கதி?

***ஆஷா***

தி.மு.க.காரர்கள் வெடிவெடித்துக் கொண்டாடியிருக்கிறார்கள். சங்கரராமனைக் கொன்றது போலவே தமிழ்நாட்டில் உள்ள எல்லா பிராமணர்களையும் கொல்ல வேண்டும் என்று பத்திரிக்கைக்குப் பேட்டியே கொடுக்கிறார்கள். தி.மு.க. ரவுடிகளுக்குப் பயந்து பிராமணர்கள் எல்லோரும் ஒளிந்து கொண்டிருக்கிறார்கள். இதுதான் காஞ்சிபுரத்தில் நிலைமை.

போன தேர்தலில் ஜெயா தோற்றார். இப்போது ஆட்சியில் இருப்பதற்கான தார்மீக உரிமையையும் இழந்து விட்டார். 356-ஐப் பயன்படுத்தி இந்த ஆட்சியை உடனே கலைக்க வேண்டும். கொடுங்கோல் ஆட்சியை ஒழித்து ஸ்வாமிகளின் புகழை மீட்க வேண்டும்.

***G. ஸ்ரீநிவாஸ், சிம்லா***

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.

PUTHIYA KALACHARAM
(Tamil Monthly)

REGISTERED WITH THE REGISTRAR OF
NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87

Regd. No: TN/PMG (CCR)/239/03-05

www.padippakam.com



# ஸ்ரீ மடம் அருளிச் செய்த
# திருப்பாவை

- மார்கழியும் நடுநடுங்கும்
  மதி இருண்டு கதிகலங்கும்
  கூர் வாளும் முனை மழுங்கும் - நம்
  ஜெயேந்திரன் பேர் சொன்னால்
  தூர்வாரும் கிணற்றைப் போல் துலங்கும் முகத்தானை
  போர்வாளால் ஏற்றிப் புகழ்ந்தேலோர் எம்பாவாய்!

- ஓங்கி ஒரேவெட்டில் மூளை வரும்படிக்கு
  தீங்கிழைத்த சலனத்தை முகத்தில் காட்டாமல்
  தீபாவளி நாளில் அருள்வாக்கு எளிதாமோ?
  வேலூர்ப்பதி பெம்மானை விதந்தோத மாட்டாமல்
  வீணே உறங்குவதோ வெளியில் வா எம்பாவாய்!

- ஆர் சொன்னாலென்ன? அனுராதா ரமணனென்ன?
  கார்வண்ணன் காலடியில் கோபிகையர் குவியலையோ!
  அம்பானி குலம்போற்றும் முந்தானை அணிவிளக்கை
  கம்பிக்குள் வைத்தாலும் கும்பி ஒளிருது பார்!
  துணையிலாப் பெண்குலத்தை தன்துணையாய்ப் பாவித்த
  இணையிலா வேதவித்தை விளங்காயோ எம்பாவாய்!

- அவுணர், பவுத்தர், நாத்திகர் மனைவியை
  அடியார் கற்பழிக்க அருள் கேட்டான் சம்பந்தன்
  ஆத்திகர் மனைவியர்க்கும் அருள்காட்டிக் கற்பழித்த
  கோத்திர நாயகனைக் கும்பிடடி எம்பாவாய்!

- மார்கழித் திங்கள் நாய்களுக்கே யுரியதென்று
  மதியிலார் கூறட்டும்; மங்கையே சொல் கேளாய்!
  மானமழிந்தால் மார்கழியும் குளிராதோ?
  ஈனத் தெருநாய்கள் இன்பம் துய்த்திருக்க
  ஞானம் சிறையினிலோ? ஞாயமென்ன எம்பாவாய்!

- மோரும் முகம்திரியும் கூறும் கதை கேட்டால்
  பாரும் வழக்கெல்லாம் மாறும் சருகாக!
  கறவை மடியில் கன்றும் பால் குடிக்குதய்யோ!
  உறவாடி உயர்ந்தோர் ஒரு பயலும் காணலியே!
  பாற்சோறு பிழைத்திருக்க, பசும்நெய் தப்பிக்க
  ஷேர்போட்ட சீவன்கள் ஜெயில்முன்னே பரிதவிக்க
  என்ன இது எம் பிரபு? எப்பொழுது உன் வரவு?
  சிறியோர் செய்வினையால் சீறி அருளாதே
  உரியோர் விடமாட்டோம் ஒலித்திடடி எம்பாவாய்!

( 'பெரியவாள்' விடுதலைக்கு 'பக்தர்களை' தினமும் திருப்பாவை பாடச்சொல்லும் தென்னிந்திய புரோகிதர் நலச் சங்கத்திற்கு ஹ்ருதய ஸுத்தியுடன் ஸமர்ப்பணம் செய்யப்பட்டது.)

• துரை. சண்முகம்

படிப்பகம்